உ

ஸ்ரீஸற்குருவேநமஃ

ஸ்ரீகைலாயவர்க்கத்தாதி

# சட்டமுனிநாயனர்

திருவாய்மலர்ந்தருளிய

# நிகண்டு - ௲௨௱.

இஃது

சிதம்பரம்

கருணானந்த சுவாமிகளால்

பார்வையிடப் பட்டுச்

சிந்தாதிரிப் பேட்டை

நாராயணசாமி முதலியார்

அண்டுஸன் அவர்களது

பிரபாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப் பட்டது.

1896 ௵

உ

ஸ்ரீஸற்குருவேநம.

# சட்டமுனிநிகண்டு.

## ௨௱.

காப்பு.

ஆதியந்தமிலாதபூரணத்தைநோக்கி
　　ஆடுகின்றவுன்மனத்தாள்பதத்தைப்போற்றி
பாதியங்கமாகிநின்றவுமையாள்சொல்ல
　　பாங்கானசின்மயத்தின்கருணைபாலே
ஓதியங்கவாதமென்றநூலுக்கெல்லாம்
　　உயர்த்திவைத்தநாகமணிக்கிரீடம்போலச்
சாதியந்தகுணத்தோடு நிகண்டுசொல்லச்
　　சச்சிதானந்தவெளிகாப்புத்தானே. (௧)

பாயிரம்.

(சவுக்காரம எண்ணெய்வாங்க.)

எட்டெட்டாமாயிலுள்ளநாதாக்கள்சொன்ன
　　மியல்பானவகாரத்தில் வழலைமார்க்கம்
ஒட்டொட்டாய்மறைத்துவைத்தார்வாதமூலம்
　　ஓகோகோவழலையில்லா வாதமபோச்சு
கெட்டொட்டாய்ப்போகாமல் நிகண்டுசொல்வேன்
　　நேராகஎண்ணெய்க்கச்சுண்ணாம்பில்வைத்து
மட்டொட்டாய்நீவாரு அன்பத்தஞ்சு
　　வாருதிபோலெண்ணெய்க்கிசிகதியாமே (௨)

வெடியுப்பு-செயநீர்.

சுத்திக்கு வழலைக்குக்கவசங்கேளு
　　சொல்லுகிறேன்வெடியுப்பு லமோப
மந்திக்குசாரமொன்று சீனமொன்று
　　வாகாகப்புளிபத்துக் கூடக்கூட்டு
ஒத்திக்குபிடித்துகனாருப் கொளுந்தி

வுருதியாய்வெடியுப்புசுன்னமாச்சு
பத்தித்துப்பனியில்வைக்கச்செயநீராகும்
பாங்கானசீனத்திலினனீர்வாரே. (௫)

## சீனச்சுன்னம்.

வாத்துடனேகொதித்துவெந்து சுண்ணும்டாகும்
வாகானவெண்கருவால் வழலைக்கப்பி
காத்துடனே வெயிலில்வைக்கவுள் ளெண்ணெய்கக்குங்
கைமுறையாய்ச்சுண்ணம்புப்பொடியில்வைத்து
தோத்துடனேதீயெரிக்கச் சாமமொன்று
துடியானயெண் ணெய்கக்கக் கருப்பாய்நிற்கும்
மாத்துடனேயிதைசக்கருவா லரைத்துக்கட்டி
வாகானசுன்னத்திற்புடத்தைப்போடே. (௬)

## சவுக்காரசுன்னம்.

போட்டபின்புவெளுப்பாகுமப்பாகேளு
புகழானகடுங்கார மேத்திரனாய்
கூட்டபின்புதோறுமண்டரண்ட மெல்லாங்
குறுக்கிவிக்கும்நீட்டிவிக்குங்குறையொன்றில்லை
ஆட்டபின்புவாதமென்ற யெண்ணெய்த்தொட்டு
அப்பனேவப்புமுத லெல்லாங்கட்டு
நீட்டபின்புவஸ்துவித்தைக் கிதுவேயாதி
நேராகயிதைவிட்டால் வாதம்போச்சே, (௭)

## சவுக்காரவழலையின்பெயர்

போச்சென்றுநூல்களெல்லாம்பொய்யாகாமல்
புகழாகசொல்லிவிட்டேன்நிகண்டுக்குள்ளே
ஆச்சென்றுஇதைத்தறிந்காலவனேவாதி
அறியாவிட்[illegible]லாசானை யடுத்துக்கேளு
மூச்சென்றவாதியைப்போல்வாதத்துக்கு
[illegible]முகிந்தவி[illegible]வழலை யென்பார் சொல்லார் சொல்லார்
[illegible]செ[illegible]ர்செல்லாமிகுலாச்சு
[illegible]லைப்பேணிக்கேளே. (௮)

பாயிர-முற்றிற்று.

கடவுள் துணை.

# சட்டமுனி நிகண்டு.

## நூல்.

(வழலையின் பெயர்.)

ஆகும்வழலையாதிபிறப்புகேள்
பாகுகல்லூஷரம்பகுந்தனற்சுன்னநீர்
வாகுகல்லுருப்பமருவியயெண்ணெயும்
போகுஜலத்தொடுபூசமுமைங்தே. (எ)

லவணகாரசாரம்-உறு-க்கு-விபரம்.)

அஞ்சுருப்பட்டவாதிலவணந்தான்
மிஞ்சியதீய்க்கு வெறுங்குகையாகிடும்
ஓஞ்சியருகியுறிஞ்சிடும்வாறது
நெஞ்சினில்நின்றுநிலேத்தவர்சித்தரே. (அ)

சித்தர்முறையுஞ்சிவன்சொன்னவாறும்
ஒத்தேவழலையுருப்படவுருப்பது
அத்தியேயெண்ணெய் அடவாய்ப்பறிக்க
கொத்தியகாரசாரலவணமே. (கூ)

லவணவழலைநலங்கியசிற்பரி
கவனக்குருமுறை கடுவெள்ளைச்சாறை
தவளைச்சதாசிவந்தனித்திடுவண்ணன்
மவனநற்காரம்மறைந்ததிப்படிக்கே. (ய)

படியானயீசன்பகர்ந்திட்டசிற்பரி
முடியாதவாதமுடிக்கின்றசங்கரன்
குடியானமூர்த்திகூரமைக்கருவால்
மடியாமற்றேரோட்டும்வாசகனுறவே (யக)

காமம்பலபலநாட்டினர் நூலுக்குள்
காமம்பலவாய்க்கலந்ததொழின்முறை

சோமன்ரவிவன்னிசொல்லுமிகற்குப்பேர்
ரோமம்பிறந்தவொளிபோல்வழலையே. (௧௨)

(காச்சுவழலையின்பெயர்.)

வழலைக்குநாமமவைகைவகைநூலினில்
விழலைக்கடந்தநேரொற்றவார்த்தைபோல்
தழலைக்கடக்கதனிக்கவெறும்பூப்போல்
உழலப்படுவோர்உலகத்துவாதியே, (௧௩)

(பூவழலையின்பெயர்.)

காச்சுவழலைக்குக்கருக்கேளுமென்னையை
மாச்சியேநீக்கிவளம்பெறவிண்ணடைசெய்
ஓச்சியேகாரமுருகவேஏற்றிடில்
ஆச்சியேகாமமறைந்திடக்கேளுமே. (௧௪)
கேளாக்குருமுறைகெடியானயேகாலி
நாலானதேணாநடத்தியவாசகன்
தோளச்சுடலையோன்சொலப்பெருஞ்சூலினில்
ஆளாச்சற்குருவந்தகனுமே, (௧௫)

தரணியினுகந்தனித்தபூநாதம்
கரணியபூனிறுகலந்திடுமொச்சி
உரணியபார்மதமுதகமபூச்சாரம்
அரணியவுஷாரமாதித்தனவெனேயே. (௧௬)
வெள்ளச்சவேகத்திவிளங்குஞ்சத்தி
கள்ளிச்சிபூநிகலந்தருத்திரிசசி
தெள்ளச்சிவெள்ளைச்சிறந்தவண்ணாக்கி
தள்ளிச்சியென்று சவடாகப்பொஙகுமே- (௧௭)

வழலை-முற்றிற்று.

---

(நவசாரத்தின்பெயர்.)

[illegible]வசித்தசா[illegible]மல்ம்புஞ்செலகூர்மை
[illegible]வசி[illegible]தக[illegible]பலோவாதியாமொன்பது
கவசித்[illegible]குரா[illegible]சிமேகநாதன்
[illegible]வசித்த[illegible]ருத்[illegible]னர்வாதராசனே. (௧௮)

வாதச்சிரோன்மணிவாகாமசுரன்றான்
போதச்செலக்குருபுகழ்வன்னிகதீயோன்
காதச்செயநீர்க்குக்காரணச்சித்தனும்
வேதைத்துருசிக்குமேற்குருவாகுமே (௰௯)

ஆகுமேநவச்சாரியாதிகடுஞ்சாரி
ஓருமேநற்சத்தியுக்தமசெங்கைதான்
தாகுமேவாதமச்சமைக்கின்றவாருதி
காருமேகாமினிகைகண்டசாரமே. (௨௰)

(சத்திசாரப்பெயர்,

சத்திவ்ளச்சிசாககசக்கிலிச்சி
முத்தியவரதச்சிமுனிச்சூதகண்டச்சி
அத்தியகாந்தாரியாகாப்பரைச்சி
பத்தியநாமம்பருஞ்சத்திசாரமே. (௨௧)

எவச்சாரப்பெயர்

எவச்சிநவச்சியினைசந்தகறுப்பச்சி
அவச்சித்திராளச்சிவதிசுட்டசாம்பச்சி
கவச்சிபுகைநிற்குங்காரணமாஞ்சத்தி
டவிச்சியெவட்சாரபபோக்கினிப்பேரே (௨௨)

(காசிசாரபபெயர்.

காசிலவணங்கடுங்குப்பிச்சார
ஓசிப்பரங்கியூட்டியகூர்மை
ஆசியவுப்புவளங்கத்துரைச்
வேசில்வணத்திமென்காசிச்சாரமே. (௨௩)

(ஏகம்பச்சாரப்.)

ஏகம்பச்சூலிநீயேற்றுங்கடுஞ்சாரி
வாகம்பச்சாரிமால்தங்கைமந்திரி
தாகம்பத்தாதுசத்துருநாமத்தி
போகம்பமந்திரிபுகழ்யேகக்காம்பியே. (௨௪)

(சீனக்காரப்பெயர்.)

சீனிப்படிகைசிறந்தவெணகாரிதான்
ஆணிப்பிடிச்சிபடங்காதவெள்ளைச்சி

பாணிக்குருச்சிபாங்கானவெண்பிலி
காணிவெணசுன்னத்திகடுஞ்சினப்பேரே (உரு)

(வெண்காரப்பெயர்)

காரிபொரிக்காரிகடும்பேதகமணி
நேரியுருக்கினம்நேர்ந்தமணிகாரம்
வாரியதூமத்தைமடக்கியசிற்பரி
காரியசந்தானிகரித்தகுடோரியே (உசு)

(சூடன்பெயர்)

தீபகொடிச்சிசிறந்தகதலிச்சி
மாபத்தரூபிமமத்தானதீககஞ்சி
தாபச்சுடர்க்கொடிதனிப்பள்ளிச்சூடனும்
ஆபத்தகேசரியாலாத்திப்பூரமே (உஎ)

(பச்சைக்கருப்பூரப்பெயர்)

பூரமதிதான்புகழ்வீசுஞ்சந்திரன்
ஆரம்பலகையடவரங்கதலிப்பு
ஊரங்கள்நீராக்கியுகையாவிக்கஞ்சிப்
பார்மகள்சாரிபச்சைக்கர்ப்பூரமே. (உஅ)

அமுரியுப்பப்பெயர்.)

மூலத்தின்சாரம்முழுங்கும்முறிதான்
கோலச்சடைநீர்குறிப்பானதீச்சலம்
ஆலச்சலக்கூர்மையாறியாம்வஸ்துப்பு
காலத்தனியுப்புகடுங்கூறலவணமே. (உகூ)

(கல்லுப்பு)

அறுசுவைக்காதியடங்காதவேலைநீர்
நெறிமுனிமூத்திரம்நேரானகூர்மை
கறுதறுவாதிதான்கடலிற்குருவிகேள்
தறுகியவாதத்தைச்சமைக்கின்றகல்லுப்பே. (கூ0)

(வெடியுப்பு.)

பொட்டிலுப்பூநாகம்பொருந்தும்படைராசன்
கட்டிலக்கப்பிகருவாமணங்கந்தான்

ஓட்டிலேத்திசுடர்வுறாபூமிகூர்மைதான்
மட்டிலாவேனைதவளர்க்கும்வெடியுப்பே. (௩௧)

(இந்துப்பு.)

சந்திரனுப்புசனித்தமதிகூர்மை
ஆந்திரவேலைபடக்கும்பனிமை
மந்திரம்போலேவளர்ங்கரவியுப்பு
இந்திரசாரமாம்இந்துப்பின்பேரே. (௩௨)

(விளையலுப்பு)

சுப்பிலவணம்கொடுமணற்கூர்மை
ஒப்பில்பலகையுருப்பட்டவீதய்லுப்பு
செப்பியகண்டகிசிறந்தகடுவுப்பு
வப்பியகயபாய்வளகிலவணமே (௩௩)

(சவுட்டுப்பு.)

சவுட்டுப்புகூர்மைதனிவுழச்சாரம்
அவுட்டுறுகூர்மைவந்தகச்சாரமாம்
தவுட்டுனுதடுப்பூததங்கநீர்க்காச்சுப்பு
கவுட்டுறுமேனிதானுஞ்சவுட்டுப்பே. (௩௪)

(திலபலவணம்-)

போக்குலவணம்பொருந்தியதிக்கூர்மை
வாக்குதிலாக்சாரமத்திமைகூர்மைதான்
தேக்குநலங்காருப்புசிறந்தகடுங்கூர்மை
காக்குங்கருவுப்புதடுந்திலாலவணமே. (௩௫)

(கெந்தலவணம்.)

மாறியகூர்மைநலத்தகடுங்கூர்மை
ஆறியநாக்கிலழகியகூர்மை
தேறியசித்திரிசிறப்பானவுப்பது
மூறியவைப்பாலமுதிர்கெந்திவுப்பிதே- (௩௬)

(பிடாலவணம்.)

சந்தானகூர்மைசங்கினீர்க்கூர்மை
பந்தானசாரணைபாச்சியமந்திரி

மந்தாரகாந்திவளங்காலவணங்கான்
பந்தாரமேலாகத்தைப்பறிப்பிடக்கூர்மையே. (௩௭)

(சித்துலவணம்)

சிறப்பாரவப்புசீனங்கடுங்கூர்மைகான்
கரப்பாலவணங்கந்துஞ்சிந்துச்சாரமாம
நறப்பாங்குணனில்நலப்பளிச்கூர்மை
தறப்பமவுப்பாருங்களிச்சிந்துலவணமே. (௩௮)

(காசிச்சாரம்.)

கருவென்றசாரங்காரமேகசாரங்கான்
திருவென்றசாரஞ்சிறப்பாக்குஞ்சாரம்
உருவென்றமேகமுறைஞ்சஞ்சாரங்கான்
பருவென்றவந்தசன்படுகாசிச்சாரமே. (௩௯)

(பொன்னம்பர்பெயர்.)

பட்சியிவெச்சபறைனவயினவச்சரம்
மெச்சியமச்சஞ்செறித்தமலக்கண்மந்
தட்சியராஜன்தனிச்சூராசகூதசன்
கட்சியவாசன்கடுபொன்னம்பரே (௪௰)

(மீனம்பர்பெயர்.)

மீன்மலமதியில்விளங்குமையிரங்கான்
கான்மலஞ்சிகபளித்கமச்சைகான்
தேன்மலச்செயமீனசிறங்கயிரங்கேள்
ஊனமலமென்றுவுணாத்தமீனம்பரே. (௪௧)

(அக்கினிகையின்பெயர்.

அக்கினிசாலமடவாருஞ்சிலக்கனல்
மக்கிபதிக்கட்டிவாருதிருஞ்சுகான
தக்கியதீய்ச்சலம்சாதவனையாம
சொக்கியமீனஞ்செலக்கடற்றீயென்னே. (௪௨)

(விருத்தம்.)

அப்பனேலவணமொடுகாச்சாரம்
அறிவரிகமேவயி பத்தைக்கதுகன்னே
ஒப்பினேனெவ்வொன்றுய்வெவ்வேறுப்பேறுப்

ஒருகோடிசாத்திரத்திற் புதைத்தார்சித்தர்
தப்பினேன் மறைப்பை யெல்லாம் விரித்துச்சொன்னே
சண்டாளவாதிக்குச் சொல்லவேண்டாம் [ன்
எப்பனேநிகண்டறிந்த வாதிமுன்னே
யெதிர்த்தாலும்சிவன்தோற்றுப்போவார்தாமே.

உபரசம்-௱௰-உ-ன்-பேர்விபரம்

(வேறு)

(துரிசன்பெயர்.)

பரசுபாணி பாங்காமனற்கண்டர்
துரிசுநலப்பாணி தனித்தசுட்லையோன்
நெரிசுனற்பச்சை நிறமூர்றநிட்களன்
அரசுகங்காளனுடையகூத்தனே. (௪௪)

கூற்றன்கொலையோன் குணனைவில்லாக்கினேன்
மாற்றுமால்மச்சினன் மந்தராகெங்கையோன்
காற்றன்கருமேகன் கடும்பல்லுக்கேற்றவன்
தோற்றன்குருநாதன் சொற்பெயர்துரிசியே (௪௫)

(பொன்னிமிளை.)

சத்திதன்னுதந் தனிக்கன்னிமாதகீர்
மூத்தியபொன்னிறமுயன் றமாக்ஷீகம்
அத்தியவம்பரை யாதிமகாநகம்
பத்தியகாமி பரிவானசத்தியே, (௪௬)

சத்திசடைச்சி சார்வானசிற்பரி
மத்தியவெள்ளைச்சி வழங்குங்கறுப்பிதான்
ஒத்தியநாகாந்தி யுருகுந்துரைச்சி
நத்தியகெந்தி நல்வனசலுமிளையே. (௪௭)

(அப்பிரகத்தின்பெயர்)

பூவிந்துகாகம் பொருந்துசெவுனந்தான்
மாவிந்துவம்பரம் மனோன்மனிநாதமாம்
தாவிந்துசேசரம்தனிப்பிரகாசத்தி
வீவிந்துசத்திக்கி லப்பிரகநாமமே (௪௮)

காந்தத்தின்பெயர்

சிவலோககேசவன் சேரிலயனுகன்
தவலோகசிவவன் தரணிக்குநாதமாம்
நவலோகவங்குசம் நலம்பெருசித்தனும்
புவலோகமெச்ச பொருந்தியகாந்தமே. (சகூ)

(கர்ப்பூரச்சிலையின்பெயர்.)

சிலத்திற்பிரிதிவி சேதசிலாசத்து
அலத்தியகற்குரு வீரத்தினுடனவிந்து
குலத்தின்சிலாமணி கூடியகாந்தியோன்
கலத்தியபேரெலாங் கற்பூரசத்துக்கே. (ருய)

(கல்நாரின் பெயர்)

கல்லுச்சவளைகடியசிலைநாரு
அல்லுச்சிலைவிந்து வருங்கல்லின்ஙாகாரமாம்
செல்லுஞ்சிலைரவி சிறுநாறுமல்லது
பல்லுத்தகல்நாரின் பாங்கானநாமமே. (ருக)

(சாஸ்திரப்பேதிப்பெயர்.)

ஆகுமலைநாதம்மங்கனல்வேதியாம்
பாகுமலைக்கருபாங்காகுஞ் செஞ்சிலை
தாகுஞ்செலக்கெந்திசலக்தோங்கல்லுயிர்
வேகுஞ்சகஸ்திரபேதியினமமே. (ருஉ)

கல்மதத்தின்பெயர்.)

மலையின் துடக்கு மலைநாதங்சுற்றிற்று
கலையுஞ்சிலாமதங் கடுஞ்சிலதூமை
நிலையுஞ்சிலரத்தம் நேரானநஞ்சுதான
உலையுங்கல்மதமா யொழுகியநாமமே. (ருங)

நீலாஞ்சனப் பெயர்

நீலச்சிலச்சூதம் நேர்கல்விநீயமாம்
கோலச்சூதாஞ்சனங்கொடிலோகஞ்சனம்
காலாச்சில்ாஞ்சனங் கடியகணஞ்சனம்
பாலக்குவட்டில் பாவுகல்லியமே. (ருச)

(கருங்கல்லின்பெயர்.)

இந்திரநீலமிசைந்தாகருஞ்சிலை
அந்திரமேகத்தருள்வர்ணநற்சிலை
தந்திரவிக்கிரகந்தாணுருச்சிலை
மந்திரசரக்கூலம்மருவுங்கருங்கல்லே. (௫௫)

(நீலப்படிக்கல்லின்பெயர்.)

நீலப்படிக்கல்நேர்ந்த செம்படிகமாம்
சேலொத்தவெண்கல்சிறந்தகச்சிவமாம்
மாலைப்படிகம்வழங்குமதிக்காந்தி
பாலைச்சிலையென்பார்படிக்கத்தின்பேரே. (௫௬)

(சுக்கான்கல்லின்பெயர்)

சொறிக்கல்லுவூர்க்கல்லுசூருஷரக்கல்லு
மறிக்கல்சமூறற்கல்மருவியசுணணக்கல்
பொறிக்கல்வங்கக்கல்புகழும்பூஷரக்கல்
நெறிக்கல்லென்றேத்துவார்நேர்சுக்கான்கல்லே

(ஈரக்கல்லின்பெயர்.)

மந்தாரக்கல்லு மாங்கிஷத்தின்சிலை
விந்தாரக்கல்லுவிளங்கியொத்தக்கல
கெந்தாரகோழிக்கல்குறுஞ்சிலைக்கல்லு
தந்தாரமானதனியீரக்கல்லுமே. (௫௮)

(இரசவர்த்தப்பெயர்.)

மண்ணினவத்தம்மலைமேகச்சொர்னக்கல்
பண்ணிநல்சித்தன்பரிவாதம்வந்தக்கல்
தண்ணினவர்தந்தணியார்பிரட்டுக்கல்
கண்ணின்ரசவர்த்தத்தின்பேரே. (௫௯)

(கெருடக்கல்லின்பெயர்)

விடத்துக்காசன் விளங்கும்விஷராஜன்
படத்துக்குக்கருடன் பாற்போலசிர்சேர்ந்தான்
நடத்துக்குநாயகன்நம்பட்சிராஜனும்
கெடத்துக்குக்கார்க்கோடாணகெருடக்கல்பேரே. (௬௰)

(ஓட்டின்பெயர்.)

பாண்டங்குசத்திபருகியசில்லுதான்
ஆண்டியமண்கலம்மறுகாங்குசக்கல்
நீண்டமண்ணோடுநேர்குலைச்சக்கிரம்
பூண்டசொல்லெல்லாம்புகழோட்டின்பேரிதே. (௬௧)

(செங்கல்லின் பெயர்)

செஞ்சிலைமண்கல் சிறந்தசெம்பலகை
ஒஞ்சியுருக்கல்லுவுயர் காளமாய்க்கல்லு
மஞ்சிலைகூளாக்கல் வனகோபுரக்கல்லு
அஞ்சிலையென்றுதானறை நாமஞ்செங்கல்லே. (௬௨)

(எலும்பின் பெயர்.)

செல்லியவஸ்தி சிறிபலங்கமாம்
மல்லிபவிலாக்கொடிமன்னுயிர்க்குறடுதான்
பல்லிடசந்துமர் பலவிலாத்தோரணம்
எல்லியகணையுடனு மெலும்பினமமே. (௬௩)

(மயிரின் பெயர்.)

கேசரோமங்கிளர்ந்தமசகந்தான்
ஆசரக்கம்பிளிவஸ்தியின் வேறுதான்
தேசாச்சிப்டஞ் சிகையுறுகூந்தல்தான்
மாசரக்கந்தம் மயிருடனபெயரே. (௬௪)

(நண்டின் பெயர்)

பத்துக்காலுடையான் பருந்தின்விருந்தாளன்
தத்துநரியுண்ணி தலையில்லாச்சேவகன்
கொத்துக்குறந்குளத்துக் குருவிதான்
நந்தியுள்ளைதான நண்டுடன்பெயரோ. (௬௫)

(நத்தையின் பெயர்.)

ஊமச்சிரமுரியூர்ந்திடும் நீர்க்காய்
நாமச்சிகல்லொட்டி நற்செலக்கூறுமாம்
ஓமச்சிவுள்ளுயிர்வுயர்ந்த நீர்க்குண்டுதான்
நாமச்சிகொம்பு தானத்தையின்பெயரோ, (௬௬)

(நாகணவண்டின்பெயர்.)

காணகச்சங்கங்காட்டிலுமுரிதான்
வானகப்பாம..க்குவாய்க்கிளாயாவோன்
பானகச்சங்குஞ்செடியில்குடிபுக்கி
வாணகநாகர்வண்டினின்பெ. யரே. (சுஎ)

(கிளிஞ்சிலின்பெயர்.)

உடல்லொண்டுயிரொன்றுமோடியமோடந்தான்
சடலேபட்சிசானசச்சிப்பிதான்
அடலெனத்துளிமேபாலாடுாவலசாரி
திடலேகுளத்தினில்கிளிஞ்சிலின்பெரரே. (சுஅ)

(ஆமையின்பெயர்.)

தஞ்சங்குருளோதனித்ததாமோதரன்
பஞ்சங்கக்கூர்லமபார்நீர்ப்பரிசைதான்
வஞ்சகமூடிமவுனசிலாயுதன்
பஞ்சங்கமாகப்பரவியகிரிமையே. (சுகூ)

(முட்டையின்பெயர்.)

ஊணமயறுவஞுயர்ந்தநீற்றுண்டைதான்
ஓமபவண்டமுறவானமுமமூர்த்தி
தாமயமஞ்சற்றனிவெள்ளையாங்கரு
காமயவிதனைதக்குனைகணடவணடமே. (எ௰)

(ஆனைக்கொம்பின் பெயர்)

வாரணக்கோடுமருவுங்கெசப்பிடி
காரணமானகரியடனகொமபுதான்
சேரணவானைசிறந்தந்தந்தமாம்
நாரணவானையினநம்கொம்பின்பேரே. (எக)

(பண்ணிக்கொம்பின் பெயா)

வராகத்தின்தந்தம்மலைவாசிககொம்புதாட்
நிராகாிமுகம்நேர்முறுதந்தமாம்
தராகத்தரணிதான்கிளைக்கொம்புதான்
பராகத்தின்சேவகனபாரபண்ணிக்கொம்மே. (எஉ)

(ஆட்டுக்கொம்பின்பெயர்.)

மேஷத்தின்கொம்புவிளங்கியசெம்பொத்து
காமுற்றவோமங்கலந்தவைட்பசு
ஓழ்ற்றசெம்பிலிவுயர்ந்தகுரும்பாடு
ஏழுறறவெள்ளாடுயியல்வகைக்கொம்புமே. (௭௩)

(மாட்டுக்கொம்பின்பெயர்.)

மேதையெருமைவிளங்குங்கிடாககாலன்
மாதைமயிடம்மருவும்பசுங்கொம்பு
கோதையெருதுகோவினிடதந்தம்
பாதையினுமம்பரிமாட்டுக்கொம்புக்கே. (௭௪)

(பல்லின்பெயர்.)

தந்தங்கடைக்கவர்தாள்வாய்பரக்கூடம்
அந்தம்பரவைதானமுகுவாய்முத்தது
விந்தஞ்சுரமுல்லைவிளங்குமொலிக்கல்லு
டந்தம்பலவாம்பல்லுடநாமமே. (௭௫)

(புள்ளிமிருகம்.)

புள்ளிமிருகம்புகழ்ந்தமான்சிங்கமாம்
தள்ளிக்கடவிழிசாதககோடிதான்
ஒள்ளியகிஷ்ணனுயர்ந்தமிருகந்தான்
நள்ளியகலைமான்றற்கொம்பின்பேரே. (௭௬)

(பூநாகம்.)

மேகத்தின்விந்துவிளங்குசஞ்சீவிதான்
பாகத்தின்சோதிபருவியனுக்களு
நாகத்தின்பாம்புநலமானபூமிவேர்
போசரசதீபன்பூநாகம்பேருமே (௭௭)

(இந்திரகோபப்பெயர்.)

இந்திரபீசமிசைந்தனுப்பீசம்
தந்திரயிடியினிற்சார்ந்திடுநாகமாம்
அந்திரசஞ்சீவியமுராதகரோணிதம
பந்திரநாமந்தான்பகரிந்திரகோபமே. (௭௮)

(தவளையின்பெயர்.)

தத்தல்மண்டூகத்தனிநீர்தவளைதான்

மத்தணல்மேகத்தின்வார்த்தையறிபவன்
மூத்தியகோஷ்மொழியுடமூர்க்கனும்
கத்தியசொறியோன்கானலத்தவளையே. (௭௯)

(கோழியின்பெயர்.

இரவையறிவோனிலங்கியசேவலாம்
நிரவியசண்முகன்நீண்டகொடியோனுல்
கரவியசூரன்கடியதோர்ஞானிதான்
தரவையனுமந்தான்தன்கோழிப்பேரே. (௮௰)

(செவ்வட்டையின்பெயர்.)

ஆயிரங்காலியமந்தவரிச்சுருள்
பாயிரங்கானகம்பரவியதட்டான்தான்
தாயிரக்குண்டலிதனித்தமரவட்டை
சேயிரநாமஞ்செவ்வட்டையின்பேரே. (௮௧)

(காடியின்பெயர்.)

பாதாளபேதிபாம்புண்டசித்தனும்
வேதாளபுத்தைவிளங்கவுறஞ்சுவோன்
யேதாளமானயெழுமலைராசன்தான்
ஆதாளமன்னணகண்டகாடியே. (௮௨)

(சங்கின்பெயர்.)

வலம்புரியிடம்புரிவாருதிநாதந்தான்
சசம்புரிட்ட்சிதவலத்திசைநாதம்
கிலம்புரிபாணிகீங்காதவோசையோன்
தலம்புரிஞ்சின்னஞ்சங்குடநாமமே. (௮௩)

(முத்துச்சிப்பியின்பெயர்.)

சந்திரசிப்பிதனிச்சோதிநீர்ச்சடம்
அந்திரவாளிலழகியகெர்ப்பத்தி
தந்திரவருணன்தான்துளிவிந்துவாம்
பந்திரமுத்தின்பரிலானசிப்பியே. (௮௪)

(முத்தப்பெயர்.)

சுக்கிரனணிதாரங்குஞ்சிறுவஞ்சி
அக்கிரஞ்சோதிக்குளாக்கியதன்மணி

தக்கிரன்வாருதிசக்கின்றபிள்ளைதான்
நக்கிரன்சோதிநல்முத்தின்பேரே (௮௫)

(பவழத்தின்பெயர்)

வாருதிதன்னில்விளைந்தசெந்தண்டுதான்
நேருதுக்கொடியோன் நேர்பிரவாளமாம்
தாருருவேலைசாத்தியபெணமாலை
பாருதிநாமம்பவழத்தின்பேருமே. (௮௬)

(கோமேதகத்தின்பெயர்.)

கோமயவர்ணபூகெல்டியனல்ராகுவாம்
தாமியமார்சலம்தன்னிட நேத்திரம
ஓமிபபுலிக்கண்ணுத்தமமேதென்கல்லு
காமிபமீயுங்கடிககோமேதமே. (௮௭)

(புட்பராகத்தின்பெயர்.)

கேதுச்சிலாங்கன்கெடிநயனத்தோன்
மாதவசுரன்மாலுடகண்டவன்
தாதுகமளையோன்சஞ்சலச்சீவனன்
போதுநற்சுக்ரன்புஷ்பராகமே. (௮௮)

(வயிரத்தின்பெயர்)

அருணன்கதிரோனுதிநாராயணன்
தருணாரவிவிந்துகளுக்குறசூரியன்
நருணசிலைராசன்நர்தீபகாந்தியோன்
வருணனுஞ்சிலையின்விளைந்தவயிரமே. (௮௯)

(பச்சையின்பெயர்.)

புந்தியின்வித்துபுகழ்ந்தபசுங்கிளை
அந்திப்பழம்பச்சையாயிடமேனி
கந்திகலைச்சிகடியதனுப்பச்சை
மந்திப்பசளையாம்வாழ்பச்சைப்பேரே. (௯௰)

(நீலத்தின்பெயர்.)

இந்திரநீலமிசைந்தசனிவிந்து
அந்திரக்கன்மணிவருநிமக்கல்லுகாண்
சந்திரமேகந்தன்னிச்சாய்கைகாண்

பந்திரநீலத்தின்பரிவானநாமமே (௬௧)

(மாணிக்கம்-சிவப்பு)

மாணிக்கஞ்சோதிக்க மன்னியசெவ்வாய்
ஆணிப்பரங்கியாதிதனுராகம்
ஊணிக்கனல்நிறமெளியோடுறத்தின்
..வாணிச்சிமேனிமகத்தானசிவப்பென்றே. (௬௨)

(வயிடூரியம்)

மருவியகாந்திமன்னியசெய்வொளி
உருவியபாணக்கல்லுற்றகாளச்சிலை
தருவியசிந்துசாதவச்சூத்திரம்
வருவியசிவன்வயிடூரியமீதே. (௬௩)

(கெண்டகச்சிலை)

கருஞ்சிலைக்குளரன்கவுனியலிங்காமற்
றருஞ்சிலைக்கல்லுசாதகநீசிலை
வருஞ்சிலமேனிவாருதிக்கைதான்
கெருந்திரநாமங்கள்கெண்டகச்சிலைக்கென்றே. (௬௪)

(சூடாலைக்கல)

ஆடாலைமாந்தனுதிதனுரக்தன்ம
நீடாலைக்கொடுநேர்காந்தக்கல்லுதான்
கோடாலைச்சக்கரஞ்சொடிபசிலைநாகங்
சூடாலைக்கல்லின்சொற்குறிநாமமே. (௬௫)

(மரக்கல்.)

கலம ச்சிலைமாக்கலந்தமேசச்சிலை
சிலமாச்செந்தூரங்கள் திட்டியகுப்பிமாப்
புலமாப்பலகைமேற்பொருந்தவெழுதுங்
கலவலமாச்சிலையென்றுமரக்கல்லின்பேரே. (௬௬)

(தேயிக்கல்)

செம்பனைசெமபொடிகிலர்கைகிறக்கல்லு
வம்பிறைபூஞ்சக்கல்மருவும்புரைக்கல்
நம்பிறைபொக்குக்கல்நலமானசாதக்கல்
தம்பிரையானதனித்தேய்தலுமே.

(மஞ்சக்கல்)

குங்குமவர்ணங்கோடிச்சிலையது
மங்கும்பசுமைமலையடிமண்ணது
தங்கும்படிச்சிலைதாதகமஞ்சள்தான்
வங்கஞ்சொறிபுள்ளிமஞ்சக்கல்நாமமே. (௬௮)

(தவளைக்கல்)

மண்டூகச்சிவன்மருவுமாசக்கல்லு
தண்டூகசாரத்திரிகத்துஞ்செறிக்கல்லு
பண்டூரசித்தன்பரிவானசாடக்கல்
மண்டூரதவளைக்கல்பாங்கானபேருமே. (௬௯)

(சிலாவங்கம்.)

கஞ்சுக்கல்லுமாங்கடுவுங்கத்தான்சிலை
வஞ்சுக்கான்பருவதம்வளையிங்குடிலந்தான்
நஞ்சுக்கல்லுநலங்குமேகச்சிலை
தஞ்சுகச்சிலாவங்கந்தன்னிடபெயரே. (௭௰)

(சிலாநாகம்)

நாகச்சிலைக்கல்லுநலங்குபொதிக்கல்லு
பாகச்சிலைக்கல்லுபஞ்சநிறக்கல்லு
வாகத்தருக்கல்லு மருவியதீற்றக்கல்
தாகம்பெரும்பேர்சனிநாகக்கல்லுமே. (௭௧)

(அன்னபேதி.)

ஆதிக்கல்நாதமளவன்னகாலனும்
பேதிக்கல்சவுரிபெருத்தகநாமபுதான்
ஓதிக்கல்வேகமுயன்றகல்வீரியம
வாதிக்கிநாமமருவன்னபேதியே. (௭௨)

(அஸ்திபேதி.)

எலும்பையுருக்கியெலும்பைநீராக்கி
அலம்புருவஸ்திக்கிவாதியாகாலன்றான்
தலும்பிபசுங்கந்தண்ணிராம்வச்சிரம்
நெலும்பியேலும்பைசேர்பதிநாமமே. (௭௩)

(சொர்னபேதி)

குவட்டுமுலைச்சிகுகைமேலநாதத்தி

அவட்டுகலத்தங்கமணுகிற்சிலமாக்கி
புவட்டிகல்மஞ்சட்பொறிவாணிரதிதான்
துவட்டியசொர்ணஞ் சூழ்பேதிப்பேருமே. (௱௪)

(மாங்கிஷபேதி.)

மலையின் தாருச்சி மங்கிஷநீருக்கி
கலையிற்கடுங்காரி கறிசிலமாக்கிதான்
உலையிற்பிணந்தின்னணி யுற்றகடுவுஞ்
வலையிற்குவட்டு மாங்கிஷபேதியே (௱௫)

(உவர்மண்.)

பூமிசெருக்கம்பூ புகழ்மண்ணிணுகமாம்
காயிகளாமண் மகிங்கணற்பூமி
சேமிற்செறுகுறுசேர்ந்தரவிகாந்தி
ஓமியநாமமுவர்மண்ணின்பேரே. (௱௬)

(கல்கிட்டம்.)

கிட்டஞ்சிலைக்கல்லுங்களுஞ் சொறிகிட்டம்
வட்டப்பறிக்கல்லுமழுக்கியசெம்பிறை
ஓட்டக்குமிளிக்கல்லுயர் காட்டுக்கிட்டமாம்
நெட்டொற்றநாமம நேர்கல்லின்கிட்டமாமே. (௱௭)

(கலைமணல்.)

அயமணல்வாரி யழகியவாத்துநேர்
தயமணற்கிண்ணஞ்சாந்தருவிதான்
உயமணல்நீல மோங்கியவப்பிரகக்
கயமணல்நாமக்கருமணற்பேரே, (௱௮)

(செம்மண்)

நாகமண் காவிநலந்திடுசெம்பூமிப்
பாகமணமாலை பருகுஞ்சிவத்தமண்
வேகுமண்சித்திரம வெருவியெழுதாமண்
தேகமண்ணுமஞ் செம்மண்ணின்பேரே. (௱௯)

(சுக்கமண்.)

படமண்குடோரி பூமிவெளுப்புமண்
தடமணசரவணசாக்கபவால்வெள்ளைக்

குடமண்ணல்லோகந்துப்பிக்குர் வெண்மண்
துடமண சலவைமண சுத்தமண்மே ரே. (௱௰)

(முடவாட்டுக்கால்.)

மலைக்கால்குலைக்கால் மன்னுங்குலட்டுக்கால்
நலைக்கால்நல்மேடக்கால் நல்மலைகொங்குசங்கால்
தலைக்கால்கடுரோகங் கனிட கெற்பக்கால்
முலைக்கால்குலட்டின்மேல்முடவாட்டின்காலின்னே. ()

(கருவண்டு.)

தார்பிசுழத்திசோரகக்கண்டுதான்
சம்பிச்சா வினைகாணசக்திகமாம்
வம்பிக்கரும்வெண்மலருக்குநாயகம்
செயபிக்கரும்பிசீர்கருவண்டென்னே (௱௰௨)

(பண்ணிமுள்)

ஏனத்தின்முள் ளுயெறிவுன்றவலத்தி
காணத்தில்சித்தங்கடிய மூடபாணமாம்
ஊனத்தின்முள்ளு வகறும்வாராகிவேல்
மேலைத்துப்பன்னணிவிளங்கியமுட்பேரே. (௱௰௩)

(எலிமுல்)

கானத்தின்சேவகன் கடிகளைக்குடியேன்
வொனெத்தகுனைக்கு மருவியசத்துரோள்
ஊனெறுத்தருள்ளேளனுறுகின்றசுண்டெலி
தேய்ஞந்தமுள்ளெலி செப்பியநமமே. (௱௰௪)

(கடல்நுரை.

அக்கினிசாலவலையிற்றிரணட்டி
தக்கினித்திநுரை சாககமம்பிட
மக்கினிகூர்மையொருகிவிநதுவாம
ஒக்கினிற்கடல் நுரையோகியநாமமே. (௱௰௫)

(மீனெலும்பு)

மச்சத்தின் செல்விமகாமீனங்கள்
அச்சத்தின்செல்வங்களைமீனெலும்புதான்
மச்சத்தின்கச்சமுழுமீனபல்லவாளா

மிச்சத்தின்மீனினெலும்பிடநாமமே. (௱௰௬)

(முட்சங்கு.)

S. 4 79

கவரேழுசங்கங்கடுகெண்டகச்சங்கு
நவரேழுசங்கம்நலங்குஞ்சுலச்சங்கம்
மூலவரேழுசங்கமுயன்றவேற்சங்கமாங்
தவரேழுரோமந்தனிமுள்ளின்சங்கமே. (௱௰௭)

(பேரோசனை.)

மன்னின்பிரடமோசித்தர்மோசந்தான்
தன்னினபசுமலைதாக்குழலூற்று
உன்னியவேவகையறங்கெட்டமல்லுதான்
பென்னியநாமம்பேரோசனைப்பேரே. (௱௰௮)

(நாகபச்சை.)

பரிசகவின்றுபருஞ்செம்பைமச்சைதான்
வரிசைக்குளிபச்சைமாவியுடல்மேனி
சரிசக்கடுமபச்சைகானகக்கூபமாம்
நிரிசிறறநாகபச்சையினுமமே. (௱௰௯)

(மாகதப்பச்சை,)

கடும்பச்சைக்குவடுகானகப்பச்சைதான்
நடும்பச்சைக்கல்லுநாயகமேனிதான்
மடும்பச்சைவர்ணமவானமேகப்டச்சைதான்
நெடும்பச்சைமரகதநேரானநாமமே. (௱௨௰)

(புத்தாம்பழம்.)

புத்துக்குனைகச்சிபுகழ்ந்தகரும்பிதான்
மத்துக்குனைகச்சிவாள்முலைமபாலிய ஞ்
சித்துக்குழச்சிதிரணடகொடிச்சிதான்
அத்துக்குர புத்தாம்பழத்துடநாமமே. (௱௨௧)

(வெள்ளைச்சுக்கன்.)

வெண்கல்லுமண்கல்லுவிலங்குமவயற்கல்லு
பணகல்லுநீராட்டம்பாபும்ரவிக்கல்லு
தணகல்லுவங்கத்தானேவிளையுங்கல்
உணகல்லுவெள்ளையுயர்சுக்கானகல்லுமே. (௱௨௨)

(கதண்டு.)

கானகந்தும்பிகரிமுகவானையாம்
வானகப்புணைதச்சிவச்சிரகலைச்சிதான்
தேனகக்குடிச்சிசித்தர்மகிட்சி
ஊனகக்கதண்டினுரைத்திடுநாமமே. (௱உ௩)

(காகச்சிலை.)

காசிக்கல்மூங்கில்கருமுகில்தண்டுக்கல்
வாசிக்கல்வாணக்கல்மாருதவண்ணக்கல்
ஆசிக்கல்சிக்கலளவாங்கிரணிக்கல்
தாசிக்கல்நாமந்தனிகாகச்சிலையென்றே. (௱உ௪)

(காண்டாமிருகக்கொம்பு.)

காண்டகக்கொங்ளங்கடிமொற்றக்கொம்பனும்
நீண்டகயானைநேர்கருஞ்சாணிதான்
பூண்புகக்கைப்புயளபோக்கும்விடகாரி
ஊண்டகக்காண்டாமிருகத்தினுமமே. (௱உ௫)

(கஸ்தூரியெலும்பு.)

விளைமிருகமேலாமுதிர்ங்கான்
வானைமிருகமாங்கிடவாசத்தோன்
பூனைக்கடுவாசிபுகழ்வாகச்சொல்லியங்
கானபகஸ்தூரிமிருகத்தெலும்பென்றே. (௱உ௬)

(மங்காரச்சிலை.)

மேமங்காரவிளங்கியவர்ணக்கல்
பாகம்பலவர்ணம்பகரிற்கனற்சிலை
வாகந்தலவரைமதிமேகக்கல்லது
நாகவேமந்தாரச்சிலையுடகாமமே. (௱உ௭)

(கடற்பாசி.)

வாருதிப்பாசிமருவியபின்னல்தான்
காருதிச்சிவல்கடுவேலைகந்தரம்
நேருதிப்பாசிநீங்காச்செலமலம்
மாருதிகடலுக்குள்ளடங்கியபாசியே. (௱உ௮)

(சாலக்கிராமம்.)

தன்மலைத்தாசிதானுணை மூவர்கட்

வன்மலைத்தங்கமருவியகொர்ப்பத்தி
உன்மலச்சக்கரமூயர்ந்தமால்வீடுதான்
பின்மலைச்சாலக்கிராமத்தின்பேரே. (௱௨௯)

(மாங்கிஷச்சிலை.)

சதைநிறஞ்சென்னிறந்தங்குஞ்சடம்நிறம்
உதைநிறமானவூட்டியகார்நிறம்
பதநிறமண்ணிறமபாங்கிச்சிலைநிறம்
மதிநிறம்போலமாங்கிஷச்சிலையே. (௱௩௰)

(மாந்துளிர்க்கல்,)

ரவிநிறந்தேனிறம்நிலங்கியபூநிறஞ்
செவிநிறந்தேனிறஞ்செம்பினிறங்கான்
தவிநிறந்தன்னிறந்தனிமாதளச்சிலை
வலிநிறமாந்துளிர்க்கல்லிடநாமமே. (௱௩௧)

(காலப்படிகம்.)

சிவனிடதேகத்தேவிக்குமுத்திரை
அவனெனக்காந்தியழகாமதிக்காந்தி
புவனெனவச்சிரம்பூமிக்குநாயகன்
தவனெனவேகந்தவித்தபடிகமே. (௱௩௨)

(கல்காவி)

மாந்துளிர்விச்சிலைமருவியசெஞ்சிலை
சேந்துயர்மண்சிலைசெம்மணசிலையென்றும்
ஆய்ந்துயர்காந்தியாதிரவிச்சிலை
காந்தியமேனிகல்காவியன்பேரே. (௱௩௩)

(செம்பூமணல்)

செவ்வியரவிமணல்சிவந்திடுலோகமண்
சவ்வாயதாம்புரங்கலந்திடுவர்ணமண்
நவ்வாயச்செம்பொடிநாட்டியசெங்கோலம்
தவ்வாயசெம்பின்தன்மணல்நாமமே, (௱௩௪)

(நாவமணல்)

மின்னல்தனக்குவிளங்கியசிரல்தான்
கன்னரல்ரசிதங்கருவஞ்சுவானத்தான்

தன்னன்போன்விந்து சாதகவாதிதான்
நன்னலர்நாகமணலிடநாமமே. (௫௩௫)

(வங்கமணல்.)

கெடுப்பினையடுப்பினைகேளுக்குடிலந்தான்
நெடுப்பினைசவளைநேர்கொடிவங்கமா
மடிப்பினைகைப்பினைமாருதிநாதந்தான்
வடிப்பினைவங்கமணலுடநாமமே. (௫௩௬)

(ஈயமணல்)

மித்துருபதுமைவெற்றுவேதைச்சத்துரு
அத்துருக்கமிஷமகத்தியராசன்
நத்துருவர்னம்நாட்டியநாதனும்
இத்துருநாமங்களீயத்தின்பேருமே. (௫௩௭)

(வெள்ளிமணல்)

வாரியசிம்வழுக்கிடுவெண்மணல்
தாரியமோடுசார்ந்தமதிமணல்
கூறியதய்ப்பாங்குதுமணவென்றுபேர்
ஆறியவெள்ளிமணலிடநாமமே (௫௩௮)

(ஏமமணல்)

மேருவின்மாரிவிளங்கும்பரிமணல்
தாருவும்துண்டந்தளிநாகச்சாரந்தான்
காருமகிதனுகளோயினுஞ்செம்பொன்னும்
சேருநல்லேமமணலுடநாமமே (௫௩௯)

(லோகமணல்)

கருமலைவாரிகறுக்ககருமணல்
கருமலையிருப்புசாதகக்கருமணல்
திருமலைப்பிறங்கஞ்சேர்கிஷ்ணலோகமா
மூருமணல்வாரிலோகமணலென்றே. (௫௪௰)

(மயிலிறகு.)

மயூரமகிலமன்னுயிராட்சதன்
கையூரால்மேகத்தின் களித்திடுதாசிதான்

கையூரறுமுகன்றனேறுவாகன
மயூரமயிலினிறகுடனாமமே. (௱௪௧)

(கருஞ்சுக்கான்.)

கருமணல்சுக்கான்சாவளேசுக்கான்தான்
தருமணல்சுக்கான்தனிக்காசசுக்கானும்
திருமணல்பொருக்குச்சேந்தகரும்பாறை
அருமணற்கருக்தசுக்கானிடநாமமே. (௱௪௨)

(காணக்கல்பெயர்)

சரணிவரிக்கல்லுசாதகமாக்கல்லு
திரணிசாரைநேர்புன்னிக்கல்லுதான்
அரணியசெம்பிறையாகியுஞ்வைக்கல்
காணியநாமம்காணக்கல்பேரே. (௱௪௩)

குருந்தக்கல்லின்பெயர்.

கோளகைமச்சிரக் கெவுஞ்சாணக்கல்லு
நீளகவயிரம்நேரொத்தநாமமாம்
வாளகப்பூச்சிலை மருவியாரம்பமாம்
தாளக்குருந்தந்தனிக்கல்லின்பெயரே. (௱௪௪)

(ரசிதச்சிலைபெயர்.)

ஈசானமேருயிசைவெள்ளக்குன்னுமாம்
மாசானபருவதமடங்கமதிமலை
ஆசான்வெள்ளம்பலமதிமலைநாதமாய்
காசாரசிதமலையென்றுநாமமே (௱௪௫)

(ஏமச்சிலையின்பெயர்.)

மேருகொடுங்கைவெண்ணவற்சாரல்
வாரும்புவிமையம்வளர்ந்திடுமேமமாம்
தாரும்புவனம்சதாசிவனவாசந்தான்
சாருபூயேமமலையுடநாமமே. (௱௪௬)

(நாகச்சிலையின்பெயர்)

மந்தரநாகமணிமுடிசர்ப்பமாம்
விந்தரபூசணமேவியவாசுகன்

அந்தத்துமமழகாங்குலவரை
நந்தரநாகச்சிலையுடனுமமே. (௱௬௭)

(வங்கச்சிலை)

பங்கக்குவடுமாருதிகுடிலமாம்
வங்கக்குவடுதேவியுடபீசந்தான்
சிங்கக்குவடுபானுவின்தன்மூலம்
தங்கக்குணமாகுந்துணிவாங்கச்சிலையுமே (௱௬௮)

(ஈயச்சிலை)

காரிகடுமலைகானகத்தியமாம்
நாரியபரிசனம்நமனும்பரிக்கிது
வாரிசக்குவளைமலையெனுங்காரீயம்
பாரியயீயப்படர்மலைப்பேருமே (௱௬௯)

(அயச்சிலை.)

காந்தவயசுகடுகியகுண்ணமாம்
வாந்தலோகம்வளர்ச்சிவனுளமலை
யேந்தியவாயுதமிழுங்குங்கருமலை
ஆந்தியகாந்தத்தயமலைப்பேருமே (௱௭௰)

(இராமலை)

கொட்டத்திரச்சிகூறியதோர்மலை
அட்டக்குவடுவந்தகன்பீடமா
முட்டக்கலிப்புமூதண்டவெட்டைதான்
தட்டத்திராவினறன்மலைப்பேருமே (௱௭௧)

(வெங்கலமலை.)

கோழங்கொடுமலைகோமணிகுண்ணமாங்
காழங்கலநாதங்கூடிதுதுருசந்துமே
வேழங்கனகமேலாக்குறுகுண்ணி
மாழடாம்வெங்கலமலையினுமமே. (௱௭௨)

(செம்புமலை)

ரவிலக்குண்ணம்நலங்குசெம்படிபலம்
ரவிகுலமேருநாதக்குவடுதான்
ரவிகுலக்குண்ணமநலக்கியசெம்பொன்னும்

ரவிகுலசெம்பாம்மலையுடநாமமே. (ருநு)

(பித்தளைமலை.)

கோக்குபொன்வர்னக்குடவன்பருவதக்
தாங்கியசினிசரிகைமலையென்பார்
வாக்குநல்நாளிக்க மந்தாரவிதமாம்
..ஆங்குநல்பித்தளைச்சியுடனுமமே. (ருசு)

(உபரசச்சரக்கு-முற்றிற்று.

—(*)—

விருத்தம்.

பாங்கானவுபரசங்கள் நூற்றிரண்டுபத்து
பரிவாகவொன்றென்றாய் விரித்துச்சொன்னேன்
வாங்காகவுபரசங்கள்யெங்கேகாணபான்
வாய்பேசசுவாதத்தால்மண்ணுமில்லை
ஓங்காகவுபரசந்தான் சாரணைக்குவாதி
வுத்தமனேவொவ்வொன்றிற்கோடிவேதை
தேங்காதகருவெல்லாம்நிகண்டிற்சொன்னேன்
சிறுபிள்ளையாடுமிந்தவாதந்தானே. (ருரு)

பாஷாணம்மலைதேறும்பிறந்ததுதானப்பா
பாங்காக முப்பத்திரண்டுநாமம்
பாஷாணம்வொவ்வொன்றில்நாமபேதம்
பாடினூர்வாயுள்ளசித்தரப்பா
பாஷாணப்பிறப்பிதென்றுசொல்லார்சொல்லார்
பாடினதோர்சாஸ்திரத்திற்சலந்தானேது
பாஷாணகுலத்தோருநாதாக்கள்சொன்ன
பரிபாஷைகருவெல்லாம்பாடுகிறேனே (ருசா)

(காதுவாகியபாஷாணப்பிறப்பு.)

(கற்கடகப்பாஷாணம்.

கந்தர்கவுந்தங்கல்லடிமூலம்
விந்தர்கஞ்சமேலுமைதாதுதான்
பந்தரம்பாணிபார்மூலக்காணியாம்
அந்தர்கற்கடகப்பாஷாணப்பேருமே (ருஎ)

(கௌளக பாஷாணம்.)

கொங்கங்குட கங்கூ விளங்குந்தமாம்
சங்கங்கவுந்தங்காரம்கோரந்தான்
அங்கமெனந்தமாணிப்பாஷாணந்தான்
பங்கமாங்கௌளாகப்பாஷாணப்பேருமே (௱௫௮)

(சூதபாஷாணம்)

அங்காரகெங்கனுஇவர்ரட்டியன்
சுந்தரஞ்சொற்குறிஞமமகாமர
மந்தரமஞ்சிமாருதமகிபன்ஞன்
விந்தரஞ்சூதமாம்பாஷாணப்பேருமே (௱௫௯)

அரிதாரம்.

மாலுடன்பாகமருவியலட்சுமி
சேலுடன்கன்னிசிறுமூக்கரச்சிதான்
ஆலுடகொடிச்சிதானுகதான்சத்தி
மேலுடனரிமின்தாரத்தின்பேருமே. (௱௬௰)

(கெந்தம்.)

கந்திபொரன்வர்ணங்காரிழைநாதமாம்
அந்திபநாறும்பூவதிரச்சுரேணிதம்
தந்தியசத்திதன்தாதக்குணச்சாலாம்
பந்தியகெந்தகப்பரிபாஷைநாமமே. (௱௬௧)

(வீரம.)

ஆதிரவுத்திரனதிவெள்ளைசெந்தூரம்
வாதியர்கெற்பம்வகாரத்தலைவனும்
ஓதிவிபூவிந்துவுத்தமசேவகன்
மாதியபூமியில்வள்ளைச்சவ்வீரமே. (௱௬௨)

(வைக்கிராந்தபாஷாணம்.)

வைக்குங்குமூர்தமாமுகிற்சுன்னமாக்
கைக்குங்கொடுசைகானைவிற்குண்ணது
மைக்குநல்பூமாமலைநாதமாகும்
ஐக்கும்வைகிராந்தமாகின்றநாமமே. (௱௬௩)

(தாலப்பாஷாணம்)

தாலமகுந்தஞ்சாதகலம்பமாம்

மூலங்கடுங்கும்பம்மும்மதக்கோடுதான்
கோலநற்சாங்கங்கோபுளகந்தான்
ஆலமங்காலப்பாஷாணநாமமே. (௱௬௪)

(மூர்தபாஷாணம்.)

ஆதிபனந் தனங்கவன்புங்கவன்
சாதியகாசாங்கனசாரணன்பூரணன்
மேதிக்கவுனன்வேந்தன்வெகுளியாம்
மேதியமூர்தபாஷாணநாமமே (௱௬௫)

(சிற்பந்தபாஷாணம்,)

கந்தன்கபாலன்கடுமேசச்சாய்கையோன்
அந்தன்சிரசோனந்தகன்சம்புதான்
பந்தன்பரமன்பாயுறுசெர்ப்பத்தோ
சிந்தன்சிற்பந்தப்பாஷாணப்பேருமே (௱௬௬)

(தொட்டியபாஷாணம்)

தோத்திரபலகைதுலங்குபூவோடு
மாத்திரச்சிலாகைமந்தாரமேவறுதான்
கோத்திரங்குறிஞ்சில்கும்பகலிபமாம்
பாத்திரந்தொட்டியபாஷாணப்பேருமே, (௱௬௭)

(குதிரைப்பால்பாஷாணம்,)

தந்தஞ்சுண்வன்சரமுறுவாசியோன்
விந்தங்கவுனிவிளங்கியகற்பல்லூ
பந்தங்கவரிலசப்பல்லுருசெங்களே
அந்தகுதிரைப்பால்பாஷாணப்பேருமே- (௱௬௮)

(சங்கபாஷாணம்,)

தவளச்சங்கஞ்சாதகக்குவடுதான்
புவளம்புனிதம்பொங்கியதோஷமாம்
மவிளங்கச்சமாகியவென்சிறஞ்
சவளமாஞ்சங்கப்பாஷாணநாமமே (௱௬௯)

(கெவுரிபாஷாணம்

கேகபாபூசங்கெந்தபமந்தமாம்
ஆகயமாஞ்சிலாதிக்குமரிதான்

பாகயமிக்துபரிவாங்குறக்கந்தான்
வாகயகெவுரியாம்பாஷாணநாமமே (௱௭௰)

(துற்றபாஷாணம்,)

தூம்பிரகோபஞ்சுக்தரத்தாவதுவாம்
தாம்பிரகெர்ப்பம்தரளமற்சிதமாய்
வாம்புரக்கோபம்வன்னக்கவங்கந்தான்
வேம்புரதுத்தத்தின்வொட்டியநாமமே (௱௭௧)

(பலண்டுருகப்பாஷாணம்)

பாகமயோகம்பரிவாகும்ராங்சமாம்
வாகந்தாகமமர்க்துமதுரமாம்
வேகம்விடிவிம்பம்வேதக்குருக்குல
மாகம்பலண்டுருபாஷாணப்பேறுமே, (௱௭௨)

(கந்தபாஷாணம்)

கருஙிறவாயுக்காலன்சனியனும்
உருஙிறச்சீவன்தானேங்கியவன்னி
சருஙிறபஞ்சாசாதகக்காக்ஷி
அருஙிறக்காந்தமாம்பாஷாணம்பேருமே (௱௭௩)

(லிங்கபாஷாணம்)

வன்னியின்கெர்ப்பமகத்தானசண்டகன்
கன்னியபெருமான்காரணமாம்லிங்கம்
தன்னிச்சமரசச்சார்வானசெந்தூரம்
அன்னிப்பிறந்திடும்லிங்கத்தின்பெயரே (௱௭௪)

(சரக்காண்டபாஷாணம்)

அப்புருத்தூணியாகுஞ்சரம்பரம்
நப்பிருக்காகாண்டம்நல்குந்தனுப்பாணம்
ஒப்பிருச்சிவம்வோங்கியகாண்டிபம்
தப்பெருவாபஞ்சரக்காண்டப்பேருமே (௱௭௫)

(தாளகம்)

மாலுடபாகமகத்தாலட்சுமி
பாலுடநாழிகான்பகருங்குடியாள்
கோலுஙிகுணசலிகுங்குமவர்ணச்சி

ஆலுடதாளகமறைந்திடுநாமமே. (௱௭௬)

(மனோசிலை.)

நாமுகன்றேவி கலங்குஞ்சரசோதி
வான்முகவாணி மருவியவெள்ளச்சி
காமுகவாக்கி தாமனோவாசினி
கோமுகநாமக் கொடிமனோசிலைக்குமே. (௱௭௭)

(அவுபல் பாஷாணம்)

அவலஞ்சவல மந்தகங்ககம்
உவலமுருணடு கமுத்தமசத்துத்
தவலம்துவலஞ் சராசரப்பாசாணம்
பவலமவுபல் பாசாணப்பேருமே. (௱௭௮)

(சலங்கபாஷாணம்)

சம்பமரும்பஞ் சாதகக்கும்பமாம்
வப்பஞ்சரபபமக்ககக்காந்தமாம்
விப்பம்போகம் விளங்கியவூஷரம்
அம்பஞ்சலாங்கப் பாஷாணப்பேருமே. (௱௭௯)

(கற்பரி பாஷாணம்.)

நிதம்பமாந்தம் நெருக்குங்குலிசனும்
விதம்பமாஞ் சங்கமேவியமேதச்சி
கதம்பங்கருமமாங் காணகத்தினதாமம்
அதம்பமாககற் பரிப்பாஷாணப்பேருமே. (௱௮௰)

(கற்பாஷாணம்.)

பாசம்பரிசம் பரவிடாகாசம்
ஆசமாங்குந்த்ர மந்தரச்சிந்துவாம்
கோசக்குமுதங் கூவிளம்பூவிளம்
ஆசங்கற்பாசப் பாஷாணநாமமே. (௱௮௧)

(அஞ்சனம் பாஷாணம்.)

தூரமாந்துட்டி சொற்சிலைமங்கந்தான்
கூரமாகக்கிண்ணங் கொலைவன்பனைகசாரி
ஆரமாஞ்சிலைகாரி வயத்துக்குயந்தகன்
பாரமாமஞ்சனப் பாஷாணப்பேருமே. (௱௨௮)

(கச்சலப்பாஷாணம்.)

ஆச்சமணக்கருநிவராகன்தான்
மச்சருபன்மறையுருக் குலத்தோன்
தச்சமசந்தன் தாசகக்கிள்ளையோன்
கச்சமகச்சாலப் பாஷாணப்பேருமே (௱௮௩)

(சீதாமுகப் பாஷாணம்)

சிரமங்கிடஞ் சேந்திநிலனையமாம்
பாதம்பரிசம் பன்னகங்குஞ்சாத்தன்
நீதம்பரிமளவிட்கனாகல்லுதான்
ஆதஞ்சிதாங்காப் பாசணப்பேருமே. (௱௮௪)

(சிலாமதப்பாஷாணம்.)

மந்திரவுதிரமருவியகற்குறி
விந்தரந்தூமை விளங்கியகற்கனல்
பந்தரங்காந்தியாற் பாயுறுயோனிதான்
அந்தரசிலாமதப் பாஷாணப்பேருமே (௱௮௫)

(கார்முகிற் பாஷாணம்.)

கனலொடுவாயுக்கலந்திடுஞ்சூதம்
அனலொடு வேந்தனுகுமகாவிந்து
பனலொடுமேசம்பரித்திடுந்தாரையாம்
வனலொடுகார்முகில்வளர்ந்தபாஷாணமே. (௱௮௬)

(அப்பிரகம்.)

பூமியின்கல்லுபுகழ்க்க மலைப்பாதம்
வாமியின்திட்டம் வழியுடகாந்திதான்
காமியசத்திகந்தரப் பாச்சிதான்
ஓமியவப்பிரகம் பாஷாணப்பேருமே. (௱௮௭)

(வெள்ளைப்பாஷாணம்.)

வெள்ளைவிடயம் மேவியசங்கமாம்
தள்ளைவிளைவளம் சமரசபாகந்தான்
உள்ளக்குழுகமே க்கும் படிகந்தான்
நல்லயவெள்ளைப் பாஷாணநாமமே. (௱௮௮)

தாதுப்பிறப்பு-௩-உம்-முற்றும்.

விருத்தம்.

பேரானமுப்பத்திரண்டுதாது
  பிறந்துநின்றமலைசொன்னேன் பேருஞ்சொன்னேன்
வாரானநாதாக்கள்மறைப்பாய்ச்சொன்ன
  மறைப்பெல்லாம்நிகண்டாகத்திறந்துபோட்டேன்
ஊரானசாஸ்திரத்தைப்பார்த்துக்கெட்ட
  ஓங்கியதோர்வாதிகட்கு வுயிருஞ்சொன்னேன்
காரானமூலத்தில்நந்திசொல்லக்
  கனாக ந்தபாஷாணம்பேருஞ்சொன்னேன் (௱அஅ)

பரங்கிவைப்புப்பாஷாணப்பேர்

வேறு.

(தொட்டிப்பாஷாணம்)

ஓடுபுக்கோடுவுலவமாம்பலகைதான்
ஆடுபுச்செப்புத்தொட்டியென்பார்சிலர்
நாடிநல்லெருமைநற்றொட்டிகாணென்பார்
கூடும்பொறிச்சிக்குல வுபேர்தொட்டியே. (௱கூ௰)

(சிலாஇபாஷாணம்.)

குலாவும்பொறச்சிக்கூடியபேர்யுள்ளி
நிலாவுங்கறப்பிநெரியபாண்டத்தி
அலாவுஞ்சிவம்புவாதியாஞ்செப்பிச்சி
கலாவுஞற்றொட்டிப்பாசாணங்கண்டிடே. (௱கூக)

(மிருதார்சிங்கு-)

ரசிதமிருதாருநலங்கியபொன்வண்ணம்
அசிதச்சிவப்புவகாரக்களங்குதான்
மசிதநல்வங்கமருவியயியங்தான்
கசிதமிருதாரகச்சிங்கிராமமே. (௱கூ௨)

(திமுறுகற் பாஷாணம்)

அண்டமுறுகல்லடிபட்டகாந்திதான்
கண்டங்கருங்கல்கார்முகில்வர்னமாம்
தண்டங்கிறிச்சல்சமைந்திடுகைந்தாம்
பண்டந்திமுறுகற்பாஷாணப்பேருமே. (௱கூ௩)

(கருமுகிற்பாஷாணம்)

காத்தாயமுதாங்காரண்டனைவப்பது
வாக்காய்முகில்நிறம்வாசுகன்மூச்சுதான்
தாக்காய்பதங்கஞ்சமைய யுத்தநாறிதான்
காக்காய்கருமுகிற்பாஷாணப்பேருமே (௱௬௪)

(சாதிலிங்கம்.)

சண்டமதாதஞ்சாதிப்பதங்கரம்
கண்டம்பவலங்கவென்னிகெற்பந்தான்
இண்டமாமிக்குளமிசைந்தசிவத்தி
பண்டமாஞ்சாதிப்பருலிங்கப்பேருமே. (௱௬௫)

(வெள்ளைப்பாசாணம்.)

எலிக்குநற்கரலனியல்விஷராஜனும்
அலிக்குக்கொடுவிடமாகாதவெள்ளைதான்
மலிக்குக்குடோரிமன்னுயிர்காலனும்
பலிக்கியவெள்ளைப்பாஷாணப்பேருமே. (௱௬௬)

கௌரிபாசாணம்,

சங்கரன்பெண்டிர்சார்வானபொன்னிச்சி
ஐங்கரனுயிவானந்தவாதிச்சி
பொங்கரவணிந்தோன்புகழுடன்மாகத்தி
தங்கியகௌரிக்குச்சாற்றியநாமமே (௱௬௭)

(சவ்வீரம்)

ஏறியவீரமெவனாக்கூறினே
ஆறியவிற்பனனதிவெள்ளைச்செந்தூரந்
தேறியசேவகன்சேர்பிடராஜனும்
கூறியவீரங்கொள்கிரநாமமே. (௱௬௮)

(கோழித்தலைக்கெந்தி

குக்குடச்சூடுகொந்தலைக்கெந்திரன்
தக்குடச்செம்பிசாதகராகத்தி
அக்குடப்பாணியானந்தவல்லியாம்
கெக்குடக்கோழித்தலைக்கெந்திப்பேருமே. (௱௬௯)

(வாணக் கெந்தி.)

படைக்குவரசன்பாங்காஞ்சுணாக்கெந்தி

முடைக்குவரசமூதண்டகாதம்
விடைக்குவரசன்வேந்தனுக்கேதாரம்
கடைக்குவரசன்கவோணக்கெந்தியே. (௨௱)

(வைப்பரிதாரம்)

கொச்சிக்குளந்தைக்கூடும்பிராமணி
அச்சிநடச்சிவரியுடகாரத்தி
மெச்சிகனத்திவிளங்குந்தனத்திதான்
வைச்சிவைப்பாமரிதாரப்பேருமே. (௨௱௧)

(பவளப்புத்துப்பாஷாணம்)

புத்துப்பவழும்பொருந்தங்குழியா
மத்துக்கொடிச்சிவழங்குங்கறடகி
எத்துச்சுளக்கியியைந்தகுழச்சிதான்
பத்துப்பவழப்புத்துப்பாஷாணமே. (௨௱௨)

(கோடாசொரி)

குருமுறைமன்னன் கொடியதோர்வீரம்
அருமறைக்களிம்புவகற்றியவண்ணன்
கருமுறைச்சோரன் தனிவாதராசன்
பெருமுறைக்கோடாசொரியின்பேருமே. (௨௱௩)

(பஞ்சபக்ஷி பாஷாணம்)

சித்திரபக்ஷிசேர்ந்தஞ்சிவன்னத்தி
மத்தியமாயமருவியவைம்புலம்
பத்திரன்பாவைபாங்கிக்கிப்பூதமாம்
அத்திரபஞ்சபக்ஷிபினுமமே. (௨௱௪)

(குங்கும பாஷாணம்)

மஞ்சலருமபிமாதுக்குமாதுதான்
அஞ்சற்குழைச்சியாளபொற்கொங்கைச்சி
கஞ்சுக்கமளிகடியபொன்னுணடிச்சி
கொஞ்சநற்குங்குமபாஷாணப்பேருமே. (௨௱௫)

(இரக்தபாஷாணம்)

பறங்கிச்சிதிக்கிப்பார்ப்பாரக்கன்னிரா
யறங்கிச்சிதிக்கியாண்டிச்சிப்பொன்னிச்சி

தறங்கிச்சிவப்பிசாதகவன்னத்தி
பறங்கியறத்தபாஷாணப்பேருமே. (உ௱சு)

(துத்தம்)

துத்தங்கவரிதூம்புரசிப்பிச்சி
அத்தமிரசிதமாகியகற்பரி
மூத்தஞ்செய்நாகம் முதிர்ந்தசொறியனும்
பத்தம்பற்றுத்தம்பரங்கானபேருமே. (உ௱எ)

(துரிசு)

நீலக்கல்லிநேரியகண்டர்தான்
கோலலவணக்கொடியசிவசத்தி
ஆலமுடையயோனிசுடலையான்
மாலான்மேனிவாள்பச்சைமேனியே. (உ௱அ)

மேனிக்குருகுலவேதாந்தவாதிதான்
பாணிசதாசிவன்பரிசுத்தப்பாணியாம்
ஆணிமுடிநீலமாதிமகாகுரு
வாணிதுரிசியின்மகத்தானநாமமே. (உ௱கூ)

(ரசிதப்பாஷாணம்.)

ஆண்டிமதிக்குலமந்தரவெள்ளச்சி
பூண்டில்நெடுமணபொங்கியகொங்கைதான்
காண்டில்நல்வெள்ளைகாக்கியகாந்திதான்
உவண்டில்ரசிதப்பாஷாணப்பேருமே. (உ௱௰)

(சூதபாஷாணம்.)

சிலையானசூதமாம்சேர்ந்தகணவனும்
மலைபாங்குறவனும்வாசுகிநாதந்தான்
கலையானந்தன்காவக்குடியோனும்
நிலையானசூதகப்பாஷாணப்பேருமே. (உ௱௰க)

(நீலப்பாஷாணம்)

வன்னக்கறுப்பிவெப்பாணிலிதான்
கன்னக்கரணக்காங்கயசோமனும
தன்னந்தனஞ்செயன் சந்திரமௌலியாம்
நின்னக்கடுவேகன்நீலப்பாஷாணமே. (உ௱௰உ)

(கெந்தப்பாசாணம்)

காத்தன்சடங்கன்நலம்பெறுநாதனும்
பாத்தன்விசையன்பாங்கானபுங்கவன்
மூக்கன்முயலகன்மூதண்டசத்திதான்
ஆத்தனுங்கெந்தகப்பாசாணநாமமே. (உ௱௰௩)

(சோர பாசாணம்)

களவன்கந்தன்கார்முகன்கண்ணன்மூஞ்
அளவனனந்தனுதிவிராட்டியன்
இளவன்திருடனிசைலோகமாரணன்
துளவனும்சோரபாசாணப்பேருமே. (உ௱௰௪)

(காகப்பாசாணம்)

வாசிக்கொடியோன்மைந்தன்கருமுகில்
ஆசிக்கருப்பனந்தகன்வாகனன்
மாசிக்குருக்கன்மரருதிவாசகன்
காசிக்கருமுகில்காகபாசாணமே. (உ௱௰௫)

(லஃவணப்பாசாணம்)

ஆணிச்செருக்கமாதித்தன்கூர்மை
நீணித்தவுப்பில்நிலைத்திட்டவுப்பிலி
காணித்தகம்பிகடுகும்பதங்கனும்
வாணித்தலவணப்பாசாணமாமிதே (உ௱௰௬)

(நாகபாசாணம்)

சேறல்பொருமால்சிறந்திடுஞ்சம்பத்தி
ஆறல்முறுகலனந்தகமாபங்கம்
கூறல்குலிசங்கொடியகுடிலந்தான்
பேறலாயநாகபாசாணத்தின்பேருமே. (உ௱௰௭)

(இந்திரபாசாணம்)

இந்திரசத்தியியல்பாமமாகாகன்னி
மந்திரரூபிவானவர்போமதிதான்
அந்திரக்குடிலச்சிபழகுதுவாச்சிபெண்
தந்திரயிந்திரபாசாணப்பேருமே. (உ௱௰௮)

## விருத்தம்.

தந்திரமாய்ப்பாக்கிலைத்தவைப்பதெல்லாம்
சாதகமாய்முப்பத்திரண்டுகாது
அந்திரமாய்ச்சித்தரிட்டநாமமெல்லாம்
அளவிட்டுச்சொல்லிவிட்டேன் பலநூல்மார்க்க
எந்திரமாய்ச்சுட்டாலும்பேர்த்தப்பாலே
யெடுக்கநான்முறையெல்லாம்பொய்யாய்போகும்
மந்திரமாய்ப்பாட்டாகிவிருத்தமாகி
வகையானவெண்பாவாய்மறைந்திட்டாரே. (உ௰௯)

மறைந்திட்டவுபர்சமும்சாரமப்பா
மைந்தனேபாஷாணப்பிறைப்பவைப்பு
மறைந்திட்டசாஸ்திரத்தைவொவ்வொன்றாக
வாகாகமலேபோலநிகண்டாய்க்கோர்த்தேன்
மறைந்திட்டமறைப்பெல்லாம்வெளியதாக
வாதமென்றபிறட்டையெல்லாம் வாகாய்சொன்னேன்
மறைந்திட்டகருவையெல்லாமதொட்டேயாடு
வாதமெனறசொல்லெல்லாநிகண்டிலாச்சே ()

(நவலோகத்தின்பெயர்)

(பொன்)

ஆதிசெய்நாகமாணிபட்டறியது
மாதியதுதனுமன்னியமேருவாம்
ஆதிப்பெருங்காயுத்தம்பீசந்தான்
மாதித்தன்வித்தென்பாமன்னியசொர்ணமே. (உ௨க)

(தங்கம்)

சொன்னத்தகடுசுகமானகுந்தனம்
வன்னப்பசுமைமகத்தானதாண்டவம்
பன்னப்பசுஞ்சுருபாருக்குநாயகன்
தன்னைமாய்நிறைதங்கத்தின்பேருமே (உ௨உ)

(வெள்ளி)

குணுக்குறுதுக்தம்குலாவும்பரசிதான்
இணுக்குயெருமைபியலியகாக்குதான்

தனுக்குத்தசினிதனிக்கோட்டைக்காசா
மனுக்கியல்வஸ்துவாம்வாதங்கருத்தென்னே (௨௨௩)

(இதுவும்அது.)

கருதியதுய்யரன்காணுமதியென்பார்
அருதியவான்மீனாகியரூபாய்தான்
ஒருதியரசிதநேர்பெறுதாரமாம்
பருகியவெள்ளிப்பகுந்திடும்நாமமே (௨௨௪)

(செம்பு.)

செந்திலைராசிசிறந்தரவியென்பார்
பந்தலைதாம்பரம்பழுப்பின்காளிக்கம்
அந்தலைப்பரிதியாகியவிடமாம்
மந்தலைசெம்பின்வழங்கியநாமமே. (௨௨௫)

(காரீயம்.)

காரிகளங்கைகவ்வுக்கிராவணம்
வாரிகருநாக மன்னுஞ்சவளையாம்
பாரிக்கணவன்பலதோஷம்போக்குவான்
ஆரியகாரீயத்தமைந்திடுநாமமே. (௨௨௬)

(வெள்ளீயம்)

வங்கக்குடிலம்மகத்தான வெண்ணாகம்
சிங்கம்பறிக்கிச் சீயறச்சேவகன்
பங்கம்நவலோகம்படுத்துஞ்சூரனும்
பொங்கமாம்வெள்ளியம்புகழ்ந்திடும்நாமமே, (௨௨௭)

(நாகம்)

சீறல்பொருமல்சிறந்திடுபொங்கல்தான்
கூறல்விறைச்சல்கூடியவைம்புகை
மாறல்நற்சோரமருவியவண்ணாகங்கான்
தேறல்நல்வாதிச்சேர்நாகப்பேருமே. (௨௨௮)

(பித்தளை )

ஊத்தல்பரிதாறு உடைச்சல்முக்குறை
மாத்தல்குடவளை மன்னியகாளிக்கம
நாத்தங்பகம் பொன்னைலங்கியசேருவை

ஆத்தல்பித்தளைக்கறைந்திட்டநாமமே ௨௨௯

(வெண்கலம்)

கஞ்சகங்கோஷம்கடிகிபநாதமாம்
வஞ்சகங்கண்ணாடி மாருதமாமணி
பஞ்சகங்கிண்ணி பரவியதன்னோசை
தஞ்சமாம்வெண்கலஞ்சாற்றியநாமமே. (௨௩௰)

(இரா)

கொட்டச்சிவட்டுக்கூனுங்கருலோக
மொட்டச்சிமங்கதமுறியமுறிசல்தான்
வட்டச்சிமட்டுவராகுநல்லோகந்தான்
இட்டச்சியானதிராவிடநாமமே. (௨௩௧)

(இரும்பு)

அயசுகருப்புவடர்ந்தகருவணல்
வயசுகொடுக்கும் வாழ்பூமிநாத
கயசுச்சரோசரங்காலில் நெகிளந்தான்
இயசுபுடச்செய்யிரும்பிடநாமமே. (௨௩௨)

(உருக்கு.)

உருக்குவொளிகறையோங்கு மணிவாளந்தான்
அருக்கிறதீக்ஷன்மயக்கமசுதான்
மருக்கியவுருக்குமலைக்குக்குடோரிதான்
தருக்கியவுருக்கின்சாற்றிமநாமமே. (௨௩௩)

விருத்தம்.

பாகானலோகமதுபதினொன்றுக்கும்
பரிபாஷைநாமமெல்லாம்பாங்காய்ச்சொன்னேன்
வாகானலோகத்தின்பேணாக்கண்டு
மாட்டுகிறயினங்கொண்டுவரிசைகண்டு
தாகானகனன்கொடுசெந்தூரஞ்சுன்னம்
சாத்திரத்திற்சொன்னபடிதாக்கியாடு
ஏகானதொன்றுமில்லையெய்லாஞ்சித்தி
யெடுத்தமுறைதப்பினால்பொய்யுமாமே. (௨௩௪)

## வேறு.

### குருமுறைமார்க்கஞ்செய்யும்படி

(சாரக்குரு)

சாரஞ்சாகுஞ்சாய்த்திடில்வங்கத்தை
சாரஞ்சாகுஞ்சாய்த்திடில்நாகத்தன
சாரஞ்சாகுஞ்சாய்த்திடில்விமிளையை
சாரஞ்சாகுஞ்சாய்த்திடில்சாகுமே. (உகரு)

சாகுஞ்சாரத்தனித்தயிணங்கனிற்
சாகுஞ்சாரந்தாவியகண்டரில்
சாகுஞ்சாரஞ்சமைத்தகல்லுப்பினல்
சாகுஞ்சாரஞ்சவுக்காரந்தாக்கிடே. (உகசு)

தாக்கியசாரந்தனிக்குருவாகவே
நோக்கியுளமனுகர்ந்திடுஞ்சினமும்
வார்க்கியபுழுகொடுவகையெட்டுக்கொன்றுதான்
தூக்கியேபூசிச்சூழப்பிடமிடே. (உகள)

பிடத்தினிநீசாரம்பெருங்குருவாயிடும்
நடத்தியவாதம்நாலுகம்பத்தா து
கடத்திடுபோக்குக்கவரோவெகுகோடி
அடைத்திடுசாரமாதிக்குருவாமே. (உகஅ)

(துரிசுகுரு)

குருவாய்த்துரிசியைக்கூறிடக்கேளுங்கள்
அருவாகுமண்டச்செயநீரில்தோய்த்திடு
திருவாகும்வங்கம்செயமானசுன்னமும்
தருவாகும்பூரமுந்தானுனசூதமே. (உகக)

சூதத்துடனேசுசமானவெள்ளாரப்
போதத்துடனேபுகழானகற்பூரம்
வாதத்துடனேவளர்ந்தகுருவணடு
நாதத்துடனேசுவிந்துகூட்டிடே. (உசய)
கூட்டிடுவேதுபுள்ளியின்வெண்டேளே
நீட்டிடுமுட்டையைநேரேயெடுத்திடு

ஆட்டியேயெல்லாமப்பு துரிசின்மேல்
பூட்டிடக்காய்ந்தபின்புகழக்கேளுமே. (௨௪௧)

அப்பிடுமேலேவாதிவழலையைச்
செப்பிடுசுன்னமாஞ்சிலையுஞ்சுத்தி
ஒப்பிடுவங்கமுருக்கித்துவைச்சிடு
கொப்பிடு துரிசிக்குருமுறையாகுமே. (௨௪௨)..

(சாரக்குரு)

ஆகவேதுரிசியடவாகச்சின்னத்தான்
பாகவேசாரம்பரிவாளசுன்னமும்
தாகவேவீரந்தனித்தபுழுகொடு
ஓகவேபூசியுலரயுலர்ந்திடே. (௨௪௩)

உலர்ந்தகுரிசிகைவூகஞ்சுசுன்னத்தில்
மலர்ந்திநிஞ்சுன்னம்வாதத்துக்காநிதான்
புலர்ந்திடுங்கண்டர்தம்போக்கையறிந்தலேன்
கலந்திடும்வாதத்தில்காட்டுங்குறிபிதே. (௨௪௪)

(இதவுமது)

காரக்குருவுடகலந்தமுறைகேளு
பூரக்குருவிலேபோட்டளாசாரத்தை
நீராய்க்கனாந்துகின்றசெழுவுள்ளே
வீரத்தைப்போட்டுவிளாந்துதுவைத்திடே. (௨௪௫)

துவைத்தேரவியுடசொக்கிடுங்காரத்தான்
அவத்தேபுழுகும்மதில்வீரபூரமும்
கவித்தேநல்லெட்டொன்று கலக்தப்பிக்காய்த்தபின்
கலத்தேநற்பூநீரில்நாட்டியெரித்திடே. (௨௪௬)

எரித்திநீங்கடிகையிருமூன்றழுத்தியு
மரித்திடுங்காரமயம்வணக்கிக் தருவாகும்
பரித்திடுமவேவதைம்பல்பலவாடிடும்
தரித்திடுங்காரஞ்சதகோடிக்கோடுமே. (௨௪௭)

(உப்புக்குரு.)

உப்புக்குருச்செய்பவுறவாகட்டுக்கேள்

அப்புக்குளிர்ந்துலையனைத்துஞ்சுண்ணமாய்ச்
செப்புக்குட்சாரத்தைநச்சேர்க்கச்செயநீராம்
ஒப்புக்குள்நீரிலுநப்போடுசினமே. (௨௪௮)

சினக்கலக்கிச்சிறந்தப்பிற்றேய்த்திடு
பானம்பறக்கப்பாரந்தரவியில்லை
வானஞ்சவுக்காரமெருவிசல்வரதுசேர்
ஈனைநற்காரமுறுவியவீரமே (௨௪௯)

வீரத்துடனேமேதிச்சிப்பூசிடு
ஆரத்துடனேயமுகாயுலர்த்திடு
ஊரத்துடனேலூஷரத்தேவைத்து
நேரத்துடனேநீட்டியெரித்திடே (௨௫௰)

நீட்டிபெரிப்புநேரொருசாமந்தான்
மாட்டியேருப்புமணிபோலநிற்கும்பார்
ஆட்டியவாதமெறுபதுமாடிடும்
கூட்டியவுப்பின்குருமுறைகேளுமே (௨௫௧)

முறையானவீரமும்மூட்டேமுலையும்
கறையானசினமுங்கட்டாய்புழுகொடு
நிறையாகவெல்லாம்நேரொக்கப்பூசியே
சிறையானவைங்குகைக்கசெப்பிட்டுலூதிடே (௨௫௨)

ஊதிடவுப்புவசங்கிட்டசுண்ணமாம்
வாதிடவங்கால்மடிபிடித்தாடலாம்
மோதிடவாதமுறுகுளிபூவிபோற்
காதிடவுப்பிம்மையதத்தவேதியே (௨௫௩)

## பூரக்குரு

குருவாகப்பூரதைக்கூறிடக்கேளுங்கள்
கருவாகுமுப்பில்சாரட்டட்டமனல்
திருவாகுஞ்செயநீர்தான்சேர்ந்தநீர்குள்ளே
அருவாகப்பூரமதிலிட்டுவைத்திடே (௨௫௪)

வைத்திடுசாமமருவிரவிக்குள்ளே
மைத்திடுங்குகையிற்கலந்திட்டூதிடு

நைத்திடும்பூரங்களமாய்க்குருவாகும்
ஐத்திடுங்குருவிலனவற்றபோக்குமே (௨௫)

விருத்தம்

காரமொடுசாரமுடன்கடைரோகு
கடியகொருவுப்புமுசற்பூரமைந்தும்
வாரமொடுபிதவஞ்சாவிரு-த்சஞ்சாச்சு
வாசனைக்குக்கட்டிடப்போம்காரம்சாரம்
வீரமொடுபுனுகிட்டுச்சினஞ்சேர்த்தால்
வெகுமோடிசுண்ணம்புக்கிதுவேபோக்கு
ஓரமொடுசாவாகிறெணுங்காரசார
முருக்கினத்துக்காதியிதுவுண்மைதானே (௨௬)

(திரிகுணசலச்செந்தூரமார்க்கம்)

(வேறு.)

உவரசப்போக்குநூறிலோகப்போக்குந்
தவாசமானசரக்காணபோக்கும்
கவாசகாரசாரத்தின்போக்கும்
மவரசசெந்தூரமாகுங்குறியிதே (௨௭)

குறியெனத்தாளகங்கெந்திமனோசிலே
தெறியெனமூன்றுந்திரியகுணசலாம்
செறியெனக்காரசாரலவணமும்
பொறியெனக்காரசாரகுணசலே (௨௮)

குணசலிதாண்டுங்கூறினேம்நூலெல்லாம்
குணசலுஞ்சூதமுங்கூட்டசெந்தூரமாம்
குணசலுஞ்சூதமுங்கூட்டுமுபாசம்
குணசலுஞ்சூதமுங்கூட்டுசேரக்குக்கே (௨௯)

சாக்கொடுலோகங்கள்சாற்றசெந்தூரமாம்
சாக்கொடுகாரலவணசெந்தூரமாம்
சாக்கொடுசூதமுந்தங்கமுங்கூட்டிடில்
சாங்கொடுசெந்தூரஞ்சதகோடிவேதையே. ()

(களங்குமார்க்கம்

சாரியம்லங்கங்கலந்தகெவுரியும்
ஆரியலிங்கமு மடவானகார்முகி
பாரியலோகம்பரிவாமுபாசஞ்
சாரியாய்சோரமுஞ்சாற்றக்களங்கமே (உ௬௧)

களங்கத்துக்காதியாய்கண்டதிதுவஞ்சும்
அளங்கத்துவொவ்வொன்றி லனேகங்களங்காகும்
பிளங்கத்தவாதிபேரையறியாமல்
உளங்கத்தவித்துவூதியேகெட்டாரே. (உ௬உ)

(மெழுகுவழி)

சாரநீர்பட்டாற்சகலமெழுகாகும்
காரநீர்பட்டாற்கலந்துசிறிதாகும்
பூரநீர்பட்டாற்பொருமிச்சிறிதாகும்
வீரநீர்பட்டால்மெழுகாகும்வேதையே (உ௬௩)

வேதைக்குநல்லவிரைந்தமெழுகுகேள்
மாதைக்கெழுந்சமருமுலைப்பால்வெண்ணெய்
தாதைக்குயெல்லாந்தணகாட்டிவாட்டினும
பாதைக்கும் பாஷாணமபடுமுன்மெழுகாமே. (

மெழுகொடுகுரும்வேதைக்களங்கமும்
தழுகொடுசெந்தூரஞ்சனமந்தமுறையெல்லாம்
கழுகொடுதங்கமும்நற்சூதங்கூட்டினல்
அழுகொடுவேதையகலாமற்நாணுமே. (உ௬௫)

(சூதத்தின்போக்கு.)

இனிமைசிவசத்தியேத்தியவர்னத்தோன்
தனிமைசிவசத்திசங்கரன்விந்துதான்
பனிமைபாரபரம்பாஞ்சிடுந்தூமமாம்
கனிமைசரக்கிற்கலந்திடிம்சிவனே. (உ௬௬)

சிவன்சிவன்றுன்கிறந்திடும்விந்துவாம்
காவன்சிதறிக்காணுநெமுற்றும்
ஆவனம்கேசரியாகியவேந்தனும்
பாவனற்சூதம்பகர்ந்திடுமமே. (உ௬௭)

விருத்தம்.

ஓட்டியயோர்சோட்டமெல்லாஞ்சூதத்தாட்டே
வுற்றுநின்றகாயசித்திசூதத்தாட்டே
ஆடியதோர்குளிகையெல்லாஞ்சூதத்தாட்டே
வாதியென்றவாதமெல்லாஞ்சூதத்தாட்டே
தேடியதோர்செந்தூரஞ்சூதத்தாட்டே
செப்பரியகுருமுறையுஞ்சூதத்தாட்டே
ஊடியதோர்பூரணமுஞ்சூதத்தாட்டே
வுத்தமனேவகாரத்திற்றுயுமாச்சே (௨௬அ)

(புடமார்கம்.)

காடைப்புடத்தான் கடியெருகொன்று
நீடைககவுதாரிக்கிலேயானயெருமூன்று
ஊடைக்குக்குடமோங்குமெருபத்து
ஆடைக்குப்பண்ணியைம்பதெருவென்னே (௨௬௯)

எருவானநூறுயிசைந்தகஜபுட
மருவானலாவிரமகத்தாங்கெஜபுடம்
திருவானபடமுறை செப்பினேப்புத்திதான்
குருவானசொற்போர்குறியாம்கிகண்டிதே (௨எ0)

(ஊற்றின்குறி.)

ஊற்றறைத்தூருக்கியொழுகியவூற்றது
மற்றதுரெண்டுமோட்டுவுருக்கினம்
மற்றற்றநாலுமறித்திடுஞ்சத்தெல்லாம்
கொற்றற்வூற்றின்குறியிதுபாருமே. (௨எக)

(எரிப்புத்திட்டம்.)

ஓங்கியவொற்றைவிற்கதுதீபமாம்
வாங்கியரெண்டுவிறகுகமலமாங்
தாங்கியவைந்துவிறகுகடாக்கினி
வாங்கியமுத்திபகாந்திட்டேடன்பாருமே (௨எக)

(காலத்தின்குறி.)

அத்பசிகார்த்திகையடர்ந்திமோர்கழி
தத்பசிலூக்துநலம்பெறுகாலந்தான

வற்பிசைசத்துக்கள்வருகுமுருக்கினுல்
கற்பிசைவூத்துக்கலந்திடுங்காலமே. (உஎந)

(ஜெயநீர்காலம்.)

தையொடுமாசிதனித்திடும்பங்குனி
கையொடுகாரசாரமுஞ்சுன்னமும்
பையொடுஜெயநீர்பருகியிறங்கிடும்
மையொடுநீர்தான்வருகின்றகாலமே. (உஎச)

(குருமுறைமைக்காலம்)

சித்திரையானிசிறந்திடும்வைகாசி
அத்திரைசரக்கிலடாந்துரவிபடில்
முத்திரைக்குருகாய்மூதண்டவேதையாம்
பத்திரைக்குருவுக்கும்பாங்கான்காலமே (உஎரு)

(செந்தூரகாலம்.)

ஆடியாவணிவடுத்திடுங்கன்னியும்
நாடிதிராவகம்நலமானகாலந்தான்
ஊடியசெந்தூரமுறைவைக்கநல்லது
கோடியேகோடி குலாவியவேதையே. (உஎசு)

(திராவக்காலம்.)

காலமறிந்திடுகடுகவேவூதிடு
கோலமறிந்துகூட்டுத்திராவகம்
ஆலமறிந்துவணைக்கச்செந்தூரமாம்
சேலமறிந்துசிறந்தகுருவிடு

(சிங்கியின்குணம்.)

சிங்குவைத்தயிலஞ்சேமரசம்பண்ணிடும்
தங்கிக்குருவாம்ளவற்றசுன்னமும்
அங்குனிற்சுன்னம்படுமுன்சரக்குசாம
தங்கிற்றவாதிக்குதானுயிர்சிவனே. (உஎஅ)

(கிராவணகுணம்.)

உள்ளூறவாங்குமோடாதுதூமந்தான்
நள்ளூறச்செந்தூரம்கற்களக்கேற்றிடுந்
தெள்ளூறவேதைசேந்தோடுந்தூரந்தான்

அள்ளூறக்கிராவண மதிச்சாரணைக்காமே. (உஎகூ)

(வஸ்துவின்பெயர்)

மாதவிடாயை வளமாய்முறித்திடும்
ஓகநல்விந்துவு மூமிநீருங்கூட்டியே
போதநல்லமுரியு பொருந்துமலைப்பாலும்
வாதநல்லஞ்சும்வஸ்துவின்பேருமே. (உஅ௦)

(இதுவுமது)

பேரானவஞ்சும்பிணையக்கலக்கியே
நேரானசூதம்கில ற்றிடும்வெள்ளோரம்
வாரானபூரம்மன்னியவிந்தான்
காரானகாட்டிற்கனத்தகுருவண்டே. (உஅக)

வண்டானவட்டமாம் வணடிலறும்பள்ளி
தண்டாமுதுகினிற்றுனேயிருந்திடும்
பண்டானவணடின் பரிவானமுட்டையும்
ஒண்டானபுல்லினுயர் நுனைப்பூச்சியே. (உஅஉ)

பூச்சியினோடுபுனுகுசவுக்காரம்
ஆச்சியகோழியடவானவெண்மலம்
மாச்சியனேசிலை மசக்தானவங்சநீர்
ஓச்சியிதுவெல்லாமொக்கவனைத்திடே. (உஅ௩)

அனைத்தகுழம்பை வப்பிடுகண்டாமேல்
வினைத்கரவியினில்விளங்கிக்குருவாகும்
நினைத்தநற்சூதமே நிர்மூஷந்திற்சட்டுமே
நனைத்ததலையது நற்கற பாமே. (உஅச)

(துரிசிகுரு)

ஆமதுரா ா மடக்கவழலையால்
தாமதுயிட்டுச் சவம்போல் மறித்திடு
ஓமதுவழலைதா னு வக கலத்தில்
ஓமதுவஸ்துவின் னுறுதியும்போச்சுதே. (உஅரு)

போச்சுதென்னுதே பூசித்துரிசிமேல்
தாச்சதுகாய்ந்தபின் தானேகவசங்கேள்

காச்சிதுகந்பூரகிலாசத்துச்சுன்னமும்
வாச்சிதுசூடனும்பவளமாய்ச்சரியிடே. (உஅசு)

இட்டதுரோகித்துவியல்வாகவெண்கரு
மட்டதுவாறதுமத்தித்துமேற்பூசி
ஒட்டதுசிலைவுருகவேவொண்ணிட்டு
நட்டதுவெய்பலில்நலமாகக்காச்சிடே. (உஅஎ)

காச்சியெடுத்துகடுவங்காரமும்
ஓச்சியுருக்கிவுருகிலமுத்திட்டு
ஆச்சிதுரிசிலகண்டமகாகுரு
பாச்சியவேதைபரிவாமுறுதியே. (உஅஅ)

உறுதிக்துறையிதுவுத்தமமாகிதான்
அறுதித்துறையிதுவாடலாஞ்சுன்னங்கள்
பெறுதிப்புகைநீர்பேரானவித்தையாம்
எறுதிச்செயநீரொளிதானவித்தையே. (உஅகூ)

வித்தைக்குவாதிமேலானதுரிசுதான்
மைத்தைக்குவாதிவயஸ்தம்பஞ்செய்திடும்
கத்தைக்குவாதிதனிச்சூதங்கட்டிடும்
பத்தைக்குவாதிகுருபாரத்துரிசியே. (உகூய)

(சுன்னமுறை)

ஊகியசுன்னமுசுங்கமுதற்றாம்
மாதியபூநீறுமருவுமொண்டாந்தர
மாதியுபாசமருவமூன்றுநதாம்
கோதியசெயநீர்கொடுநாலாம்வித்தையே. (உகூக)

நாலாம்வகைக்குநாயகன்கண்டாற்றான்
மேலாமவகைநானவிளங்குத்திராவகம்
சேலாமிதுக்கெல்லாஞ்சேவகன்சவ்வீரம்
மாலானதங்கம்வாதத்திற்றுபெண்ணே. (உகூஉ)

(மாதவிடாய்)

துடக்கதுதீட்டஞ்சுரோதரத்தமாம்

அடக்கதுசோரமறிவானசொன்னீர்தான்
நடக்கதுகாட்சியாம்நாரிமருந்தது
தடக்கதுசத்திதன்னுகப்பேருமே. (உகூங)

நாதஞ்சரீரம்கலமானயின்னீர்தான்
போதந்திரோதாயிபொங்கிய்வெள்ளமாம்
மாதமபெருகிவருதின்றசென்னீராம்
வேதம்பிறந்ததுவிளங்கியதிட்டமே. (உகூச)

(சுக்கிலம்)

பாரஞ்சுகம்பரிவானவிந்துவாம்
மாரதஞ்சுக்கிலமயக்கியகாமநீர்
கோரதம்விந்துகொடியசிகாரமாம்
சாரதங்காமஞ்சரீரத்தினானுமே (உகூரு)

ஊனாகிநின்றவுயிராய்ச்சிவனாங்
வானாகிநின்றமருவியவிண்ணுச்சு
தானுச்சகலமாய்த்தாபரசங்கமாய்க்
கோனுகுஞ்சுக்கிலங்கூறியாமமே. (உகூசா)

(பெண்காமகளை)

களையாந்திரிதிகன்னிக்குக்காமநீர்
குளையானயோனியிற்கூறியவிந்துவாம்
விளையானபூமிவெதுமபியகாமநீர்
தளையானயோனியின்தன்களைநாமமே, (உகூஎ)

(முலைப்பால்)

அமுதகலசமடங்காதபச்சைதான்
குமுதச்சரீரக்கொள்கியபானமாம்
திமுதச்செயநீர்சிவநாமவிந்துதான்
தமுதமுலைப்பால்சாற்றியநாமமே. (உகூஅ)

(அமுரி)

அமுரிலவணமடங்காதவாருதி
கமுரியவூசிநீர்கடுமுலைத்தங்கநீர்
தமுரியவீரநீர்சடக்கிற்செய்நீராம்
வமுரியமூத்திரம்வழங்கியநாமமே (உகூகூ)

ஆகியனைவங்துநீரடவனாமங்கற்
போகியவஸ்துவிற்பூகமுமஞ்சிது
பாகியவஞ்சிற்பலபலபோக்குமாம்
தாகியவஸ்துவிற்சகஸ்திரங்கவருமே (௩௰)

(பஞ்சபூகம்)

கவரானவீரங்கருதியகூதமுங்
தவரானபூரமும்தனித்துவுரத்தோடு
பவராங்குருவண்டுபாரஞ்சுபூகந்தான்
நிவரானநீரில்நோய்க்கரைத்திடே. (௩௰௧)

(துரிசிகுரு.)

கரைத்தேயரைக்கையிற்காட்டுபரிரெக்கு
நிரைத்தேயரைத்துநேராங்துரிசிக்குத்
தரைத்தேநற்பூசித்தாக்குரவியிலே
பரத்தேபொருமிபாற்கிற்குருவாமே (௩௰௨)

குருவிதுவஸ்துவின்கூறுணவித்தைதான்
திருவிதுமெத்தத்திறமானவேதையாங்
கருவிதுவென்றுசாற்றினரீசன்றன்
கருவிதுவெல்லாங்காட்டியவாறுமே. (௩௰௩)

(விருத்தம்)

பலபலவாக்துறையெல்லாம்விரித்துநன்றாய்ப்
பாங்கானவங்கமெல்லாம்நிகண்டினாலே
பலபலவாங்துறைபேதம்நாமபேதம்
பண்பானசொற்பேதம்பாகபேதம்
பலபலவாம்வஸ்துவொடுகுருவின்பேதம்
பாச்சுகிறசந்தானகிராவணத்தின்பேதம்
பலபலவாய்க்கிடவாமல்நிகண்டுசொன்னேன்
பராபரமாஞ்சின்மயத்தின்பரவிநாட்டே. (௩௰௪)

(வேறு.)

(தாம்பரகுரு)

தாம்பரங்தானுங்தகடாயடித்திடு
ஓம்புபுளியிலேபோலேநறுக்கியே

தேம்புராணுப்பலஞ்சிறுகவெடுத்திதேக்
கோம்புபழச்சாற்றிற்குமட்டிக்கழுவிடே. (௩௱௫)

கழுவியெடுத்துகளிம்பெல்லாம்போக்கியே
கொழுவிக்குதிரைப்பல்பாசாணந்தானது
தழுவிலராசன்றன்தாணுலெடுத்திடு
அழுவியவீரமதுவொண்டுகரசே (௩௱௬)

காசிடைநாலுகலந்திடுகெந்தியைக்
காசிடைரெண்டுகலப்பாய்சவுக்காரங்
காசிடைமூணுகழியதோர்கல்லுப்பு
காசிடைதாணுங்கமிஞ்சுதங்கேளுமே. (௩௱௭)

கேளேயிதுவெல்லாங்கெடியாப்த்திராவகம்
நாளேயிதில்விட்டுநலமாயுரைத்திடு
தாளோநற்றும்பரத்தகட்டிலிதுபூசி
வாளேரவியில்வளமாயுலர்த்திடே. (௩௱௮)

உலர்த்தியபின்புவுறக்கப்புடங்கேளு
புலத்தியகொடிவேலிப்புசழாகும்வேரோநீ
அரைத்திடுகடுத்தேங்காயமட்டதுவே
மலத்திக்குகைபோல் வளமாய்ப்பிடித்திடே. (௩௱௯)

பிடித்தச்குகைக்குள்ளேபேராகமுன்செய்த
அடுத்தத்தகடுவதுக்குள்ளேவைத்துநீ
மடித்தேமேல்மூடிமண்சீலைமேற்செய்து
தடித்தயெருவுந்தன்புளிப்புராணியே. (௩௱௰)

புராணியினோடுபுசழாய்நறுக்கிட்டே
அரணியெருவையடிமுடிவைத்திட்டு
தரணிக்கேசபுடந்தான்போட்டுத்தீயிடக்
கரணியசெம்புகனத்தகுருவாமே (௩௱௰௧)

குருவினிடைக்கிக்கூட்டிடுசாரத்தை
அருவியயெட்டொன்றுவதிலிடுவீரத்தை
தருவியயெட்டொன்றுதான்போடுவெள்ளையை
மருவியொத்துவளமாயுருட்டிடே. (௩௱௰௨)

இட்டிடண்டோட்டிலீசையவேசிலைசெய்
மட்டிடுபிடமும்வளம்பெறவைத்திடு
கொட்டிடுகலவத்திற்குமட்டியரைத்திடு
தெட்டிடிபணியிற்செயநீருமாகுமே, (௩௱௰௩)

(தாம்பரச்செயநீர்.)

செயநீர்மசத்காஞ்செயநீரிதன்பேர்
அயநீரைவார்த்துவரைத்திடுசூதத்தை
பயநீர்மெழுகாகும்பார் பாருசுந்தரா
தயநீரிற்சூதந்தானதன்செயங்கேளுமே. (௩௱௰௪)

கேளுவிச்சூதமுங்கெடியானதங்கமும்
நீளுஞ்சமனாய்நேரதின்மேற்சுத்தி
வாளியுருக்கமணிபோல்வாடிடும்
தாளிருக்குருவாய்த்தான்செய்பப்பாருமே. (௩௱௰௫)

(சூதக்குரு)

பாருமணிமேலேபாங்கானவீரந்தான்
தாருசவுக்காரங்காணசுன்னமும்
கோருந்துரிசிக்குருவுடன்பூரமும்
பேரரும்புழுகும்புகழ்திடுஞ்சினமே (௩௱௰௬)

சினத்துடனேசிறப்பாகவாறுந்தான்
தானமணிக்கிச்சமனாகத்தூக்கிடு
ஊனொத்தவாயநீராலுறுகவரைத்திடு
வானொததமணிமேல்மருவவும்பூசிடே (௩௱௰௭)

பூசியுலர்த்திப்புகழுறக்காய்நசபின்
மாசியநண்டோடுவெளமாய்ப்பொடிசெய்து
ஓசியேகீழ்மேலுமுறுகணிக்கேயிட்டு
ஆசிக்குகைக்குள்ளமுத்திபுடம்போடே (௩௱௰௮)

(ஷைகுருவில்சர்க்குருவாக.)

புடங்கான்கனபுடம்பேராங்கெசபுடம்
அடங்காணிதுக்குவமாத்தியிட்டி
குடங்தான்தினமூன்றுகுளிர்ந்திட்டபின்புதான்
இடந்தானேமீசானமேத்திடுபூசையே (௩௱௰௯)

பூசைக்குயீசன்புகழாம்பராசத்தி
ஆசைச்கணேசனுநிமகாநந்தி
நேசக்கிச்சூலம்நிறைந்தநிற்வாணி
பாசைக்கிப்பாதம்பரிவுடன்போற்றுமே. (௯௨௰)

போற்றியேதீட்சைகூடப்புகழாய்ச்செபித்திடு
ஆற்றியேசூதக்குளிகைக்குருவாகும்
மாற்றியேவர்மத்தைவைத்திடிற்காணுது
பேற்றியேசூதக்குருவின்முறையிதே (௯௨௧)

இந்தக்குருவில்சரக்குகள்சூருவாக.

முறையானகுருவொடுமூட்டுப்புழுகுநீ
கறையானசீனமுங்கலந்தேயிழைத்திடு
துறையானசரக்கெல்லாம்தொட்டேபிரட்டியே
நிறைவாகவூதிடநேரேகுருவாமே. (௯௨௨)

குருவானதொன்றிற்கூட்டிவீரத்தைக்
திருவானலிங்கமுஞ்சேர்த்துயிழைத்திடு
உருவானநவலோகமூட்டுநூற்றொன்றுக்கு
குருவானதிலைசமாத்துதப்பாதுவாமே (௯௨௩)

வாறுகேளொவ்வொன்றில்மகாகோடிவித்தையாம்
தாறுகேளொவ்வொன்றிற்சங்கவரைவேதை
கூறுகேளொவ்வொன்றிற்கோடானகோடிதான்
ஆறுகேளொவ்வொன்றிலடங்சாதவேதையே (௯௨௪)

(சரக்குவுருக்கினம்,)

வேதையுருக்கினம்விளம்பக்கேள்சுந்தரா
மாதையற்சூதமகாகுருவிற்காரமுஞ்
சாதையாய்நின்றசவாதினிற்கூட்டியே
பேதையாய்மத்தித்துப்பேணியெடுத்திடே (௯௨௫)

எடுத்தேசரக்கானவெட்டெட்டிற்பூசிபே
மடுத்தேயுருக்கமணிபோலவாடிடுங்
தொடுத்தேநவலோகஞ்சூட்டுநூற்றொன்றுதான்
படுத்தேதிலைசமாற்றுப்பத்தாகும்பாருமே (௯௨௬)

பாரேசாக்கைப்பரிவாயெடுத்துநீ
சேரேயினத்தின்மேற்செந்தூரம்பூசியே
காரேயுருகக்பண்விட்டு வடிடும்
தாரேபொருநூறுதான்தொந்தமேறுமே. (௩௨௭)

ஏறுமேயிப்படி யேட்டெட்டும்வெவ்வேருய்
கூறுமே வொவ்வொன்றிற்கோடானகோடி தான்
தாறுமேசொல்லச்சதகோடிசங்கமாம்
நாறுமேவாசனைநாட்டலாம்வேதையே. (௩௨௮)

வேதைக்கவரைவிரித்திடப்போகாது
மாதைக்கியிசவகுத்தமுறைப்பாடு
காதைககிச்சித்கர்கவர்கோடிசெய்தார்கள்
போதைக்கிப்பாடிப்புதைத்துவைத்தார்களே ()

வைத்தோர்முன்றான்வாழ்செய்சூதமுங்
கைத்ததோர்சீனமுங்கடிகியவெள்ளியுங்
கைத்தகோர்ரெண்டுஞ்சாரணரிருக்கியே
கைத்ததொருமணியாம்நலமாய்யெடுத்திடே

(வெள்ளிக்குரு.)

எடுத்தமணிக்கியிசையவேபூசிட
மடுத்தசவுக்காரம்வளமானவீரமும்
மடுத்தேபுழுகுமகிழ்நெடுசீனமும்
தடுத்தங்குகாளகந்தானஞ்சுங்கேளுமே (௩௩௧)

கெளோரசிசமணிக்கிடைகூட்டியே
தாளேவாய்நீராற்றயங்கவரைத்துநீ
நாளேமணிக்கிநலம் பெறப்பூசியே
சூடேரவியிற்சுகம்பெறவைத்திடே (௩௩௨)

வைத்தேநல்லண்டம்வளமாய்ப்பொடிசெய்து
வைத்தேமணிக்கிச்சுடுங்கவசமேவிட்டு
வைத்தேகுகைக்குள்நலமாயமுக்கிட்டு
வைத்தேநல்வாய்க்குத்தனிச்சிலேசெய்திடே (௩௩௩)

செய்தேகனபுடம்சிறந்திடுமுன்பேலே
ஐதேயீசானமாத்தாளைப்பூசைசெய்
கைதேகுளுந்தபின்காட்டியெடுத்திடு
மைதேரசிதமாங்குருவாகுமே (௧௫௪)

(பாஷாணக்குரு)

ஆமேகுருவுலணைத்திடுவீரத்தைத
தாமேசவ்வாதுந்தனிகாரங்கூட்டியே
ஓமேயினைழத்துவுறுவெள்ளைக்கப்பிநீ
தேமேயுருக்கிற்சிறக்கமணியாமே (௧௫௫)

{ தாளக-அரிதாரம்- திமிளை - மிருந்சார்,
சிங்கி- கெவரி இத்ற்குமரசிதகுரு }

மணியையெடுத்துவாய்நீருரைத்திட்டுத்
தணியவேவெள்ளையிற்றனெங்குபூசியே
கணியவுருக்கிகாட்டுநூற்றொருந்தந்தான்
அணியாயெழுமபியாடிடுந்தொங்கமே (௧௫௬)

தொங்கத்திலொன்றிகூட்டுவாய்ச்செம்பிற்
கந்தத்தில்வக்கங்கடியதோர்நாகத்தில்
சங்கத்தில்நூற்றொன்றுகாக்கக்கடிதமாம்
உந்தொத்தமாற்றுவொருபதினைந்துமே (௧௫௭)

(அஞ்சுசரக்குகனிக்களங்கு)

நஞ்சானதாளகம்நலக்கவரிகாரம்
கஞ்சதிமிளைக்கூடியமிருதாரம்
தஞ்சாங்கெவுரிதானஞ்சும்நீகேளு
ஓஞ்சாகமுன்போலொவ்வொன்றுருக்கிடே (௧௫௮)

உருக்கியவொவ்வொன்றையோருபுப்பூசியே
தருக்கியுருக்கிடத்தானூறுதொங்கமாம
பருக்கிவொவ்வொன்பாச்சவேலோமத்தில்
மருக்கியநூற்றொன்றுமாட்டாசிதமே (௧௫௯)

ரசிதக்குருவுக்குநலமானசிளமுங்
டசிதப்புழுதும்பாங்கானவீரமும்

மசிகவெடுத்து வளமாகமதநிச்சு
எசிதவேயெட்டாஞ்சரக்கு மேல்மாட்டிடே (௩௬௰)

மாட்டியேயொவ்வொன்றுய்வைத்தூதச்சுன்னமாம்
நீட்டியேசுன்னமும்நேர்வீரகாரமும
பூட்டியேவாட்டப்புகழாய்ச்சிவந்திடும்
காட்டியேலோகத்திற்காண்பாய்க்குறியுமே (௩௬௧)

குறியானலோகங்கொடியரசிகமா
மறியாதபோக்குமாமிந்தப்போக்குதான்
நெறியானதங்கமும்நேர்வெள்ளிவெண்டும்
பொறியாடிநாற்போற்பொக்கிதிற்கோடிபே (௩௬௨)

(சுரச்வசபநீ,)

உவருமண்சுண்ணமூமூட்டிக்கலக்கியே
தவருங்கிளிஞ்சிதானேயதிலிட்டுக்
கவரவெடுத்துக்கடுவெள்ளையாக்கியே
திவரவெடுத்துத்தேய்ச்சுக்கழுவிடே (௩௬௩)

கழுவுக்கிளிஞ்சிக்கடுகவுலர்த்திட்டுத்
தழுவும்பலமெட்டுத்தானே யடுந்துநீ
கொழுவும்வெடியுப்புக்கூட்டிடுபலம்நாலு
ஒழியமரைத்துவோட்டினில்வைத்திடே (௩௬௪)

வைத்தநின்மேலேமறுநாளுலர்த்தியே
தைத்ததிமேலேதனிச்சீலைமண்செய்து
நைத்திடத்தானேநலமாய்ப்புடம்போடு
மைத்திடப்பாருவட்டுப்போலாகுமே (௩௬௫)

வட்டையெடுத்துமருளப்பொடிசெய்து
நட்டியகல்லுப்புநாட்டுயிருபலம்
ஒட்டையசீனமொக்கவொருபலம்
தட்டையரைப்பலந்தான்காரம்போட்டிடே (௩௬௬)

போட்டிதுவெல்லாம்பொடித்திடுமைபோல்
நாட்டிதிற்சாரம்நலமாய்ப்பலம்நாலு

மூட்டிக்குகைக்கீழ்முறையாய்ப்பொடியிட்டு
தாட்டியதின்மேலேசாரமும்வைத்திடே (௩௪௭)

வைத்ததின்மேலேவளமாய்ப்பொடியிட்டு
தைத்ததிடநன்றாய்த்தானேயழுத்திட்டு
கைத்திடச்சில்லிட்க்சட்டியேசீலையும்
மொய்த்திடவெளியிலேமூட்டிப்புடமிடே (௩௪௮)

இட்டபிடத்தையியல்பாகவாங்கியே
கொட்டுநற்சாரங்குறிப்பாயெடுத்திடு
அட்டேபொடியையரைத்துத்தூளாக்கியே
பட்டேமுன்போலப்பாங்காயழுத்திடே (௩௪௯)

அழுத்தியேமுன்போலனலேறப்போட்டுவா
கழுத்திடப்பிடந்தான் கண்டுகண்டேரிடு
நிழுத்தியேயேழுநிறைபுடந்தீர்ந்தபின்
துமித்தியசாரந்துடிபடச்சாடுமே (௩௫௰)

சாகுநற்சாரமுஞ்சமனண்டவேரடுந்தான்
வாகுடனன்றாய்மருளவரைத்திடு
ஓதுந்திமூன்றுவூரலைவத்துப்பின்புகான்
பாங்குகையினிற்பாச்சிடக்கேளுமே (௩௫௧)

கேளேகுகையிற்கெடிரெண்டுகாசிடை
தாளேகாரந்தாக்கியுருக்கையில்
காளேநற்சாரப்பொடிசிதிலூட்டிடு
கேளேபொடியெல்லாங்குமுறவுங்கொள்ளுமே ()

கொண்டேயுருகுங்கொடியநற்காரந்தான்
தண்டேநற்சல்வத்திருணிலைக்கொட்டியே
வண்டேயரைத்துவழுகதிடுபீங்கானில்
அண்டேசெயகீர்தானுறுபோலாடுமே (௩௫௩)

ஆறுபோல்நிறைவழகானநீரிலே
தாறுபோலவீரந்தனனெடுபூரமே
வாறுபே[illegible]வழலையின்சுன்னமும
கூறுகேள்மூ[illegible]றுமுக்காசிடைபோட்டிடே (௩௫௪)

போடேபொடித்துப்பொருங்கக்கலக்கியே
வாட்டேகுளுங்கவிடத்திலேவைத்திடு
நீட்டேசிவனுங்தேவியும்பூசைசெய்
காட்டேயின்னிரிற்கறைகொள்ளாவித்தையே. (௫௫௫)

வித்தைபிறங்கதுமேலானசாரத்தில்
வித்தைபிறங்கதுமெய்க்குருவண்டத்தில்
வித்தைபிறங்கதுமேலாமவழலையில்
வித்தையிதற்குள்ளேவேணடியகாட்டியே, (௫௫௬)

(ஊஞ்சல்)

(துரிசிச் செயநீர்)

ஆட்டவேதகந்தியாலடவாயுநிக்கீடு
நீட்டவேயண்டொடுநிலேக்கவதில்வைத்து
பூட்டற்றசவ்வீரம்புகழப்பலமொன்று
ஊட்டியகட்டியூஞ்சலுக்கட்டிடே. (௫௫௭)

கட்டிவூஞ்சற்கீழ்க்கடுந்தீப்பிடமிட்டு
ஒட்டிடீயபிட்டவூசலிலாட்டிடு
தட்டியேசாரநீர்கடவிடுதுள்ளிபோல்
ஒட்டியேவீரமுருகமெழுகாமே (௫௫௮)

மெழுகானவீரத்திலூட்டிடந்தங்கந்தான்
தழுகாவிராகனதணியலீக்கொடு
ஒழுகாதவொவ்வொன்றூட்டிடக்கின்னும்பார்
நழுகாதெடுத்துநற்பீங்கானில்வைத்திடே. (௫௫௯)

வைத்ததுரிசிவளமாய்க்குருவைத்தான்
தைத்தேமெழுகுமாற்றுனெட்டுக்கொண்ணிடு
ஒத்தேசபிசைந்துவுகைத்துட்பூசைசெய்
வைத்தேகடவுபரிசனவேதையே. (௫௬௰)

பரிசனவேதையாமாங்காகச்செயநீரில்
பரிசினவீரமுபபூரமுஞ்சூதமும்
கரிசினவுமுங்கவுருங்குருவண்டுங்
கரிசினவருப்புள்ளதுருவண்டின்மூட்டையே. ()

6

(சூதம்சாக)

முட்டையினோடுமுகிர்ந்தகருநாபி
சட்டையின்கோழிப்பரிவானவெண்மலம்
தட்டைமனோசிலைச்சவுக்காரச்சுண்ணமும்
மட்டையனாத்துவாள்கணைட்ந்தப்பிடே. (௩௬௨)

அப்பிரவியில்லாரவேகாய்யில்
ஒப்பிச்செயநீருறவுறப்பூசிடு
தப்பிக்குருவாய்க்குவளமாமடசூதத்தில்
செப்பிலெடுத்துச்சிறக்கவும்வைத்திடே, (௩௬௩)

வைத்தகுஃவில்லார்த்துவைசூதத்தை
வைசத்தியதிங்களிற்காணுமைலுணடிடும்
ஒத்தக்ரேருவக்குளுறமவாறுசூதத்தை
வைத்தியமென்றுநலமபெறத்தின்னுமே. (௩௬௪)

இணைணுமுமிபோலாஞ்செந்துபொருமிடும்
பணைணுரசமிட்டுப்பாச்சுசெயநீரைத்
தண்ணுங்குருவுக்குக்காலபத்துஞ்சூதஞ்சாம்
ஒண்ணுநிறுக்கவொக்கவும்நிற்குமே. (௩௬௫)

நிக்கச்செயநீரில்நீட்டமருந்துகேள்
ஒக்கவேநாபிவுறவாளைபூரமும்
தக்கவேசவ்விரந்தாளுருங்குருவண்டு
மக்கசவுக்காரம்வாள்காரங்கூட்டியே (௩௬௬)

கூட்டியனாத்துக்குழப்பிச்செயநீரில்
ஊட்டிப்பிசறுவுறுகுருசூதத்தில்
ஆட்டியலர்த்துவடவைகச்சூதம்சாம்
நீட்டியசூதம்நேராகமெல்லுமே. (௩௬௭)

மெல்லவேசூதமிநிம்விதங்கேளுஞ்சுங்கரா
பல்லவேகாசும்பரிவானதாளகம்
செல்லவேவீரம்சேர்மூன்றுஞ்சூதம்நேர்
அல்லவேசம்பழச்சாற்றிலனைத்திடே. (௩௬௮)

ஆனைத்தேபதங்கமடவுருவெடுத்திட்டு
தூரத்தேகுருவாங்குரிசியில்நீட்டிடு

தளாத்தேயிலைத்தின்னுங்கனிச்சும்வாராதே
பளாத்தேயிதின்முறைபாங்காகக்கண்டிடே. (௩௬௯)

கண்டிடுபிச்சுதங்கண்டார்க்குப்போசனம்
தண்டிடுபிச்சுதந்தாளேபுதைக்கக்கேள்
பண்டி.நாலுபலந்தூக்கிக்கொண்டிதை
ஒண்டிடுபீசமுறவிடக்கேளுமே. (௩௭௦)

கேளுமேதங்கக்கெடியாகச்செம்பாக்கி
நாளுமேநாலுவிராகனதகடுசெய்
ஆளுமேகுகமதமேலேபூசிட்டு
வாளுமேவெய்யலில்வளமபெறக்காச்சிடே. (௩௭௧)

காச்சிததகட்டைக்கனக்கப்பொடிசெய்து
ஓச்சியேகுகத்திலூறவாய்க்கலங்கிட்டு
பாச்சியனைத்துப்பாச்சிக்குப்பியில்
ஆச்சியகுப்பிவாயடவாயடைத்திடே. (௩௭௨)

(தங்கச்செம்புசெயநீர்.)

அடைத்திட்டகுப்பிமேலப்பாமருந்துகேள்
நடைத்திட்டவஞ்சுப்பூநலமாமிருகாரம்
படைத்திட்டசாரம்பாங்கானசுண்ணம்பு
தடத்திடங்கூட்டிச்சமபழத்தாலாட்டே (௩௭௩)

ஆட்டியேயப்பிபடவாயுலர்த்திட்டுக்
கூட்டியேநன்றாய்க்குதிரையின்லெத்தியில்
பூட்டிக்குழிக்குள்ளேபுதைப்பாயாறுதிங்கள்
நாட்டிக்கிடந்தபினநலமாயெடுத்திடே. (௩௭௪)

எடுத்திடுகுப்பிக்குள்ளிருக்குட்செயநீர்தான்
மடுத்திடுவேறேவளமாய்வடித்திட்டு
நடித்திடுசெங்கநாட்டிப்பலம்ரெண்டு
அடுத்திடுந்தாளகம்நாப்பலங்கூட்டிடே. (௨௭௫)

கூட்டுமனோசிலைதுரையாதொருபலம்
நீட்டுசவ்வீரம்நேரேபலமொன்று
ஊட்டுவனைப்பலமுறக்கட்டுக்கல்லுப்பு

ஆட்டுயிதுவெல்லா மந்தநீர்விட்டுமே. (௩௭௬)

(காரியக்கட்டு)

விட்டேயனைத்துவெருவிடுசூதக்கிற்
பட்டோநற்காரியம்பாங்கானகட்டுகேள்
ஓட்டேநற்கெந்தகமுருகப்பலமொன்று
நட்டோநர்சூதந்தானடபலம்காலுமே. (௩௭௭)

காலொடுகெந்தகங்கடுகப்பொடிசெய்து
மாலொடுகோரமாட்டதிற்காற்பலம்
சேலொடுமூன்றுந்திறமாய்ப்பொடிசெய்து
ஏலொடுகாரியத்திருபலத்திந்திடே. (௩௭௮)

ஈய்ந்திட்டகாரியமெளிதாகக்கட்டுண்டு
தாய்ந்திட்டதட்டிற்றவளம்போலாயிடும்
பாய்ந்திடுவேகம்பரிவாய்சரக்கொடு
ஆய்ந்திடும்வாதிக்கியாதிகாணுகமே. (௩௭௯)

(நாகக்கட்டு.)

நாகத்தைக்கட்டநலங்கேளுசுந்தரா
பாகொத்கவப்பிரகம்பரிவானகாந்தமும்
வாகொத்சுரிமிளைவழங்கியகாரமுந்
தாகொத்தசாரமுஞ்சவுக்காரச்சுன்னமே. (௩௮௰)

சுன்னத்துடனேதுடியானகல்லுப்பு
தன்னொக்கவேழுஞ்சமனாகக்கூட்டியே
கன்னெத்தெருக்கம்பாற்கலந்தேயணைத்திட்டு
பன்னெத்தநாகமபலமொண்டெடுத்திடே. (௩௮௧)

(இதுவுமது)

எடுத்திட்டவிரமெழுகுவிதிற்பூசி
அடுத்திட்டனைத்தமருந்தைக்கவசித்து
படுத்திட்டசீலைமண்பாச்சியேயேழுசெய்
கடுத்திட்டதீயிற்கனக்கப்புடம்போடே. (௩௮௨)

போட்டிடநாகம்புசமாகக்கட்டுண்ணும்
நாட்டிடமுன்சூதபலமாயிடைசேரு
கூட்டிடுநாகங்குறையாதொருடலம்

காட்டிடக்காரீயக் கட்டிற்பலமொன்றே, (௩௮௩)
ஒன்றாகச்சூதத்தி லொரறைக்கவரைத்திட்டு
நன்றாகக்குப்பியில் நலக்கவெடுத்திட்டு
கண்ணணவாலுகைக் கவியப்பித்திட்டு
பண்ணைகமுக்தியும்பாச்சிஎரித்திடே, (௩௮௪)
எரித்திடும்போது மியல்பாய்ச்சிலாக்கிட்டு
மரித்திடுங்கயில் வகைகண்டுநீபாரு
கருக்கிடுங்கெட்டியரக்களக்குவெளியோடுந்
தரித்திடுமவருமையுங் காணேடிப்போகுமே. (௩௮௫)
போகவேயீசன் புகழவேநீவாணி
ஆகவேயீச னுத்காள்கணபதி
தாகவேகந்தன தானெட்டுத்திக்கொடு
வாகவேபூசை வளமாகவைத்திடே. (௩௮௬)
வைத்திடுஞ்சூதக்குருவினில்வேதைகேள்
ஐத்திடும்லோகத்திலென்பதுச்சொன்றிடு
கைத்திடுமாத்துக்கலங்காதுசக்தாகும்
வெய்த்திடுசூதக் குருவினில்வேகமே, (௩௮௭)
வேகக்குருவில் வீரத்தைக்கூட்டியே
பாகப்புழுகும் பரிவானசினமும்
தாகப்பரிமேற்றப்பிப்புடமபோட
ஓகொத்ததங்க முறுதிக்குறுவாமே, (௩௮௮)

(சங்கக்குரு,)

குருவாகத்தங்கங் கூறிடுங்காலத்தே
அருவானகற்பமா மாதிமகாகுரு
திருவாஞ்சிவமயங்தேவிக்கிஙாதமா
மருவானதங்கம் மகாகுருக்காணே. (௩௮௯)

(ரசககட்டு.)

காணவேதங்கக்குருவினிலோரிடை
பூணவேசூதக்குருபூட்டதிலமூணிடை
கோடவேவாய்நீராறகுழலவரைதிடு
ஊணவேசூதமுருண்டிடும்பாருமே, (௩௯௰)

(குளிகை.)

பாரேகுளிகை பரிவாய்ச்செய்நீரில்
தாரேதுவைத்துத் தனிவெள்ளிக்கண்டரில்
தூரேபிரட்டிச்சுடவேயில்வாட்டியே
காரேகருமத்தங் காயினில்வைத்திடே. (௩௬௧)

வைத்தேபொருசீலை மண்செய்துமூடியே
கைத்தேபுடமிடக் கட்டிக்குளிகையாம்
பைத்தேகுளிகைக்கிப் பாச்சிடச்சாரணை
தைத்தேகுகைக்குள்ளே நாட்டிடுகுகமே. (௩௬௨)

குகமுருகையிற் சூட்டவேசாரணை
மாதயபூநாகச் சத்திடுமூந்தியே
பேதயப்புடமிட்டுப் பேதித்துத்தள்ளவும்
ஆதயகுகமசுாமுகமாகுமே. (௩௬௩)

முகங்கண்டபின்பு மூட்டப்பிரகச்சத்தை
அகங்கண்டகெந்தகச் சத்திடுபின்புதான்
தசங்கண்டபாஷாணசத்தோடுபாசம்
பயங்கண்டுதீர்ந்துபரிவாய்க்களித்திடே. (௩௬௪)

சுளிக்குமுறைமையைக்காட்டிடக்கேளுங்கள்
அளிக்கின்றசாரமாங்காரமுமையஞ்சு
வளிக்கண்டுகூட்டிமாபுடமேசெய்து
சுளிக்கின்றகுகத்திற்குட்டிடக்கேளுமே. (௩௬௫)

கேளேயுபாசங்கெடிநூற்றிருபதும்
வாளேயறுபத்துநாலுபாஷாணமுங்
தாளேநவரத்தினந்தானொன்பதும்
ஏளேயிருநூற்றுப்பதினெட்டுமாச்சுதே. (௩௬௬)

ஆச்சேநற்பாஷாணமறுபத்துநாலுந்தான்
ஓச்சேயுபாசமொருநூற்றிருபதும்
காச்சேயிருபத்தஞ்சாங்காரசாரமும்
நாச்சேநற்கோளாகும் நவரத்தினமுமே. (௩௬௭)

தினமேநவலோகஞ் சேருபரிச்செமயையும்
அனமேயிருநூற்றுவாமிருபத்தேழும்

கணமேயெ ருகிரங்காட்டிடச்சாரணை (௫௬௮)

குளிகையின்பெயர்.

{ சகடகுளிகை - செவுண குளிகை போககுளிகை
சந்தானகுளிகை - அஷ்ட மாசித்தி குளிகை - க
மலகுளிகை - ஸ்வரூபகுளிகை- }

காமமேயிப்படி காட்டிட மூக்காம்
காமமேயியுங்கவளகுளிகையாம்
தாமமேயெழுகிராமசெய்திடிற்போகினி
வாமமேலொன்பகில்மாற்கசந்தானியே (௫௬௯)

தாணிபதினெண்சிற்றுணட்டமாசித்தி
வாணிபதினெங்கில்மத்தாங்கமலினி
ஊணியிருபத்தொன்றிச்சுரூபமாம்
பாணித்துப்பத்துத்தீட்சையும்பண்ணிடே (௫௭)

பண்ணியேபக்ததீக்ஷையும்பூசித்தால்
ஒண்ணியேகேசாமோங்கியெழும்பிடும்
நண்ணியேவாசிசலமாய்நிலைத்திடும
திண்ணியேகற்பங்கள்சேரவுந்தீர்ந்திடே (௫௭௧)

(கற்பஞ்சாப்பிடப்பாத்திரம்)

தீத்திடுகற்பங்கள் தின்றிடுங்காலத்தே
தேத்திடுந்தேத்தாமாத்தினிட வேரில்
பாத்திடுபாத்திரபணபாகச்செய்துநீ
சோத்திட்டமுரியைக்குமுறவும்வார்த்திடே (௫௭௨

வாத்திடுமுன்பின்வளகாகத்தள்ளியே
தேக்கிடுதேக்தாம்விரையயகற்குள்ளே
காத்திடமுரிகடுகமுறித்திடும்
தூத்திடமுரியின்தோடமும்போச்சுதே (௫௭௩)

போச்சுதேபாத்திரம்புகலக்கேள்பின்னொன்று
வேச்சுதேநாருணடின்வேம்பினிற்பாத்திரம்
ஆச்சுதேசெய்துவடிப்பேபலகற்பம்
நாச்சுதேநெய்யுமநற்றேனுக்காகுமே (௫௭௪)

ஆமேபலபலபற்பங்கள்கொள்ளவும்
ஓமேநற்காக்கமாம்பாத்திரமுத்தமம்
தாமேயிதுமூன்பாத்திரஞ்சாதகம்
வாமேயிதுமூன்றில்லாய்த்திடுங்கற்பமே (௬௫)

(கற்தோஷத்துக்குகிஷாயம்)

கற்பங்கள்கொண்டுகளித்திடும்நாளையில்
சொற்பமாய்த்தாகமுஞ்சூழமயக்கிறல்
நற்சறவெட்டையுமநலயானமூர்ச்சையும்
வற்பிறவந்தால்வாழ்குடிகிஷாயமே (௬௬)

வாங்கவேகாளிசபத்திரிகன்னுடன்
ஓங்கவேசுக்குமுடனிடுசீரகம்
தாங்கவேவொவ்வொன்றுதானேபலங்காலாய்
ஆங்கப்படிநீரிலாழாக்காய்கொள்ளுமே (௬௭)

கொள்ளுமதுரங்கொடியசிறுதேக்கு
தள்ளுநற்கற்கண்டு தான்பலங்காலாய்
அள்ளியநீர்படியாழாக்காய்காச்சியே
தெள்ளியேகொள்ளத்தேகஞ்சிறக்குமே (௬௮)

வேறு.

துரிசிகுரு.

துரிசிபலமொன்றுதூக்கியெடுத்துநீ
பரிதிமஞ்ஞசிலேபலமானுவாங்கியே
தரிசிபழச்சாற்றிற்றுவேயரைக்கிது
உருசு துரிசிமேலுறவாகப்பூசியே (௬௯)

பூசியுலர்த்திப்புகலவேகாய்ந்தபின்
ஆசியசிலேமண்ணடைவாகச்செய்திடு
தாசியெருவிற்றனேபுடமிடில்
வாசியவாசனேக்கண்டபின்வாங்கிடே (௭௦)

வாங்கிடக்கண்டர்வளமாய்வெளுத்திடும்
ஓங்கிடத்தனையுறவாய்ப்பொடிசெய்து
தாங்கியொருபலங்காணுந்துரிசினமேல்
தேங்கிடெள்ளெண்ணெய்ச்சிறப்புடன்பூசுமே ()

கெடி-செயநீர்.

பூசியேயென்னைத் துரிசிப்பொடியெல்லாம்
காசியேமெள்ளத்தாமேயிரட்டியே
ஒசியேவெல்லமுறவதவேத்திட்டுக்
காசியேவெய்யலிற்காயவும்போட்டிடே (சாயிஉ)

போட்டிடுமூனறுநாள்புகழக்காய்ந்தபின்
ஆட்டுந்துரிசியாதிசுருவாகும்
நீட்டிறுகைமிலேநீர்குத்திப்பார்க்கவும்
மூட்டுறுகையிலேமுழுச்சுறுக்கேறுமே (சாயிங)

எறுந்துரிசிகானியல்பாய்ப்பசுப்பில்லை
கூறுந்துரிசிக்கொடுஞ்சுண்ணமாச்சுது
தேறுந்துறைக்கிச்செய்யுமுறைமசேளு
நாறுஞ்சு ர்மதிநாயகனைசொன்னதே (சாயிச)

சொன்னதுதுரிசிசூழ்பலமொன்றுதான்
பன்னநற்சாரம்பாச்சதிலோர்பலம
உன்னியரைசதிடுவோங்கிச்செயநீராம்
கன்னிபவீரங்காற்பலம்போடுமே (சாயிரு)

(வீரக்குருவேதை)

போடச்சிவக்கும்புசழானசெயநீர்தான்
நீடச்சவுக்காரச்சுண்ணமோர்காசிடை
ஊடைக்கரைத்துவையுத்தமநீரிலே
ஆடத்துறையாடநீக்ளுமே (சாயிசு)

கேளுசெயநீரிற்கெடியானவீரத்தைக
ஆளத்தில்வைத்துவனல்மேலவாட்டிடு
தாளநற்சிலேதன்மேலேசுற்றிடு
வாளநற்றிபத்தில்வளமாகவாட்டிடே (சாயிஎ)

(மேற்படி குரு)

வாட்டிடவீரம்வளம யுருக்கியே
நாட்டிடுவெள்ளிமணிபோலேமின்றிடும்
ஊட்டிடவீரத்திடைசங்கங்கூட்டியே
மூட்டிடநன்றாய்முதிரவுருக்கிடே (சாயிஅ)

உருக்குமணியென்பதுலோகத்தில்
தருக்கியநூற்றொன்றாக்கிநீபார்த்திடு
பருக்கியமாற்றுப்பதினறுமாயிடும்
செருக்கியவீரத்தின்செயலிதுவாகுமே. (௬௰௯)

(மகாகுருவிபரம்,)

ஆமேநற்கட்டிவீரமோர்காசிடை
ஓமேநற்றங்கமொருமூன்றுகாசிடை
தாமேயிதுசெணடுநாக்கியருக்கிட்டு
சேமமணியாய்ச்சிமக்கவெடுத்திடே. (௬௨௰)

எடுத்துமணிக்கியியல்காலுக்கொன்றுதான்
படுத்ததழலையுமபாகவீரமும்
அடுத்தபூருவாசற்றசீனமுங்
கடுத்தநற்பூரமுங்காற்பாலிடையிடே (௬௨௧)

(வீரக்குருவில்மகாகுருவேதை)

இடையிதுவெல்லாமிழைக்கரைவெண்கரு
நடையிதுமணிமேகலமுமிட்டூசியே
குடையிதுவெய்யலிற்சுமுறவரைத்திடு
தடையாதண்டோடுசான்பொடிசெய்யே (௬௨௨)

செய்தபொடிக்குள்ளேதிரமயிதுவைத்துப்
பைதருகைக்குள்ளேயச்சிலேமூடிடு
கைதவச்சீலைமண்கமக்குகைகம்பமேல்
உய்தக்கெசபுடமோக்கீபோட்டிடே (௬௨௩)

போட்டேயீசானமபசமூநிர்வாணிக்கும்
நாட்டேநற்றேவிக்குபாகலமாகப்பூசைசெய்
ஊட்டேமதுப்பூசையேங்கிச்செபித்திடு
காட்டேகுளுந்தயிணகடுகவெடுத்திடே (௬௨௪)

எடுத்திதைகப்பாருயிதுதான்மகாகுரு
தொடுத்ததினவேதைதனைச்சொல்வேகேளுநீ
நடுத்தகுருவொருநற்காரங்கூட்டியே
மடுத்தசவ்வாதிட்டுமதித்துவைத்திடே (௬௨௫)

வைத்ததிதைத்தொட்டிகையறுபந்துநாற்

கைத்தகிப்பாதெணக்கைமுறையாகவே
தத்தகைப்பூசித்தானேபிரட்டிநீ
ஒத்ததிலொன்பதுமேலாகத்திலிட்டிடே, (௪௨௬)

இட்டிடக்கேளுவியல்நாற்றுகொன்றுதான்
பட்டிடவாங்கிப்பழுததிடும்பாருநீ
ஒட்டிடமாற்றுவெணபதுகணடிடும்
தெட்டிடுவீரக்குருவினதிறமிதே, (௪௨௭)

வெள்ளிகுரு-ரசிதவேதை,

திறமானவெள்ளிகுருச்செய்யநீகேளு
நிறமானவெள்ளிநேர்மூன்றுகாசிடை
அறமானவீரமதுவொருகாசிடை
குறமாகக்கூட்டிக்குமுரவுருக்கிடே, (௪௨௮)

உருக்குமணிக்குவுறடபூசைநீகேளு
பருக்கியவீரமபடிகம்புழுகொடு
தருக்கியபூரஞ்சவுக்காரச்சுணணமும்
நெருக்கிமணிக்கிரோநாலுகொணடிடே, (௪௨௯)

ஒன்றாகக்கூட்டியுரைவெண்சரு
பன்றாமாசிதமணிமேலேபூசிடு
கன்றானவெய்யலிற்காகவுலர்த்திடு
வன்றானகிளிஞ்சிற்பொடிக்குள்ளேவைத்திடே, (௪௩௰)

வைத்தேகுகையில்வளப்பெறச்சீலைசெய்
தைத்தேகெசபுடம்தானங்கேபோட்டிடு
ஒத்தேகுளுந்தபின்னேங்கியெடுத்திடற்
புத்தேரசிதக்குருவிதுபாருமே, (௪௩௧)

பாரேகுருவிற்பாச்சிடுகாரந்தான்
பாரேகுருவிற்பாச்சுசவ்வாதுதான்
பாரேவுமவனைபாவகைய்மெழுகுபோல்
பாரேயிதனைப்பாணியில்வைத்திடே (௪௩௨)

வைத்ததைக்கொட்டுமருவியவெள்ளைமேல்
கைத்திதைகட்பூசிநாட்டுநூர்வங்கத்தில்
நைத்தரசிதமதாம்பதுமாறுமாம்

ஒத்தநற்செம்பிலொருநூற்றுக்கொன்றிடேன், (௬௩௪)

இட்டமாம்றுவிருபதுதானுகும்
மொட்டிடநாகமொருநூற்றுக்கொன்றிடில்
கட்டிடக்காட்டிடக்களாயில்லாத்தொந்தமும்
தொட்டிடக்குடவன்மேற் சூட்டொன்பதுக்கொறேன் ()

சூட்டிடவெள்ளிசுகமாறிருபதாம்
மூட்டிடவேனைசமூதண்டவெள்ளியாம்
காட்டிடக்காட்டிடக் களாயில்லாதொந்தமும்
பூட்டிடராசிதமாம்போக்கிதுவாமே, (௬௩௫)

அறுபத்துநான்குபாஷாணமும்சுன்னமாக

ஆமேரசிதகுருவிரபுழுகிட்ட
ஓமேநற்சீனமுமுருகும்வழலையுங்
தாமேநவ்வீரமுஞ்சாத்தியேமத்திச்சுக்
காமேசரக்கெல்லாங்கட்டிநீயூதிடே, (௬௩௬)

ஊதிடப்பாஷாணமுபரசத்தோடெல்லாம்
வாதிடச்சுன்னமாமலைமணமுதல்
ஓதிடுநூலெல்லாமுறுதியாய்ச்செலவிடும்
வாதிம்மசுன்னத்தில்வழிகோடிகாணுமே (௬௩௭)

காணுமேமுன்முன்கட்டியபொற்சுன்னம்
பூணுமேவீரமும்புழுகுடனசீனமுங்
தோணுமேவழலையுஞ்சூட்டியேமதகித்து
நாணுஞ்சாரக்கெல்லாமகட்டிநீயூதிடே (௬௩௮)

ஊதிடப்பாஷாணமுபரச்சுன்னமாங்
காதிடக்காரசாரமுஞ்சுன்னமாம்
ஓதிடவொண்ணுகமோரபிரமுகம்
வாதிடவாடுமாசுனைப்போக்குமே, (௬௩௯)

போக்கானவாதித்துரிசிச்சுநீரில்
வாக்கானஷாளவகையெல்லாந்தோச்சுநீ
தாக்காய்கரிம்பாட்டிற்றுனுறைவாட்டினல்
தூக்காய்சசாக்கெல்லாஞ்சுழனறுயிறுக்குமே, (௬௪௰

இறக்குஞ்சரக்கைகவிஸைசயவினைத்திமேல்

சிறக்கவேபூசிச்செந்தூறவாட்டினல்
வறக்குமேமப்படிதொந்நூற்கட்டிடும்
திற்க்குமேமவேதைநிலேநூறுத்தோடுமே ௨௨௧

## பரிகுருசூதம்-கவனகுளிகை.

ஓடுஞ்செயநீருறக்குத்தவீரத்தில்
தேடுஞ்சவுக்காரச்சுன்னமுஞ்சத்திட்டு
நாடும்ரசமதுநாட்டிடுவீரெடை
கூடுஞ்செயநீர்குத்தியரைத்திடே ௨௨௨

அரைத்தமருந்தையப்பியேதங்கத்தில்
நிரைத்தரவியில்நேராயுலத்திட்டு
கரைத்தநல்லண்டோடுகடுகப்பொடிசெய்து
உரைத்தநற்றங்கத்தின்கீழ்மேலுமூட்டிடே ௨௨௩

மூட்டியேமூடி-முதிரக்கெசப்புடம்
ஆட்டியேபோட்டுவாயிலைப்பூசைசெய்
நாட்டியேவாங்குநலமாய்பரிக்குரு
தீட்டியசின்மயஞ்செப்பியவாறிதே ௨௨௪

வாறுனசூதம்ருவிட்பலம்ரெண்டு
பேறும்பரிக்குருபோடொருகாசிடை
மாறும்செயநீர்வார்த்தேயரைத்திடு
தேறுனசூதத்திரண்டுவுருகுமே ௨௨௫

உருகியசூதமூட்டிக்கரண்டியில்
பருகியவெள்ளெண்ணெய்பாச்சியுருக்கிடு
தருகியேவாங்கிற்றுன்பின்குகைக்குள்ளே
சொருகியேகாரஞ்சோரவுமூதிடே ௨௨௬

ஊதிடச்சூதமுருகியேகண்விடும்
பாதிடலோகம்பரிவேதித்திடும்
நாதிடச்சூதத்தில்நாட்டினர்சாரணே
மாதிடமெத்தவாங்கிடுங்கெவுனமே ௨௨௭

## கெவுனகுளிகை.

கெவுனகுளிகையைக்கெடியாயடைக்கிநீ
தவனத்தில்வாய்நீரைத்தானுள்ளேகொண்டிட

புவனத்திற்காசம்போகுமோருசட்டை
எவனத்தினமாயிருப்பாருகத்துக்கே ௨௫௮

### வேறு.

### சாரக்கட்டு-முன்வெடியுப்புநீரில் சரக்கட்டு செயநீர்.

கெந்தகந்தாளகங்கெடியாமனோசிலை
அங்ககர்பூரமதினோடுகூடனும்
பந்தகவீரமும்பரிவாந்துரிசியும்
சுந்தகச்சூதமுஞ்சொல்லோர்வராகனே ௨௫௯

வராகனிடைரெண்டுமாசீனக்காரந்தான்
தராகவெடியுப்புத்தான்ரெண்டுகாசிடை
கராகமுற்காசிடைகட்டியகல்லுப்பு
நிராகப்பதினொன்றுநிறுத்துயெடுத்திடே ௨௬௰

எடுத்தேயிதுவெல்லாமிசையவேகல்வத்தில்
மடுத்தேவெடியுப்புநீரிலாட்டிடு
கடுத்தேநற்சாரங்கலங்காதரைத்தபின்
னெடித்தேநற்சாரமொருபலங்கட்டியே ௨௬௧

கட்டிக்குப்பத்துநாள்கலந்தப்பிக்காயவை
பட்டிக்குப்பத்துப்பாங்காகப்பூசிடு
கட்டிக்குப்பூதிநலமுறக்காய்ந்தபின்
தட்டிக்குக்காய்ந்தபின்றன்மேற்கவசமே ௨௬௨

கவசமிதுமேலேகட்டியகல்லுப்பு
உவசமரைப்பலமுறப்போடுகல்வத்தில்
தவசிபசீனகாரந்தானுமரைபலந்
திவசியகர்ப்பூரசிலாசத்துச்சுன்னமே ௨௬௩

சுன்னமரைபலஞ்சூழமூன்றுங்கூட்டியே
கன்னலமுரியாற்கலங்காதரைத்திடு
பன்னவதின்மேலேபாச்சுக்கவசமாய்
ஒன்றனைசாரமுலரவுலர்த்திடே ௨௬௪
உலந்திட்டபின்புவுறுகளிகிலும்
துலந்திட்டரைத்துவதன்மேற்கவசித்து

புலந்திட்டுலர்த்திப்போபொருசிலைமண்
நலந்திட்டகிளிஞ்சிநீர்கலமாய்த்துவைத்திடே ௩௱௫௫

வைத்தேகலையத்தில்வளமர்கக்கீழ்மேலும்
நத்தேகலையத்துநல்வாய்க்குச்சீலைசெய்
ஞ்கைத்தேபிடமிட்டுக்கண்டிதைவாங்கினல்
ஓத்தேநச்சாரமுறதியாய்க்கட்டுமே ௩௱௫௬

கட்டுநவாசாரங்காணும்பலம்நாலு
ஒட்டுஞ்சவுக்காரச்சுன்னம்பலம்நாலு
கொட்டியரைக்கக்குமிறியிளகிடும்
தெட்டும்பனியிலேசேரவும்வைத்திடே ௩௱௫௭

வைத்தேயரைக்கமகத்தாஞ்செயநீராம்
கைத்தேசெயநீரைக்கலங்காமல்வாங்கிடு
மைத்தேசவ்வீரம்பலங்காற்பொடிசெய்து
கைத்தேசெயநீரில்நலமாகப்போட்டிடே ௩௱௫௮.

போடச்செயநீரிற்புகழச்சிவப்பாகும்
ஆடச்சுருக்காகுமாதிநவாச்சாரம்
தாடக்கணந்தான்சவுக்காரவேகமும்
மூடச்சவ்வீரந்தான்மூதண்டவேகமே ௩௱௫௯

வேகுஞ்செயநீர்தான்வேதாந்தசாரமாம்
போகுஞ்செயநீர்தான்பொற்சடையோனுக்கும
ஆகுஞ்செநீர்தானுத்தாள்கருணையாம்
வாகுஞ்செயநீர்மகத்தாமுதகமே ௩௱௬௰

தங்கக்குரு.

உ.தகத்தைக்குத்தியுறகவரைவீரம்
மதகுத்தத்தங்கத்தின்மேல்நாலுக்கொன்றுதான
பதகொத்துப்பூசிப்பரிவாயுலர்த்திட்டு
பொாதகொத்தநாகரவண்டைப்பொடிசெய்யே ௩௱௬௧

பொடிகீழுமேலுமாய்ப்பொன்னுக்குமுத்தியே
செடிகீழுமேலுங்கெசப்புடம்போட்டிடு

அடிகிமேழவாரியப்பாலெடுத்திடு
துடிகிமெழுடுத்திடச்சொர்ணங்குருவாமே ௬௨

குருவோடுநேராய்க்கூட்டுச்சவ்வீரத்தைக்
கருவொடுபாறையாங்கல்லுப்பிலேபூசி
அருகொடுசாரநீரதுகுத்திப்பூசிடு
கருவொடுகாய்ந்தபினகண்டிதையூதிடே ௬௩

## உப்புகுரு.

ஊதிடநன்றுயுப்பதுசுன்னமாம்
மாதிடவீரமாட்டச்சிவந்திடும்
பாதிடவொன்பதுர்பரிசிக்கவேதையாம்
ஓதிடவுப்புவொருகோடிவேதைமே ௬௪

## உப்புசெயநீர்.

வேதையாமுப்புவிளங்கியசுன்னத்தில்
தாதையாஞ்சாரஞ்சமபாகஞ்செய்துநீ
நாதைபாயாட்டநலமாயுதககமாம்
போதவுதகத்தைப்போக்கொடுவாங்குமே ௬௫

## பூரச்சுன்னம்.

வாங்குமுகத்தில்வாளரபூமிட்டுநீ
ஓங்கியெடுத்துவூதிடச்சுனமாம்
பாங்கியபூரமாஞ்சுன்னமும்வீரமும்
தாங்கியிழைக்கத்தனிசிவப்பாகுமே ௬௬

## பூரச்செந்தூரம்.

ஆகுஞ்சிவப்புதானதுசெந்தூரம்
பாகுஞ்செந்தூரத்திற்பாச்சிடுதாயைத்தான்
ஒமிதுதானேவொன்பதுலோகத்தில்
வாகும்பரிசித்துவாதாடலாகுமே ௬௭

## பூரச்செயநீர்.

ஆமேகற்பூரமாமன்னீருக்கொ ாக்குந்
தாமேநவாச்சாரஞ்சமனகச்சேர்த்துநீ
ஓமேபரைத்திடவோங்குசெயநீராம்
சாமேதுவைத்திடச்சரக்கெல்லாஞ்சாகுமே ௬௮

சாருஞ்செயநீரிற்றாளகந்தோய்த்துந்
வாகுமரவிபடில்மாஞ்சுமலர்ந்திடும்
போதும்வெளுத்துத்தான்புசழுஞ்சுசுன்னத்தில்
ஆகுமேதாளகமதனிற்புடமிடே ௬௬௯

## தாளகச் சுன்னம்.

இட்டிடத்தாளகமெழுந்தமகாசுன்னம்
அட்டிடவீரமதுநேரிடைகூட்டி
ஒட்டிடக்காரமும்லிங்கமுமொக்கிடும்
தட்டிடப்பிரிசனந்தாக்கிடத்தங்கமே ௬௭௰

தாக்கிடுதாளகச்சுன்னமும்வீரமும்
வாக்கிடுகாரமுமருவுஞ்சவ்வாதுடன்
போக்கிடக்கூட்டிப்புகழுங்கபரிக்குத்
தூக்கிடப்பூசிற்சூழவுருக்கிடே ௬௭௧

## துத்தம்தூரம்புவேதை

உருக்கிடச்சத்தாயுரையுங்கபரிதாஞ்
சொருக்கிடிற்றுத்தம்தூரம்புவேதைகேள
பருக்கிடிற்சத்துபணமென்றுதாக்கியே
தருக்கிடிச்சூதந்தானிடைக்கூட்டுமே ௬௭௨

கூட்டும்ரசத்திடைக்குலாவுந்துரிசினை
நாட்டுரசத்திடைநலமானவீரத்தை
நீட்டியவைத்துநெய்வார்த்துசசீலையில்
தீட்டியுருட்டித்திரியாகச்செய்திடே ௬௭௩

செய்ததிரியைச்சிறுதளிக்குள்ளவை
கொய்தகடுநாசிக்கூடுபோற்கட்டியே
பொய்தபுருஷப்பிராமணமேவைத்து
நைதவதுமேமேலநற்செம்புயிட்டிடே ௬௭௪

இட்டேகீழ்த்தீபமிசையக்கொளுத்திட்டுத்
மட்டேயவிக்கமண்டுமேதாம்புரம்
பட்டேபுகைதான்பருச்செம்பிதகட்டிலே
ஒட்டேகறுக்கும்நலமாயணற்காட்டே ௬௭௫

அனல்காட்டிவாங்கினலாணிபதினாறு
புனல்காட்டிடுந்துத்தம்பூண்டபுகையாலே
தனல்காட்டிவாழ்வார்சகலயுகாசித்தாம்
இனல்காட்டுத்தாம்புரமெடுக்குமுறையிதே ௩௭௬

கபரிசெந்தூர வேதை.

முறையானகபரிசத்துப்பலமொன்று
துறையானதங்கஞ்சூட்டும்பலங்கால்தான்
நிறையாகநின்றுநேர்ந்துவுருகையில்
குறையானசூதங்காட்டுபலமொன்றே ௩௭௭

ஒன்றாயெடுத்துவுடைத்துப்பொடியாக்கிக்
கன்றானகெந்தகங்காட்டுப்பலம்ரெண்டு
தன்றானமனோசிலைதாளகம்ரெண்டுகேள்
நன்றாயரைப்பலம்நால்வகைக்கூட்டிடே ௩௭௮

கூட்டில்வீரங்குமுறப்பலமரை
நீட்டிதுவெல்லாம்நிமுராப்பொடிசெய்து
மூட்டிதகுப்பியில்முறையானவாலுகை
ஆட்டிட்டுப்பேத்தியடவாயெரித்திடே ௩௭௯

எரித்திடுமுத்தீயுமிதமாகமூன்றுநாள்
சரித்திடுநல்லச்சலாக்கிட்டுநீபாரு
கருத்துடநுனியிற்கரகரத்தேநிற்கில்
மரித்திடுஞ்சூதம்மகத்தாஞ்செந்தூரமே ௩௮௦

செந்தூரமொன்றுதிகழுநவலோகத்தில்
பந்தூரதற்குப்பதினாயிரத்தொன்று
கந்தூரமாத்துக்காணுமெழுபது
உந்தூருங்காணுயிடையுண்ணசித்தியே ௩௮௧

சித்திபாமிப்படிசேர்ந்தவுபரசம்
ஒத்தியுருக்கவேயொவ்வொன்றுசத்தாகும்
பத்தியவொவ்வொன்றற்பரிசனவேதையாம்
நத்தியுரைக்கநாவில்லைகாணுமே ௩௮௨

வங்கக் குரு.

காணேகபுரிகடிதாகுமுன்சுன்னம்

பூணேசவ்வீரம்புழுகிட்டுவாட்டியே
தாணேநல்வங்கத்தகட்டுமேற்பூசியே
ஊணேபிடமிடவுறுதியாஞ்சுன்னமே. ௪௮௩

சுன்னத்தில்வீரஞ்சூட்டியேசாரமுந்
தன்னுத்துமின்றாவ்வாறுமேற்கூட்டி
கன்னுத்தபாஷாணங்காட்டியவுபரசம்
மன்னுெத்துப்பூசிமருவவுருக்கிடே. ௪௮௪

உருக்கிடவெல்லாமொவ்வொன்ருய்ச்சத்தாகும்
பருக்கிடச்சத்தொன்றிற்பண்ணலாஞ்சுன்னங்கள்
சொருக்கிடவொவ்வொன்றிற்றுரைநூறுசெந்தூரம்
மருக்கிடக்களங்கங்கள்மகாகோடியாகுமே. ௪௮௫

ஆமேநல்வங்கமடவாகச்சுன்னமுந்
ஓமேபுழிவுமுறவானசினமுந்
தாமேநல்வீரமுந்தாக்கியரைத்திடு
சேமேநிமிளைமேற்செந்தூரம்பூசிடே. ௪௮௬

நிமிளைகுரு

பூசியேவஞ்சுன்னப்புகபூரங்குகையில்லை
வாசியேபோலவளமாகவூதிடு
நேசியேபோலநிமிளையுஞ்சுன்னமாந்
தாசியேயானதனமிதுகண்டிடே. ௪௮௭

கண்டிடுநிமிளைகுருவொருவீரமுந்
தண்டிடுதங்கமுந்தாளேயிழைத்திடு
மெண்டிடுவங்கமுங்காரமுமாட்டியே
ஒண்டிடுசவாதிலுறப்பொடுமத்தியே. ௪௮௮

மத்திச்சமெழுவைகைவளமாகத்தொட்டுநீ
அத்திச்சபாஷாணமறுபதுந்தொட்டுநீ
ஒத்திச்சலோகத்திலொருநூறக்கொன்றிட
பத்திச்சமாற்றுப்பதினுறுமாகுமே. ௪௮௯

௯௨-குருவிலழுபத்துநான குபாஷாணச்சுன்னம்.

ஆகுநிமிளைக்குருவிற்புழுகிட்டு
வாகுநல்வீரமும்வளமானசினமும்

ஏகுநற்கூட்டியியல்பாஞ்சாரக்குமேல்
பாகுமுபாசம்பரிசித்துப்போட்டுதே. ௪௱௰

போட்டுதவெல்லாம்பொருமியேசுண்ணமாம்
மாட்டுதக்காரசாரமுஞ்சுண்ணமாம்
நீட்டுதவைந்துசுண்ணக்குகைவைத்து
நாட்டுதமெள்ளநலம்பெறத்தாக்கிடே. ௪௱௧

தாக்கிடத்தாக்கிடச்சகலமுஞ்சுண்ணமாம்
தேக்கிடுவீரத்தைச்செந்தூரக்கட்டாகும்
வாக்கிடப்போகாதுவாயியுடனுதம்
போக்கிடக்கோடிபோக்காகவாடுமே. ௪௱௨

ஆடுமேசுன்னத்திலணைத்திடுவீரத்தை
சூடுமேகாரமுமுற்றசவ்வாதிடு
நாடுமேமத்தித்துநற்காரசாரமுந்
தேடுமேவுபாசச்சேர்ந்தபாஷாணமே. ௪௱௩

சேந்த்சரக்கெல்லாங்கிரளப்பிரட்டியே
போந்தவுருக்கிடப்பொன்போலேநின்றுடும்
சாந்தோரொவ்வொன்றிற்சதகோடிவேதையாம்
காந்தபாரபரிகாணவள்நாதமே. ௪௱௪

நாதநிமிளைநலமானசுன்னமும்
போதநல்வீரமும்புகழானசீனமும்
ஓதப்புழுகுமொவ்வோர்வராகன்றான்
பாதயசாரம்பலத்தின்மேற்பூசிடே. ௪௱௫

பூசியேவைத்துப்புகழ்மண்மூடியே
ஆசியேவாளுநகையடவாயெரிக்கிடு
வாசியேசாரம்வற்றிவெளுத்திடு
ஓகியேசாரமுறப்பொடுகல்வமே. ௪௱௬

கல்வத்திலிட்டுகாட்டிடிவ்வீரமும்
கல்வத்திலிட்டுகாட்டுநிமிளையும்
கல்வத்திலிட்டுகாட்டுநற்சீனமும்
கல்வத்திலிட்டுக்காணவரைத்திடே. ௪௱௭

### சாரச்சுன்னம்.

அரைத்தேசிறுகவடவாகப்பில்லைசெய்
துரத்தேநல்லைஞ்சுன்னக்குகையில்வை
நிறைர்ரம்தகனஞ்நீட்டியேபவூதிட்டு
தரைத்தேநற்சாரந்தவளமாஞ்சுன்னமே. ௪௯௮

### துரிசிசுன்னம்.

சுன்னமாஞ்சாரத்திற்கூட்டியேவீரத்தைத்
தன்னமாயாட்டுதனிலேபுழுகிட்டு
வன்னமாய்கண்டற்குவாகாயிதைப்பூசி
சுன்னமாய்வெய்யலிற்காட்டிட்ச்சுக்கானே. ௪௯௯

### சிங்கிக்காது.

சுக்காணுய்நின்றதுரிசியைநீகேளும்
அக்கானவைத்துசுன்னக்குகைவைத்து
தக்காகவூதுதானேகடுஞ்சுன்னம்
சிக்காந்துரிசிதான்சிங்கிக்குமாகுமே ௫௱

ஆகுந்துருச்சுன்னமும்வீரமும்
பாகும்புகழுகும்பாச்சியரைத்திட்டு
வாகுமேவீரன்மேல்வளமாகப்பூசியே
ஒகியேவூதவுறும்வீரச்சுன்னமே. ௫௱௧

### வீரசுனம்.

சுன்னமாம்வீரத்திற்கூட்டியேவீரத்தை
தன்னமாம்லிங்கமுந்தாயோடுகாரமும்
ஒன்னமாயாட்டியொன்பதுலோகத்திற்
பன்னமாய்ப்பூசப்பரிசனவேதையே. ௫௱௨

### பரிசனவேதை,

வேதைத்துருசுக்கருவுடன்வீரமுந்
தாதையாநதங்கத்தகடுமுறவாக்கிப்
போதையேவொன்றுய்ப்பொடிசெய்தடைத்திடு
ஆதையேவண்டமாகுந்தசங்கேளே ௫௱௩

### தசாவண்டவித்தை.

தெச்மானவண்டத்தைச்செப்பினேன்சுந்தரா

அசமானகருடனதிற்காகஞ்செம்போத்துத்
தசமானமயிலுங்காராவுந்தானேஞ்சு
நிசமாம்பறவையினோரஞ்சும்அண்டமே ௫௱௪

அண்டமுடும்புமழுங்குமுசலையுங்
கண்டநற்பாம்புகடுகியவாமையும்
விண்டயிதஞ்சும்விளங்கியவூர்வனந்
தண்டிதுபத்துந்தானதசங்கண்டிடே. ௫௱௫

கண்டிடுவண்டங்கீடுகப்பணம்போலே
உண்டிபொதித்துவுற்போடநீகேளு
தண்டித்துருசுக்குநவிற்பணமரை
ஒண்டித்தவண்டங்களொவ்வொன்றிற்பாச்சிடே ௫௱௬

பாச்சிரவியிற்பருகவிருசாமம்
ஒச்சியேரெண்டுகருவுந்தயிலமாம்.
மாச்சியேவண்டம்மகாயோகிக்கேற்றது
ஆச்சியேவண்டமாடுமுறைகேளே ௫௱௭

## தசாவண்டத்தயிலத்தில்
## அறுபத்துநாலுபாஷாணமுங்களங்கு.

கேளேகருடன்றயிலம்பரிசிக்க
நாளேநல்நாற்பதினாயிரத்தொன்றோடும்
ஏளேமயில்தானிபதினாயிரம்
தாளேபதினாயிரந்தாராவுமோடுமே ௫௱௮

ஓடுமெண்ணாயிரமுறதியாய்ச்செம்போத்து
நாடுமையாயிரம்நற்காகமேயோடும்
ஏடுமளுங்குயிருபதினாயிரம்
நாடுநல்லாமைநால்நாங்குக்கோடுமே ௫௱௯

நாணுன்குக்கோடும்நலலமுதலைதான்
மேணுன்குடும்புமுன்னன்குக்கோடிடும்
காணுங்குபாம்புகாட்டுமெண்ணாயிரம்
ஊணுங்குமண்டங்களோடுமுறைதானே. ௫௱௰

முறையாந்தெசாண்டங்கள்மூட்டிடும்பரிசனம்
மறையானவேதத்தில்மாவீசன்சொன்னதும்

நிறைபானவண்டத்தில்நேர்ந்தபாஷாணங்
குறையாகத்தொட்டுச்சூழப்பிறட்டிடே. ௬௱௰௧

பிரட்டிசசரக்கானபோராமஃறுப ம்
மருட்டியுருக்கிமணிபோலேவாடிடும்
நிரட்டியவெவ்வொன்றேநெரொத்ததொந்தனை
அரட்டிக்கனாற்றுக்குமப்பாலுமேறுமே. ௬௱௰௨

ஏறுஞ்சரக்கையிடவாயிரத்தென்று
தேறுநல்மார்த்தத்திசைக்குப்பதினாறு
மாறுநல்லண்டத்தயிலம்வெகுபேர்க்கு
கூறுமேசுந்தராகோடிகவார்ராமே. ௬௱௰௩

பஞ்சவர்ணவுப்புக்களங்கு.

கவராந்துரிசிக்குருவோடுசாரமு
முவராமற்கூட்டியரைக்கவுதகமாம்
தவராமுதகத்தைத்தான்குத்திவீரன்மேல்
நவராயரைத்துநலமாயிளக்கிடே. ௬௱௰௪

இளக்குங்குளம்பையெடுத்தப்பிக்கல்லுப்பில்
அளககுங்கரிக்குள்ளேயாகவுருக்கிடு
தளக்குமணிதான்றனிச்சூதவர்னமாம்
பிளக்குமுதகத்தைப்பூட்டாய்துரிசிக்கே. ௬௱௰௫

கல்லுப்புக்கட்டுவேதை.

துரிசியரைத்துச்சுழைந்திட்டுவுப்புமேல்
பருசியுருகப்பச்சைநிறமாகுந்
தரிசியுதகத்தாற்றாளகமேயாட்டி
அரிசியவும்புக்குவடவாசப்பூசிடே. ௬௱௰௬
பூசியுருக்கிடப்பொன்மணிபோல்நிற்கு
மாசியுதகத்தாலரைப்பாய்மனோசிலை
நேசியவுப்புக்குநிறப்பூசிக்காயவை
மாசியுருக்கவணிசிவப்பாகுமெ,

மேற்படிவேதை.

ஆமேநாற்கார்முகியனாத்துவுதகத்தில்
நாமேநல்லுப்புக்குநலமாகப்பூசியே

தேமேயுருகச்சிறந்துகருப்பாகும்
காமேசல்லஞ்சாகும்வர்ணமுங்கண்டிடே. ௫௱௰௮

கண்டிமெஞ்சுவர்ணலவணத்தை
ஒண்டிடக்கோத்துவுறுதாவடம்போலே
தண்டிகைக்கைசரந்தானிட்டிருப்பார்கள்
மண்டிடமூலகுருமருவியசீஷரே. ௫௱௰௯

சீஷரைக்கண்டாற்றெண்டஞ்செய்சுந்தரா
சீஷர்தானுங்கட்குச்சேஷ்டமுறைதானுஞ்
சீஷரும்நீங்களுஞ்சேர்ந்தோடும்விண்ணிலே
சீஷர்ஆடிகாணசிகாரமடக்கிடே. ௫௱௨௰

அடக்குகல்மூலகுருநமக்குச்சேஷ்டர்
தடக்குஞ்செனகாதிதானல்வருஞ்சேஷ்டர்
உடக்கும்பதஞ்சலியுத்தமசேஷ்டர்காண்
நடக்குமுறையிதுநல்மார்க்கம்பாருமே. ௫௱௨௧

மாருமேகைச்சராரம்பழுக்கும்விதங்கேளு
மாருமேவெள்ளைமணியாயிரத்தொன்று
வாருமேபச்சைமணியாயிரத்தொன்று
வருமேமஞ்சள்மணியுமென்னாறேடே. ௫௱௨௨

எடுத்தசிவப்பாமணியிடைநீகேளு
அடுத்ததொளாயிரத்தொன்றேடுமொத்துமாம்
மடுத்தகறுப்பாமணியோடுமைந்நூற்றிற்
கடுத்தவிதைஞ்சுக்கட்டியவேதையே. ௫௱௨௩

வேதையாமுப்புவிளங்கியேகட்டாமற்
காதையாம்பாஷாணங்கட்டவலைந்தார்கள்
தாதையாய்நிறைசவுககாரஞ்செய்யாமல்
லாதையாயச்சுட்டுமாண்டவர்கோடியே. ௫௱௨௪

கோடிதிரும்பாமற்குடிப்பாக்கல்லுப்பைத்
தேடியேகட்டச்செப்புமோன்சுந்தரா
வேடியேமுன்வைத்தவெண்கடர்தானென்று
நாடியேசாரம்நலக்கச்சரிசேத்தே. ௫௱௨௫

சேத்ததேயரைக்கத்தெளிந்துசெயநீராம்
பேத்தேசவுக்காரச்சுன்னமுங்காலிடை
கோத்தேநல்லுப்புக்குக்குலாவியேயூசிடு
மூத்தேயெருவில்முத்திப்பிடமிடே. ருஉசு
இட்டேஎடுக்கவியல்கோடிமாறுது
ஒட்டேகனமுமுறுகித்தெளிவாகுங்
கட்டேயிதுகட்டுக்காட்டநவலோகம்
மட்டேயிருபதுக்கொன்றிடும்மாற்றுமே. ருஉஎ
மாத்ததுப்பத்தாமகத்தானவுப்பிலே
பாத்ததைச்செய்யாமற்பாழேரலைகிறார்
கோத்ததுவுப்பல்லோகூறிடுவாதத்தில்
போத்திதுபார்த்தோன்புகழ்சித்தமேயாகியே. ருஉஅ

விருத்தம்.

பாரப்பாசெயநீரேநூற்றுப்பத்திற்
    பரிவாகவெகுசுருக்குமூன்றுதீரும்
நேரப்பாவிதனாலேவனந்தவித்தை
    நிறைநிறையாய்ச்சொல்லிவிட்டேனீதான்பாரு
சேரப்பாதிராவகந்தானறுபத்தினாலிற்
    றிறமாகச்சொல்லுகிறேனன்றாய்க்கேளு
ஓரப்பாஒன்றாகவுறைக்கச்சொல்வே
    னுத்தமனேயிதனுடையவோட்டங்கேளே. ருஉகூ

வேறு.

மூலிக்கையிலுப்புவெடுத்துத்திராவகம்வைக்க

எருக்கொடுதுத்தியிசைந்தநல்மேனி
மருக்கியவாழைமருவுமுருங்கையும்
பொருக்கியவூமத்தைப்புகழ்நாயுருவியும்
செருக்கியதென்னிலைசேர்ந்தவருகோடே. ருகம

அறுகொடுவாழையுமனறிற்பிரண்டையும்
மறுகொடுவெள்ளும்மகதகானபூவரசும்
நறுகொடுவொவ்வொன்றாய்ச்சாம்பலாய்ச்சுட்டுநீ
ஒருகொடுநீரிலூறவும்வைத்திடே. ருநக

வைத்திடுவெவ்வேறாய்வாகானபாண்டத்தில்
தைத்திடுமூன்றுநாள்தட்டிக்கலக்கிடு
தெத்திடுமைந்தாறுள்தெளிவெல்லால்வாங்கியே
சைதத்திடுபாண்டத்திற்காச்சிநீவுப்பெடே. ௫௱௨

உப்புவகையொன்றுக்கோரோர்பலந்தூக்கி
ஒப்பிபவன்னபேதிபலமெட்டு
செப்பியகல்லுப்புச்சிறக்கப்பலமூன்று
கப்பிபசாரங்கடுக்கப்பலமஞ்சே ௫௱௩

அஞ்சாந்துரிசிணையந்நாங்கிருபது.
பஞ்சாம்படிகமும்பார்நூறுதன்பலம்
அஞ்சாம்வெடியுப்புவைந்நூற்றியைம்பது
தஞ்சாம்சவுட்டுப்புத்தாறுகுகுமெண்பதே ௫௱௪

எண்பதிரேறுடேயிசைந்தசவுக்காரம்
பண்பலம்பத்துப்பரிவானவீரங்கேள்
தன்பலம்நாலுசவுட்டானபூநீறு
நண்பலமெட்டுநல்மாகக்கூட்டிடே ௫௱௫

கூட்டுமதியுப்புக்குறையாமல்முப்பலம்
நீட்டுவளகிலுப்போயிருபலம்
யாட்டுநற்றுத்தம்பதினைம்பலம்போடு
நாட்டுநல்லானைநலங்கியவெள்ளாடே ௫௱௬

ஆடுங்குதிரையடவாங்கழுதையும்
நாடும்மனுஷன்நல்மாயிருவையஞ்சின்
ஓடும்நல்மூத்திரமொவ்வொன்றில்நாறபடி
தேடுறக்காச்சிறக்கவுமுப்பெடே, ௪௱௭

எடுத்திட்டவுப்புயிசையப்பலம்பத்து
மடுத்திட்டிதுவெல்லாம்வளமாய்ப்பொடிசெய்து
படுத்திட்டுப்பத்துப்பங்காக்கிவைத்துநீ
எடுத்திட்டுவோர்பங்குறவைகலையமே ௫௱௮

கலையத்தின்மேமேலகடுஞ்செங்கற்சில்லிட்டு
நலையத்தகில்லுக்குநடுவேவதமர்கேளு

ஒலையப்பெருவிரலோடத்தமர்போட்டு
நிலையொத்தமூசைநீளவும்செய்திடே. ௫௩௯

செய்திட்டமூசைத்திறமாகச்சுட்டுநீ
பெய்திட்டதூறிற்பணம்போற்றமரிட்டு
கைதிட்டமாகக்கடுஞ்செங்கற்சில்லுமேற்
றெய்திட்டங்குப்பிக்குறச்சீலைசெய்திடே. ௫௪௰

சீலைசெய்மூசைச்சிறந்ததமரின்மேல்
காலைசெய்மேலுக்கருவிரல்பொத்திட்டு
மேலைவைரந்திரம்விளங்கப்பிசகாமற்
சாலவேசீலைமண்சமர்த்தாகக்கட்டிடே. ௫௪௧

கட்டியபடுப்பேத்திக்கடுங்குப்பிவாயிலே
ஒட்டியபீங்கானிலுறவைத்துநீபாரு
மட்டியப்போகையொடுவெந்தேசலம்விழும்
தெட்டயவன்னீரைச்சிறப்பாயெடுத்திடே. ௫௪௨

எடுத்திட்டநீரையிபலொருபங்கிலே
மடுத்திட்டுவார்த்துவளமாயுலர்ந்தபின்
கடுத்திட்டுமுன்போலக்கட்டியேயெந்திரம்
படுத்திட்டுத்தீநீரைப்பாங்காகவாங்கிடே. ௫௪௩

வாங்கிமறுபங்கில்வனமாயுலர்த்திட்டு
ஓங்கியேதீநீரையுறவர்க்குமுன்போலே
வாங்கியேயிப்படிவைந்துதிறமேத்திப்
பாங்கியேவாங்கிப்பரிவாகவைத்திடே. ௫௪௪

வைத்ததிராவகத்தானநீனீராம்
பைத்தபின்னைந்துபங்கையும்வேறேவை
நைத்ததிராவககாட்டமுறைகேளு
கைத்தவுபாசங்கட்டிடச்சத்தாமே. ௫௪௫

## பூநாகச்சத்துச்செந்தூரம்.

சத்தாகச்சுந்தராசரக்குமுறைகேளு
நத்தானபூநாகம்நலமாயுலர்த்திட்டு

சூத்தாய்திராவகக்குமுறியேசத்தாகும்
வித்தாரச்சத்தினில்வெண்காரமிட்டிடே. ௫௪௬

இட்டேயுருக்கவிசையமணியாகும்
மட்டேபூநாகச்சத்தோர்பலம்வாங்கி
நட்டேயுருக்கிநாட்டைந்திடநாகம்
பட்டேநற்காற்பலம்பரியுமதிற்போடே. ௫௪௭

போட்டேயுருக்கையிற்பூட்டிடச்சூதங்கேள்
நாட்டேதிராவகம்நலமானசூதத்தில்
மூட்டேகொதித்துமெழுகுமயமாகும்
ஒட்டேமெழுகையுருக்கிநீபாத்திடே. ௫௪௮

பார்த்திடச்சூதம்பண்பாயுருக்கிடுங்
கோத்திட்டுவோர்பலங்கூட்டுப்பூநாகத்தில்
சேத்திட்டிதுவெல்லாந்திறளவுருக்கிட்டு
மாத்திட்டகலவத்தில்வளமாய்நொருக்கிடே. ௫௪௯

நொறுக்கியேகெந்தகம்நுகரப்பலம்நாலு
பறுக்கியதாளம்பலம்ரெண்டுகூட்டியே
தருக்கிமனோசிலைத்தானேபலமொன்று
பொரிக்கிப்பொடித்துப்போட்டிடுகுப்பிக்கே. ௫௰

குப்பியெடுத்துக்கொடுவாலுகையேத்தி
ஒப்பித்தமூன்றுமுற்போட்டுமுத்தீயும்
மப்பித்தசெந்தூரமருணனிறமாகும்
தப்பித்தவேதைத்தாக்காயிரத்தொன்றே. ௫௫௧

ஆயிரத்தொன்றிடும்வாம்நவலோகத்தில்
பாயுரவேகமேபார்த்துமுடியாது
தாயிரமாத்துத்தானேபதினாறு
ஓயிரப்பூநாகச்சத்தினுறுதியே. ௫௫௨

அப்பிரகச்சத்துச்செந்தூரம்

உறுதியாய்நின்றவுயர்ந்திடுமப்பிரகப்
அறுதியாய்வைத்துயதில்வார்த்திராவகம்
நிறுதியாய்வெந்திநிமிஷத்திற்சத்தாகும்
பொறுதியாய்வாங்கிப்புகழவுருக்கிடே. ௫௫௩

உருக்கியசத்திடையூட்டிடுகௌரீயம்
உருக்கியசத்துக்கிடைக்கூட்டுநாகத்தை
உருக்கியசத்துக்கிடைதான்சேர்சூதமும்
உருக்கியசத்துக்கிடைகால்தான்றங்கமே. ௫௫௪

தங்கத்தோடெல்லாஞ்சாரவுருக்கிட்டு
எங்கொத்துநின்றயிடைக்கிடைகெந்தகஞ்
சங்கொத்தகெந்தியிடைக்கிடைக்கால்தாளகம்
அங்கொத்ததாளகத்தைந்திடைவீரமே. ௫௫௫

வீரத்திடைதான்விளங்குமனோசில்ஐ
பாரொத்ததெல்லாம்பரிவர்ப்பொடிசெய்து
நேரொத்தகுப்பியில்நீட்டியவாலுகை
சாரொத்தமூன்றுநாள்தாக்கவெரித்திடே. ௫௫௬

எரித்திட்டசெந்தூரமியல்பாயிருந்திடும்
அரித்திட்டவொன்பதிலாயிரத்தொன்றுதான்
தரித்திரமில்லைச்சாகாதொருநாளும்
மரித்திடுவோர்கட்குமார்பினிலாணியே. ௫௫௭

ஆணியேசெந்தூரமைம்மூன்றுமாத்தாகு
வாணிதான்கெழ்க்கமாவீசன்சொன்னது
பூணியேவேதைப்புகழாகப்பார்த்தவர்
நாணியேவீசன்போல்நலமாயிருப்பாரே. ௫௫௮

இருக்குங்கபரியிலிடுநீதிராவகம்
மருக்கியேவெல்லாம்மகத்தானசத்தாரும்
சொருக்கியேகாரந்துடியாயுருக்கிட்டுப்
பருக்கியேவாங்கிப்பலந்தாணிறுத்திடே. ௫௫௯

நிறுத்தேயுருக்கில்நேரேசெய்சூதம்
மறுத்தேபலங்கொடுவாங்கியுருகிடும்
ஒருத்தேவயநாகமொக்கப்பலம்போட்டு
அறுத்தேநற்றங்கமதுவும்பலங்காலே. ௫௬௰

காலொடுகூடக்கலந்துவுருக்கிடு
கோலொடுவாங்கிக்கூடப்பொடிசெய்து
சீலொடுகெந்தகஞ்சேர்பலமூன்றுதான்

தாமேலாடரைப்பலந்தாளகப்போட்டிடே. ௫௱௧

போடுமனோசிலைபுகழாயரைப்புலம்
நீடுசெவ்வீரம்நிறையோவரைபலம்
ஆடுமிவையெல்லமடவாகக்குப்பியில்
நாடுநல்வாலுகைநலமாயெடுத்திடே. ௫௱௨

## கபரிசத்துச்செந்தூரம்.

எடுத்தேதினமூன்றுமேத்தியேதீயிட்டும்
மடுத்தேசிலாக்கிட்டுவெளமாய்ப்பதம்பாரு
கடுத்தேயடியிற்கரகரத்தேபதம்
படுத்தேசெந்தூரம்பாங்காயிரக்கிடே. ௫௱௩

இரக்கியேசெந்தூரமிருநவலோகத்தில்
உரக்கியேரெண்டாயிரத்துக்கொன்றேயிடு
திரக்கியேமாத்துத்தானேயிருபதாம்
அரக்கியேதாம்பரமாடிடும்வேதையே. ௫௱௪

## ஜெசத்தில்தாம்பரவேதை.

வேதையாந்தாம்பரம்விளம்பக்கேள்சுந்தரா
பாதையாஞ்சத்தொடுபரிவானவீரமும்
போதையாஞ்சூதமும்புகழாந்தரிசியும்
மாதையாய்க்கூட்டிவளமாய்ப்பொடிசெய்யே. ௫௱௫

பொடித்தேதிரியாய்ப்புகழாய்த்திரிசெய்து
அடித்தேநல்லாவினெய்யடவாய்த்துவைத்ததில்
மடித்தேகடிதாசிவைத்தேகுருப்போல்
நடித்தேகொளுத்திநலமாயவித்திடே. ௫௱௬

அவிக்கமுன்மேலேயடைபோலநவலோகம்
தவிக்கவேதகடாய்தான்மேலேவைத்திடு
கவிக்கக்கறுத்திடுங்காசசக்கனகமாம்
செவிக்கத்தசதீக்ஷைசெய்தோர்க்குச்சுத்தியே. ௫௱௭

## நிமிலைச்சத்துச்செந்தூரம்.

சித்திநிமிளைக்குஞ்சேர்ந்ததிராவகம்
குத்தியேபாருகுமறிமயனமாம்
ரத்தியேகாரத்தைப்பாச்சியுருக்கிட

ஒத்தியேபொன்போலுருகுமணியாமே, ௫௬௮

மணியோர்பலத்துக்குமாட்டோபலந்தங்கம்
கனியோர்செய்சூதங்காட்டோர்பலமதில்
தணியவுருக்கித்தான்றொண்டாய்வைத்திடு
பணியோரொருபங்கிற்பாச்சுமுறைகேளே. ௫௬௯

கேளேயிதற்கிடைகெடியானகெந்தகம்
நாளேயிதற்கிடைநாட்டியேவீரமும்
தாளேயிதற்கிடைதான்சிலைதாளகம்
வாளேயிதுவெல்லாம்வளமாய்ப்பொடித்திடே. ௫௭௰

நகஞ்சநிமிளைக்குரு.

பொடித்தேதற்குப்பியிற்புகட்டியேசிலைசெய்
மடித்தேநல்வாலுகைவைத்தெரிமூன்றுநாள்
முடித்தேசெந்தூரமாம்முடிந்தபதம்பார்த்து
எடுத்தேநற்றேறவிளையிசையவும்பூசியே. ௫௭௧

பூசிக்கநன்றுபுகழாங்கசதிகைக்ஷ
வாசிக்கயில்லாட்டால்வாழ்தீக்ஷைபஞ்சுசெய்
ஒசிக்காயில்லாட்டாலொருமூன்றுதீக்ஷையாம்
மாசிக்கரெண்டொன்றுவாமிக்கிச்சொல்வதே, ௫௭௨

சொல்லும்நிமிளைத்துடியாஞ்செந்தூரந்தான்
அல்லும்நவலோகமையாயிரத்தெட்டுக்
கல்லும்பழுக்குங்காட்டாய்பரிசனம்
வெல்லும்நிமிளைவேதாந்தநாதமே. ௫௭௩

நாதநிமிளைநலமானமுன்பாதி
யோதக்குருப்பண்ணவுரைக்கிறேன்சுந்தரா
கோதமணிக்கிக்கால்கூட்டிடுவீரமுங்
காதச்சவுக்காரச்சுண்ணமுங்காலிடே. ௫௭௪

இடுநீபுழுகுஇசையவேகாலிடை
பொடுநீபடிகிற்புகழாகக்காலிடை
கொடுநீகுருவண்டுக்கூட்டதிலம்பது
மடுநீயிதுவெல்லாம்வார்த்தரையண்டமே. ௫௭௫

அண்டத்தின்வெண்கருவாட்டிமணிக்கப்பிப்

ப்ண்டுத்தவெய்யலிற்பாங்காயுலர்த்திட்டு
நண்டுத்தவோடும்நலமானகல்லுப்பும்
கண்டுத்தசுண்ணும்புங்காட்டியரைத்திடே. ருஎசு

அரைத்தேயதுமேலேபடவாய்க்கவசஞ்செய்
விரைத்தேயதுமேலேவெறுஞ்சீலைமண்செய்து
புரைத்தேமச்சுன்னப்பொடிக்குள்ளிதைவைத்து
கரைத்தேகெசபுடம்கனக்கப்புடமிடே. ருஎஎ

புடமிட்டுவாலேயப்பேரானவாமத்தாள்
இடம்விட்டுப்போகாமலேத்தியேபூசைசெய்
தடமெட்டுஞ்சித்தியாய்தர்னேபுருவமையம்
நடமிட்டதாண்டவம்நாங்காணலாகுமே. ருஎஅ

காணநிமிக்கனத்தகுருவாகும்
ஊணக்குருவேவதையுரைக்கமுடியாது
தோணத்துரைசொல்வேன்சுந்தராநீகேளு
வாணக்குருவுக்குள்மாட்டிடுவீரமே. ருஎகூ

வீரத்திறேடேவெண்கண்டர்கூட்டிடு
தாரொத்துநின்றசவாதிட்டுவத்தித்து
காரொத்தநாற்றிற்கடுகவேவைத்துநீ
பாரொத்தவேதையைப்பாச்சமுறைகேளே. ருஎ௰

பொன்னிமிளைகுரு.

கேளேசவ்வாதைக்கெடியாகத்தொட்டுநீ
தாளேசரக்கைத்தடவிப்பிரட்டியே
நீளேநவலோகம்நேராயிரத்தொன்று
தோளேகொடுக்கச்சுகமாத்திருபதே. ருஅக

இருபதுமாத்தோவென்றுயாள்நாதத்தில்
கருவதுகஞ்சநிமிளைக்கிதுகாணும்
தருவதுயேமநிமிளையேதானுகிற்
குருவதுவானுக்காற்கூறவும்கேட்டிடே. ருஅஉ

கேட்டிடுவேமநிமிளைக்குருவாட்டு
நாட்டிடுசூதத்தில்நலமாகக்கட்டுண்ணும்
ஒட்டிடுபாஷாணமுபரசம்லோகத்தில்

நீட்டிடுமோத்துத்திசைமெச்சவன்பதே ௫௮௩

அன்பதுமதாகுமாடுமேதூம்புரம்
அன்பதுமாத்தாகவரடும்பரிசினம்
அன்பதுமாத்தாகவாடுமேசந்தானம்
அன்பதுமாத்துக்குமானியுமில்லையே ௫௮௪

இல்லைமயிலண்டமிதமானவோட்டிலே
வல்லைத்திராவகம்வார்க்கக்கொதித்திடும்
நல்லயகாரம்நலக்கவிதிற்கூட்டிச்
செல்லவுருக்கத்திரண்டுவுருகுமே ௫௮௫

### மயூரவண்டச்சத்துச்செந்தூரம்.

உருகியமயிலண்டமோங்கியதோர்பலம்
பருகியநாகம்பாச்சதில்நாற்பலம்
தருகியதங்கந்தானோர்பலங்கூட்டி
தெருகும்செய்சூதஞ்சேரும்பலம்ரெண்டே. ௫௮௬

ரெண்டோடேயெல்லாம்நேராயுருக்கிடத்
தண்டோடுகல்வத்தில்தானேயொடியாக்கித்
கொண்டோடுகெந்தகம்கூட்டத்தில்நாற்பலம்
பண்டோடுவீரம்பாச்சுப்பலந்தானே ௫௮௭

தானேமனோசிலைத்தாளகம்ரெண்டுந்தான்
தேனேவகைக்கிச்சிறக்கவுமோர்பலம்
மானேபொடித்துமாட்டியேகுப்பியில்
வானேநல்வாலுகைவைத்துயெரித்திடே ௫௮௮

எரித்திடுவஞ்சுநாளிதவாய்ச்சிலாக்கிட்டு
அரித்திடுஞ்செந்தூரமானபதம்பார்த்து
சரித்திடுவாமத்திற்றாயைமறவாதே
கரித்திடுஞ்செந்தூரங்காட்டுமுறைபாரே ௫௮௯

### மயூரவண்டச்சத்துக்குரு.

பாரோநவலோகம்பாச்சாயிரத்தொன்று
நேரோயிருபதுமாத்தாகநின்றிடும்
தூரேமயிலோடுசொல்லமகாவேதை
தாரோயிச்சத்துத்தான்குருவாகுமே ௫௯௰

ஆதம்நிமிளைக்குருசெய்தாற்போல
வாகும்மணிக்கிமாட்டிச்சரக்கெல்லாம்
பாகுபடப்பூசிப்பண்பாய்ப்புடமிட்டுத்
தாகுமயிலண்டந்தான்குருவாகுமே. ௫௯௧

குருவிற்சவ்வாதுங்கொடியநல்விரமுந்
தருவில்நற்காரமுஞ்சாத்தியேமத்தித்து
திருவிலாச்சரக்கைச்சேர்த்துப்பிரட்டியே
மருவிலாநவலோகம்மாட்டாயிரங்காணே ௫௯௨

தாளகக்களிங்காக்கி-அயவியமுமெடுத்துச்
செந்தூரம்செய்ய.

காணேயிதின்வேதைகைமாத்திருபது
தோணேகுருவாய்த்தொட்டதெல்லாங்கட்டும்
ஆணேமயிலண்டவோட்டுக்கடுஞ்சத்துத்
தோணேவெகுபோககுச்சொல்லமுடியாதே. ௫௯௩

முடியாதாளகமூட்டிக்கரண்டியில்
அடியாந்திராவகமதில்வாகுசத்தாகும்
குடியானசத்தினிற்கூட்டிசீகாரத்தைப்
பிடியாயுருக்கப்பிரண்டுமணியாமே. ௫௪௯

மணியிலரைபலம்வாங்கியேகல்வத்தில்
தணியநல்விரமுந்தானுமரைப்பலம்
கனியநலரெங்குங்காட்டுவிராகன்தான்
பணியநல்லாதண்டப்பாலாலரைத்திடே. ௫௯௫

அரைத்தேயுருட்டியடவாகக்காய்ந்தபின்
நிரைத்தேநற்சீலேநேராகச்செய்திட்டு
தரைத்தேமண்ணுக்குள்தாக்குப்பிடமைந்து
விரைத்தேவெளியில்விளங்கப்புடமிடே. ௫௯௬

புடந்தீர்ந்தெடுக்கையிற்பெலத்தகுருவாகும்
அடந்தீந்தத்தாளகமாடுமுறைகேளு
கடந்தீந்தக்காட்டாமணக்கின்பருப்போடே
தடந்தீந்தத்தாளகமதனைகுருபோட்டிடே. ௫௯௭

போட்டேயரைத்துப்புகழாகவைத்தூதி
மூட்டேயிரும்பின்மேலேநீபூசிட்டு

ஊட்டேவொருசீலையுருகப்பிடம்போடு
நாட்டேயிரும்புநலமானவீயமே ௫௯௮

ஈயவயத்திலேடுத்தேபலமொன்று
தோயக்குகைக்குள்ளேசுழ்ன்றுவுருகையில்
பாயொத்தநாகம்பாச்சுவிடைக்கிடை
தாயொத்ததங்கந்தானெட்டிலொன்றுமே ௫௯௯

ஒன்றுபலந்தானூட்டுசெய்ச்சூதம்
நன்றிதுவெல்லாம்நலமாய்ப்பொடிசெய்து
கன்றியகெந்தகங்காட்டுபலமூன்று
தன்றுமரைப்பலந்தான்சீலைபோடுமே ௬௱

போட்டேநற்குப்பியிற்புகழவெடுத்திட்டு
மூட்டேநல்வாலுகைமூதண்டத்தீயிட்டு
நீட்டேதினமூன்றுநேராய்ச்செந்தூரிக்குங்
காட்டேயைந்நூற்றொன்றுகனகமுமாமே. ௬௱௧

காந்தவீயச்செந்தூரம்.

ஆமேநற்காந்தத்திலடவாகயிக்குரு
தாமேநற்பூசித்தனிச்சீலைச்சுத்தியே
ஒமேபுடமொன்றிலுருகியேவீயமாம்
தேமேயிவ்வீயஞ்சிறக்கப்பலந்தூக்கே. ௬௱௨

தூக்கிக்குவைகக்குள்ளேசூட்டியுருகையில்
தாக்கியேநாகந்தாணந்திடைபோடு
தேக்கிச்செயசூதமசிறக்கப்பலமொன்று
வாக்கியகாரீயமனைப்பலம்போட்டிடே, ௬௱௩

போட்டிடுகெந்தம்புகழாகக்காற்பலம்
நீட்டிடுவெல்லாம்நிறையாவுருக்கியே
தாட்டிடுகல்வத்திற்றக்கப்பொடிசெய்து
நாட்டிடுகெந்தகம்நாற்பலமாகுமே. ௬௱௪

ஆகுமனோசிலையதிலெயொருபலம்
பாகுமேயெல்லாம்பக்குவம்பண்ணியே
தாகுமேகுப்பியிற்றுனேயெடுத்திட்டு

ஓருமேவாலுகையுடனேற்றித்தீயிடே ௩௱௫
இட்டேதினமூன்றிலெடுக்கச்செந்தூரம்
மட்டேநவலோகமாட்டாயிரத்தொன்று
பட்டேநன்மாத்துயபதினைந்துதப்பாது
ஒட்டேநற்காந்தமுறுதியைக்கண்டிடே ௩௱௬

## அப்பிரகாயச்செந்தூரம்.

கண்டிடுவெப்பிரகங்கடியதகடுக்கு
ஒண்டிடுவிக்குருவூறுதியாய்ப்பூசிட்டு
பண்டிடுயெலியாலேமெண்ணெயிற்சிலே
தண்டிடச்சுத்தித்தானேபுடம்போடே ௩௱௭
போட்டேயெடுக்கப்புகழாகவீயபாம்
நாட்டேயிவ்வீயம்நலமாய்ப்பலமொன்று
நீட்டேவுருகையில்நேர்நாகமோர்பலம்
பூட்டேநற்சூதமும்புகழாய்ப்பலமென்றே ௩௱௮
புகழானநாரியம்போடுவரைப்பலம்
நிகழானதங்கம்நீட்டதிற்காற்பலம்
தகழாயுருக்கித்தானேநொறுக்கிட்டு
அகழாமனேசிலேனுதமுப்பலம்போடே ௩௱௯
போட்டிதிற்கெந்தகம்புகழப்பலம்ரெண்டு
ஊட்டதில்வீரமுருகப்பலமரை
நீட்டிதுவெல்லாம்நிமிரப்பொடியாக்கித்
தேட்டிதுகுப்பியிற்சிறக்கவடைத்திடே ௩௱௰
அடைக்கமுறைகேளுவப்பனேசுந்தரா
இடைக்கியரைவர்சியெடுத்திடுகுப்பிக்கு
தடைக்கிநல்வாலுகைத்தானேறித்திமூட்டி
நடைக்கிநீமூன்றுநாள்நலமாயெரித்திடே ௩௰௧
எரித்துப்பதம்பார்த்திறக்கச்செந்தூரமாம்
மரித்துநவலோகமாயிரந்தொன்றிடு
நரித்துநன்மாத்துநலமாயிருபது
பரித்துநல்லப்பிரகம்பராசத்திநாதமே ௩௰௨
சத்தியாமப்பிரகச்சத்திறைற்சூதஞ்சாம்

சத்தியாமப்பிரகச்சத்திறைற்றங்கமாம்
சத்தியாமப்பிரகச்சத்திறைற்சித்தியாம்
சத்தியாமப்பிரகந்தான்போக்குமெத்தவே. கூ௰௩

சிற்றண்டத்தோடு.

மெத்தவேயண்டத்தோல்விளம்புறேனியமாம்
அத்தவேமுன்போலணைத்துக்குருபூசி
பத்தவேதாரத்தைப்பாச்சியுருக்கிடச்
சத்தவேயண்டத்தோடானியமாகுமே. கூ௰௪

ஆகுமேயண்டமடவாணயியந்தான்
தாகுமேயோர்பலந்தானேயெடுத்திடு
வாகுமேவைத்துவளமாயுருகையிற்
சாகுமேநாகந்தாகுப்பலமென்றே. கூ௰௫

ஒன்றேபலமிடுவுறவானகாரீயம்
நன்றேசந்தானறைட்டுவொருபலம்
கண்ணேநற்றங்கங்காட்டுப்பலமரை
எண்ணேயிதுவெல்லாமியல்பாயுருக்கிடே. கூ௰௬

உருக்கிநொறுக்கியுறவானகெந்தகம்
அறுக்கிப்பலம்நாலுவதில்வீரமோர்பலம்
தருக்குமனேசிலைதானேயிருபலம்
நெருக்கிநொறுக்கிநேர்குப்பிக்கேற்றிடே. கூ௰௭

ஏற்றிடுவாலுகையிதமாகமூன்றுநாள்
பார்த்திடுசெந்தூரம்பக்குவமானபின்
காத்திடுமீசானங்கணேசன்முதற்பூகை
போற்றியேவென்பதிற்பூட்டாயிரத்தொன்றே. கூ௰௮

ஆயிரமேலோடுமண்டமகசாத்துப்
பாயிரமாத்துப்பரிவாயிருபது
தாயிரசத்தைதனிக்குருபண்ணினால்
ஓயிரக்காயத்துக்குருத்தவங்கண்டிடே கூ௰௯

கற்பூரசிலாசத்துச்செந்தூரம்.

கண்டிடுகேற்பூரசிலாசத்துமேற்குரு
ஒண்டியேபூசியுருக்கிடச்சத்தாகும்

அண்டியேசத்துவதுவோர்பலத்துக்கு
தண்டியேகூதந்தானேர்பலங்கூட்டே ௯௨௰

கூட்டிதிற்றங்கங்குறையாதொருபலம்
நீட்டிதுமூன்றுக்குநேர்சமன்கெந்தகம்
பூட்டிநொறுக்கிப்புகட்டியேகுப்பியில்
ஆட்டியேவாலுகையடவாயெடுத்திடே. ௯௨௧

எடுத்திடுமூன்றுநாளயெரிக்கச்செந்தூரமாம்
அடுத்திடுமொன்பதிலாயிரத்தொன்றிடு
படுத்திடுமாதுப்பல்லுறுதப்பாது
கொடுத்திடுசெந்தூரங்குன்றியிடைபுண்ணே. ௯௨௨

உண்ணுதினம்பத்துவோங்கியேசட்டைபோம்
நண்ணும்புருவநடுநாட்டியங்காணலாம்
கண்ணிஞ்சிவக்குங்கனகமாந்தேகமும்
பண்ணுங்கவனத்திற்பாருடல்வேண்டாமே. ௯௨௩

கெந்தகச்செம்புசெந்தூரம்.

ஆமேயினிக்கேளறையுறேன்சுந்தரா
ஓமேநற்கெந்தியிலுறவாய்திராவகம்
வேமேகொதித்துவிரவியேகாரமும்
நார்மேருகைக்குள்ளேசாத்தியுருக்கிடே. ௯௨௪

சாத்தியுருக்கிடச்சத்தாகும்நீபாரு
மாற்றியேயூதிடமகத்தானசெம்பாகும்
போற்றியேசத்துப்புகழ்பலமொன்றுதான்
சாத்தியேபூராகச்சத்துமரையிடே. ௯௨௫

அரையிடுதங்கமட்வாயுருகையில்
திறையிடைகூதம்நேரேபலமொன்று
கரையிட்டுருக்கிக்கவிழ்ந்துப்பொடியாக்கி
துறையிட்டகெந்தகஞ்சூட்டுபலமூன்றே. ௯௨௬

மூன்றுபலத்தோடேமூடியேகுப்பியில்
தான்றுகவாலுகைத்தானேற்றித்தீமூட்டி
கான்றுதினமூன்றுகைமுறையாயெரி
ஊன்றுநற்செந்தூரமுருக்கம்பூபதம்பாரே. ௯௨௭

பாரேயிச்செந்தூரம்பாச்சவையாயிரம்
நேரேதானென்பதுமாத்துக்குமேமேலோடும்
காரேயிறற்குன்றிகாட்டேழுநாளுண்ண
சாரேயொருசட்டைதங்கம்போல்விழுமே. ௩௨௮

விழுமேசத்தைவிளங்கவேயூதிடத்
தாழுமேசெம்புதானாகும்பாருநீ
வாழுமேதங்கத்திலாட்டிடுநூற்றொன்று
கேளுமேதங்கங்கெடியானசெம்பிதே. ௩௨௯

௯. செம்பில்தங்கச்செம்புவேதை.

செம்பிலேவொன்றுசேர்நூறுதங்கத்தில்
வம்பிலேசெம்பாச்சுமகத்தானதங்கத்தில்
கொம்பிலேநூற்றொருந்தங்குமட்டியெரித்திடும்
அம்பிலேவொட்டாமலடைக்கின்றேகண்டிடே ௩௩௰

கண்டிடுகெந்தகச்செம்பைநாலாக்கட்டோ
ஒண்டிடுமாத்துவுறுதியைத்தாக்கட்டோ
பண்டிடமூன்றாகப்பாச்சட்டோசுந்தரா
தண்டிடும்வேகத்தைதணிக்கமுறைகேளே. ௩௩௧

முறையானகெந்தகச்செம்போர்பணவிடை
நிறையானமசம்புவிராகனில்நீயிட்டுக்
குறையாதேசெம்பொன்னிர்கூட்டுத்திசைவெள்ளி
அறையானமாத்துயைந்துக்குயேறுதே ௩௩௨

எறுககெந்தகச்செம்பொன்றுதாயொன்று
மாறுதிரும்பிலேமாட்டுதிசைக்கொன்று
கூறுதிரும்பொன்றுகூட்டுத்திசைவெள்ளி
தாறானமாத்துத்தானேழுகாணுமே. ௩௩௩

சாணுமேலோகத்திற்காட்டியுழுக்கினால்
தோணுமேதங்கத்திற்றொருந்தமும்நூறேறும்
ஆணுமேதேவிக்கியாதிமகாநாதம்
ஊணுமேவேதையுரைத்தமுடியாதே. ௩௩௪

மனோசிலைசத்துச்செந்தூரம்

முடியாமனோசிலைமூட்டியேபீங்கானில்
செடியாந்திராவகங்கெண்ணிதமாயிதில்வாரு
வடியாகவெந்துவளம்பெறச்சத்தாகுந்
நெடியானகாரத்தைநீட்டியுருக்கிடே. சூ ௰௫

உருக்கியசத்துவொருபலந்தான்தூக்கி
நெருக்கிக்குகையிலேநேராயுருக்கையில்
தருக்கியநாகந்தானைந்திடைபோடு
பெருக்கியதங்கமும்பேரோர்பலம்போடே. சூ ௰௬

போட்டேசெய்ச்சூதம்புகழாய்ப்பலமொன்று
தேட்டேயிதுவெல்லாந்திகழவுருக்கட்டு
நாட்டேநற்கெந்தகம்நாட்டுப்பலம்நாலு
ஊட்டேநொறுக்கியுருகுப்பிக்கேற்றிடே. சூ ௰௭

ஏற்றியேவாலுகையெரித்திடுமூன்றுநாள்
போற்றியேசெந்தூரம்புகழப்பதம்பாரு
ஆற்றியேவொன்பதிலாயிரத்தொன்றிட
நேத்தியேமாத்துநிறையவுமைன்பதே. சூ ௰௮

லிங்கச்சத்துச்செந்தூரம்வேதை.

நிறையவும்லிங்கத்தில்நேர்வார்திராவகம்
பறையவும்வெந்திடும்பாங்காயுருக்கிடுங்
குறையவும்போகாதுகொடுமணியாஞ்சூதம்
துறையவும்சூதத்திற்சூட்டிப்பலந்தூக்கே. சூ ௰௯

தூக்குப்பலந்தானசுகமானதங்கத்தை
நோக்குமிரும்புநேராயுருக்கிட்டு
தாக்குப்பலமொன்றுதானேயிதுக்குள்ளே
ஆக்குயுருக்கியடவாய்நொறுக்கிடே. சூ ௨௰

நொறுக்கியேகெந்தகம்நுகரய்ப்பலம்நாலு
மறுக்கியேகூட்டிவார்த்திடுகுப்பியில்
இருக்கியேவாலுகைத்தானேறறித்தீமூட்டி
உருக்கியேமூன்றுநாளுறவாயெரித்திடே சூ ௨௧

உறவாகச்செந்தூரமுருக்கம்பூப்பதம்பார்த்து
நிறையாகவாங்கியேநேராகநீகேளு

மறைவாகக்குன்றியிடைதின்றபத்துநாள்
துறவாகுவானஞ்சூழ்சட்டைப்போகும். ௩௪௨
போகுமேசெந்தூரம்புகட்டாயிரத்தொன்று
வாகுமேமாத்துவழங்கியமுப்பதாம்
தாகுமேவொன்பதுலோகமுந்தான்பொன்னும்
யாகுமேலிங்கம்பரிவாய்செந்தூரமே. ௩௪௩

கற்பம்.

செந்தூரந்தின்னயிற்றேகமயக்கினல்
தந்தாருமாவின்பால்தான்குடிபச்சையாய்
யெந்தூரும்போகாமலெடுக்குமதிமட்டும்
கந்தூருஞ்சித்தியாங்காயத்தைக்கட்டிடே. ௩௪௪

கட்டிடுஞ்சித்தியாங்காயப்பரீக்ஷையை
நாட்டிடுகத்தியால்நடுவுறவீசினல்
ஒட்டிடுகத்தியொன்பதுதுண்டாகும்
முட்டிடுகாயத்தில்முள்ளுங்கிழியாதே. ௩௪௫

கிழியாதுமேலுங்கெட்டிச்சிலைபோல
அழியாதுகாயமண்டமொடுங்கிலும்
வளியாதுவாசிமறிகிப்பறியாது
தெளியாதுலகத்தேசெத்தவர்கொடியே. ௩௪௬

கோடிதவஞ்செய்தாற்கூட்டிடும்வாமத்தில்
ஆடியேவாயிரங்கோடிதவஞ்செய்தால்
நாடியேவைந்துவிதத்தீக்ஷையைநாட்டிடு
தேடித்தெசதீக்ஷவதக்ஷணமூர்த்தியே. ௩௪௭

மூர்த்தியாய்நின்றமுழுச்சக்கரமேறு
ஆர்த்தியாய்ப்பூசித்தோனவன்தெசதீக்ஷயோன்
ஊர்த்தியாமேலேயுறுமனம்வாங்காது
கீர்த்தியாய்ச்சித்தரிற்கெடியாகவாழ்வாரே, ௩௪௮

வீரசத்துமணிவெள்ளைபாஷாணவெள்ளிவேதை.

வாழவேசவ்வீரம்மருவியபாஷாணம்
தாழவேஸவத்துத்திராவகம்நீவாரு
மூளவேவேகுமூட்டியேகாரத்தை

நீளவேயூதுநிலைத்துநின்றுகுமே. ௯௪௯

ஆடியசத்துக்குமந்தயிடைவெள்ளி
ஊடியேகூட்டியிருக்குமுகத்திலே
தேடியேசத்திடைசெயகுருதங்கூட்டிநீ
நாடிமணியைநலமாயெடுத்திடே. ௯௫௰

எடுத்தமணியையியல்நாலுக்கொன்றுதான்
அடுத்தசவுக்காரமந்திடைவீரமும்
தடுத்தபுழுகுந்தாளனசீனமும்
மடுத்தமணிக்கிடைவாயநீரிலாட்டிடே. ௯௫௧

ஆட்டியேபூசியடவாய்மணிமேலே
நீட்டியேகாய்ந்தபின்னேரண்டத்தூளில்வை
மூட்டியேமூடிமுதிரப்பிடம்போடு
தாட்டியவெள்ளியுஞ்சத்துங்குருவாமே. ௯௫௨

குருவையெடுத்துகொடுவங்கமாயிரம்
மருவிவுருகையில்மாட்டொன்றுசீனமாம்
மருவியசெம்பிலைந்நூற்றிக்கொன்றிடு
திருவாயசீனஞ்சிறப்பானவாறே. ௯௫௩

வாறேகுடவனில்மாட்டிடுநூற்கொன்று
தாறேயிருப்பிற்குக்கொடுநூற்கொன்று
ஆறேநற்காயமைந்நூற்றுக்கொன்றிடு
வேறேதுமில்லைமெதுவானசீனமே. ௯௫௪

சீனத்துறையோடேசெய்பத்துமார்க்கமும்
வானுத்துச்சொன்னேன்மகத்தானதீனீறு
பானத்தையுண்டுபாருங்கள்மைந்தரே
கானுத்தசிப்பிமேல்காட்டுறேன்கண்டிடே. ௯௫௫

## விருத்தம்.

பாரப்பாதிராவகத்திலுபரசத்தினேடு
பாஷாணத்துறையோடுபத்துச்சொன்னேன்
நேரப்பாபாஷாணமுபசரங்களெல்லாம்
நிறைநிறையாயிப்படியேவாடலாகும்
நாரப்பாகிளிஞ்சியைத்தான்தொட்டுமெள்ளச்

சாற்றுறேன் திராவகத்தைச்சுந்திரமேபாரு
தோப்பாவோடுகிறசில்காரம்போலச்
செகமெல்லாம்வாதமயமாகும்பாரே. ௬௱௬

வேறு.

முன்மூலிகை-உப்பாதிதிராவகம்.

பாருமுன்பத்துபங்கானதஞ்சுபோய்
பாருமுன்னஞ்சுபங்கையும்நீகேளு
ஒருமுன்தொந்தமொடுங்காமல்நீகேளு
காருமுன்வெவ்வேறாய்கடுகயிறக்கிடே. ௬௱௭

கிளிஞ்சிசுத்தி.

இறக்குந்திராவகமெடுத்தேயடைத்திடு
சிறக்குங்கிளிஞ்சிற்றிரமாய்முதிர்ந்தது
நிறக்குமுவர்மண்ணும்நேர்சுன்னங்கூட்டியே
உறக்கக்கிளிஞ்சியையுறவாயெரித்திடே. ௬௱௮

எரித்தேகருப்பெல்லாமிதமாய்க்கழுவியே
நெரித்தேநொறுக்கிநேராப்பீங்கானில்
பரித்தேதிராவகம்பாச்சிடுபொங்கிவேம்
சரித்தேகுளிர்ந்தத்தலத்தினில்வைத்திடே. ௬௱௯

வைத்திட்டுமூன்றுநாள்வடித்தேதெளிதெல்லாம்
நைத்திட்டமட்டியைநலக்கக்கொதிப்பித்து
கைத்திட்டமாகக்கடுகமெழுகாக்கி
பைத்திட்டாரம்பலம்ரெண்டுக்கப்பியே. ௬௱௰

சாரக்கட்டு.

அப்பிக்கவசமாயமைத்துக்குகைக்குள்ளே
ஒப்பியேசில்விட்டுவுருகவேசீலேசெய்
கொப்பிப்புடம்போடகொடுஞ்சாரங்கட்டுமென்னும்
செப்பியசாரத்திற்செயசாரங்கண்டிடே. ௬௱௰௧

கண்டிடுசாரத்திற்காசிரண்டேதூக்கி
ஒண்டிடுசிப்பித்திராவகம்விட்டரை
தண்டிடுமேனாப்பலந்தான்வீரமேற்பூசிப்
புண்டிக்குகைக்குள்ளேபாச்சிப்புடம்போடே, ௬௱௰௨

## வீரக்கட்டு.

போடும்புடமொன்றிற்கழமணியாகும்
நீடுஞ்சவ்வீரத்தைநீட்டநவலோகம்
ஓடுமேநூற்கொன்றுக்குறுமாத்துவொன்பது
ஆடுமேவீரமாண்மையாஞ்சாரமே. ௨௨௩

## சூதமயனம்.

சாரம்பணமென்றுதனிவீரமோர்பணம்
ஆரநற்சூதமதுவோர்பணம்விட்டு
நேரவரைத்திட்டுநீட்டியேசிப்பிநீர்
சாரவேசூதந்தானுமயனமே. ௨௨௪

## மாசித்திரசம்.

மயனத்தின்பேருமாசித்திமாரசம்
பயனித்தசூதத்திற்பணவிடையேதாக்கிக்
கயனித்தசாரமுங்காணோர்பணவிடை
தயனித்தவீரமுந்தானோர்பணந்தூக்கே. ௨௨௫

தூக்கியேசூதந்துடியாய்ப்பலமொன்று
தாக்கியேவிட்டுத்தான்வாருசிப்பிநீர்
தேக்கியேயோட்டத்திரண்டுமணியாகும்
வாக்கியேமூசையில்மருவவுருக்கிடே. ௨௨௬

## உயர்தேவதாரசம்.

உருக்கியசூதமுயர்தேவதாரசம்
பருக்கியதேவதாரசத்திற்பணந்தூக்கு
நெருக்கியசாரம்நேரோபணந்தூக்கு
தருக்கியவீரந்தானேபணமெடே. ௨௨௭

எடுத்தேயரைக்கையிலிதில்வார்பலஞ்சூதம்
மடுத்தேநற்சிப்பிநீர்வார்த்தேயரைத்திடு
கடுத்தேயுருட்டிக்கடியகுகைவைத்து
மடுத்தேயுருக்கவுமணியாகவாடுமே. ௨௨௮

## ஆதிமகாரசம்.

ஆடும்ரசத்தின்பேராதிமகாரசம்
ஓடும்நற்செம்புரசத்திற்பணந்தூக்கு

தேடும்நற்சாரஞ்சிறக்கப்பணந்தூக்கு
நீடுநல்வீரமும்நேரேபணமெடே. ௬௬௯

எடுத்தேயுரைத்துயிதில்வார்பலஞ்சூதம்
மடுத்தேநற்சிப்பிநீர்வார்த்தேயரைத்திட்டு
தடுதடுதேகுகையிற்றூக்கியுருக்கிடப்
படுத்தேகுகையிற்பாங்காகநிற்குதே. ௬௱௭௰

உருத்திராசம்.

நிற்கும்ரசத்தின்பேர்நிலைபானருத்திரன்
நற்குமிதிலோர்பணந்தூக்குநண்பாக்த்
தற்குநற்சாரந்தானேபணந்தூக்கு
மற்குநல்வீரமதிலோர்பணமெடே. ௬௭௧

எடுத்தேயரைப்பாயிசையவேசிப்பிநீர்
மடுத்தேயொருபலம்வாரிதிற்சூதத்தை
கரித்தேயரைத்துககாட்டிக்குகைக்குள்ளே
தொடுத்தேயுருக்கச்சுழன்றுநின்றுடுமே, ௬௭௨

பிரமரசம்

ஆடுமெணிப்பேரப்பனேசுந்தரா
நீடும்பிரமரசமென்றுபேர்சொல்வார்
கூடும்நற்பிரமரசத்திற்பணந்தூக்கி
ஓடும்நற்சாரமொருபலங்கூட்டிடே. ௬௭௩

கூட்டியேவீரந்துறையாதொருபணம்
மூட்டிடுசிப்பிநீர்முழுங்கவரைத்திடு
நாட்டிடுசூதம்நலமாய்ப்பணமொன்று
ஊட்டிடுவாட்டியுருக்கிநீபார்த்திடே, ௬௭௪

பரக்குச்சந்தானசூதம்.

பார்த்திடுசூதப்பேர்பரக்குச்சந்தானமாம்
போர்த்திடுசந்தானசூதத்திலோர்பணஞ்
சாற்றிடுசாரந்தானேபணமொன்று
கோர்த்திடுவீரங்குறிப்பாய்ப்பணந்தானே ௬௭௫

பாலரசம்.

தானேயிதெல்லாந்தாக்கியேசிப்பிநீர்

வானேயரைத்துமாட்டுப்பலஞ்சூதம்
கோனேயுருட்டிக்குகையிலுருக்கிடு
வானேயிதன்பேர்வாலாகமாமே. ௬௭௬

ஆமேநற்பாலாத்திற்பணமெடு
ஓமேநற்சாரமொருபணமேதூக்கி
வேமேகல்வீரம்விளங்கப்பணமொன்று
தாமேநற்சிப்பிநீர்தான்குத்தியாட்டிடே. ௬௭௭

நிர்மலசூதம்.

ஆட்டிடினற்சூதமதிலேர்பலம்வாரு
ஊட்டிடுவெல்லாமுறுட்டியுருக்கிடு
நீட்டிடிநாமம்நிர்மலசூதங்காண்
பூட்டிடிற்சூதம்புகளித்துக்கண்டிடே. ௬௭௮

கண்டிடுநிர்ம்மலசூதத்திலோர்பண
பண்டிடுகோரம்பணமேநிறுத்திடு
தண்டிடுவீரந்தானேபணம்போடு
ஒண்டிடுசிப்பிநீருருகவரைத்திடே. ௬௭௯

நீலகண்டசூதம்.

அரைக்கையிற்சூதமதிலோர்பலம்வாரு
நிரைக்கையிலாட்டிநிமிரக்குகையேற்றி
தரைக்கையிலுதுதளம்பிமணியாகுத்
திரைக்கையிற்சூதப்பேர்சொல்நீலகண்டமே. ௬௮௦

கண்டருடமேனகைமுறைபாகவே
ஒண்டியேசொன்னேனொருபத்துச்சூதமுந்
தண்டியேபத்துக்குள்தனித்தனியொவ்வொன்றிற்
கண்டிடுவேதையுங்காயமுஞ்சித்தியே. ௬௮௧

சித்திரசந்தான்சேர்ந்தபலமொன்று
உத்தநற்றங்கமொருபலமேகூட்டி
ஒத்தேயுருக்கியொருமணியாய்வாங்கிப்
பத்தேநொறுக்கிப்பரிவாகக்கேளுமே. ௬௮௨

கேளுமேகெந்தகங்கெடியாகபிந்திடை
வாளுமேகூட்டிமருவிடுகுப்பியில்

நாளுமேவாலுகைநலமாயினதையேற்றி
தாளுமேமூன்றுநாள்தானேயெரித்திடே. ௱௮௩

தெசரசச்செந்தூரம்.

எரித்தேபதத்திலிறக்குஞ்செந்தூரமா
மரித்தேநவலோகத்தாயிரத்தொன்றிடு
பரித்தேநன்மாத்துபதினாறுந்தப்பாது
மரித்தேகெடுக்காதேமாசித்தாகொண்டிடே. ௱௮௪

கொண்டிடுகுன்றியிடைதான்தினமொன்று
பண்டுமறுபதுநாள்கொடுநீகேளு
தண்டிடுசட்டைதானென்றுபோய்விடும்
மண்டிடுகாயமருணனிறமாமே. ௱௮௫

ஆமேபராபரத்தாதியாய்நின்றநீர்
தாமேதடுத்தாண்டசச்சிதாநந்தமே
வாமேவனாதோறும்வாங்குமேசட்டைதான்
ஓமேகடாக்ஷித்துவுற்பனஞ்சொல்லுமே. ௱௮௬

{ தத்துவம் தொண்ணூற்ருருக்கும் }
{ சட்டையும்தொண்ணூற்ரூறுதாம் }

சொல்லுகிறேன்சுந்தராசுகமாகக்கேளுங்கள்
சொல்லுகிறேன்தத்துவந்தொண்ணூற்ருருக்குஞ்
சொல்லுகிறேன்சட்டையுந்தொண்ணூற்றுவாறே
போஞ, சொல்லுகிறேன்பின்புமேகள்தோலுமுரியா()

தே,உரியாதுசட்டையொடுங்கிற்றுதத்துவம்
மரியாதுதேகமால்கோடிபோகிலுந்
தெரியாதேலோகத்தோர்செத்தார்வெகுகோடி
அரியாதேயைவருமழிந்தார்கள்காணுமே ௱௮௮

காணுமேயைவருங்கைவிட்டுப்போனதேன்
பூணுமேபெண்ணினாற்போனரோதேவர்கள்
தோணுமேசித்தர்கள்தோலாசைதள்ளினார்
ஊணுமேயுப்புமுறுதியாய்ப்புளியுமே. ௱௮௯

உப்பின்புளியின்குணம்.

புளியின்குணங்கேள்பெருத்தநினாமீறும்

அளியும்லவணத்தாலப்பாகரைமீறுந்
தெளியுமிதுவொண்டாற்செகமெல்லாங்கெட்டுது
ஒழியுமொழியுமென்றோதினார்சித்தரே. ௬௰

சித்தர்தாஞ்சொன்னதுசெகச்சாலகற்பந்தான்
ஒத்தல்லோவுப்பையொழிக்காமலோகத்தோர்
செத்தல்லோபோனார்செகத்துநூல்பார்த்தவர்
கற்றல்லோசாகாமற்கற்பதுகவியே. ௬௧

கல்விதானென்செயுங்கடுநாக்குரிசைக்கு
கல்விதானேன்செய்யுங்கல்விமயக்கத்தை
கல்விதானென்செயுங்காமநோய்கொண்டக்கால்
கல்விதான்வந்தால்கட்டாய்மனதையே. ௬௨

## கற்பத்துக்குப்பத்தியம்

மனதுக்குயேற்றவழிசொல்வேன்சுந்தரா
மனதுக்குவுப்புமேல்மாமோகந்தீர்ந்திட
மனதுக்குவுப்மைவளமாகக்கட்டியண்
மனதுக்குவொத்தமாபுளிகேளுமே. ௬௩

கேளும்புளியாரைகெடியாப்புளிகூட்டித்
தாளுமிளகுந்தனிப்பாலுநெய்கொள்ளு
வேளுஞ்சிறுகீரைவிளங்கும்பொனாங்கண்ணி
தேளும்பணியாரஞ்சிறுபயர்கொண்டிடே ௬௪

கொண்டிடுவெல்லாங்குலாவியசர்க்கரை
தண்டிடுதேன்பழந்தனித்தமதுரங்கள்
ஒண்டிதடுகோரக்கருதியாங்கற்பமாம்
பண்டித்தாம்பூலம்பகருமுறைகேளே ௬௫

## தாம்பூலச்சுன்னம்-கற்பச்சுன்னம்

கேளேயிச்சுன்னம்கெடியானவுத்தமம்
நாளேசிலாசத்துநற்சுன்னம்நல்லதாங்
காளேகன்றுற்சுன்னங்கடுமேகநீங்கிடுங்
காளேபவளந்தனிச்சுன்னமாகுமே ௬௬

ஆகுமேவுப்புபுளியொடுசுன்னமும்
பாகமேசொன்னேன்பதையாமற்கொண்டேறு

லாகுமேயிப்படிவையாமற்சித்தர்கள்
சாகுமேமென்றுசாற்றினர்சித்தரே (சுசுஎ)

## விருத்தம்.

கற்பமுண்டுயேறுதற்குவரிசைசொன்னேன்
  கைமுறையாயுலகமெல்லாஞ்சித்தாய்ப்போக
அற்பமென்றுயென்னூலைச்சொன்னனுகி
  லழுந்துவானவன்கோடிநரகத்துள்ளே
சொற்பமென்றுகாயசித்திகொண்டுதேறு
  தொடர்ந்துவுன்னைவிட்டகுறைதூக்குந்தூக்கும்
நிற்பமென்றுமனம்பிடித்துநில்லுநில்லு
  நிச்சயந்தானென்னூலிற்சித்தியாமே சுசுஅ

### தேவரசக்குரு-வேறு

ஆகியதேவரசம்பலமொன்று
வாகியதங்கமாட்டிடுமுப்பலம்
தாகியகூட்டித்தானேயருக்கிட்டு
பாகியமேற்பூசப்பருவமுங்கேட்டிடே சுசுசு

கேட்டிடுவீரங்கெடியாஞ்சவுக்காரம்
நாட்டிடுசீனம்நலமாம்புழுகொடு
தீட்டிடுபூரம்சிறக்கவகையொன்று
மூட்டிடுமும்மூன்றுகாசிடைதானுமே எ௰

தானுமேயெல்லாந்தானரைவாய்நீரால்
வானுமேயெல்லாமணிமேலேபூசிட்டு
காணுமேயண்டோடிங்கடலினுரையோடும்
மூணுமேரெண்டுமூறுகப்பொடிசெய்யே எ௱க

பொடியைக்குகையிலேபோட்டுமணிவைத்து
நெடியப்பொடியில்நிறம்பமேல்வைத்திட்டு
மடியச்சிலவிட்டுவளமாகச்சீலைசெய்
அடிக்கடியோர்புடமாறுதபோட்டிடே எ௱உ
போட்டிடுநீயீசாணம்புகழவேபூசைசெய்
மூட்டுநீவாசியைமுதிரக்குளிர்ந்தபின்
நாட்டுநீவாங்குநலத்தகுருவாகும்

ஒட்டுநீதங்கமுறுதியாஞ்சுன்னமே ௭௱௩

சுன்னப்பரியிலேகூட்டியேவீரமுஞ்
சுன்னப்பரியிலேகூட்டியேசினமும்
சுன்னப்பரியிலேகூட்டிப்புழுகிட்டு
சுன்னப்பரியிலேகூட்டியரைத்திட ௭௱௪

அரைத்ததைத்தொட்டுவறுபத்துநாலுகரும்
நிரைத்ததைப்பூசிநீட்டியேயூதிட
தரைத்ததுசுன்னமாம்தானேசரக்கெல்லாம்
பரைத்தரைவொவ்வொன்றிற்பாங்கானவேதையே

## சுன்னத்துறைவயணம்

வேதைக்குச்சுன்னத்திவீரமும்லிங்கமும்
பாதைக்குக்காரமும்பாச்சியரைத்திட்டு
தாதைக்குநூற்கொன்றுதாக்கிடலொன்பதில்
மாதைக்குமாத்துமகத்தாம்பதினைந்தே ௭௱௬

பதினைந்துமேலேபறந்திடுமென்பது
விதிமிஞ்சியோடும்வெவ்வேதேசரக்கெடு
மதிமிஞ்சியொன்பதல்மாடுடுமேலேற்றி
கெதிமிஞ்சியோடுங்கெடியாவேகமே ௭௱௭

## பரிச்சுன்னவேதை.

வேகப்பரிச்சுனத்தோடேசவ்வாதிட்டு
வேகப்பரிச்சுன்னத்தோடேயிடுவீரம்
வேகப்பரிச்சுன்னத்தோடிடுகாரமும்
வேகப்பரிச்சுன்னத்தோடேயரைத்திடே ௭௱௮

அரைத்தமருந்தையாட்டமுறைகேளு
உரைத்தவுபரசமொருநூற்றிருபதும்
விரைத்தேதடவிவிளங்கவுருக்கிட
கரைத்தேமணியாய்க்கண்விட்டேயாடுமே ௭௱௯

ஆடுமேவொவ்வொன்றிலந்தயிடைதங்கம்
நாடுமேகூதமும்நாட்டும்பரிக்கிடை
ஊடுமேகெந்தகமொக்கச்சமன்கூட்டி
தேடுமேகுப்பியிற்சேர்த்துச்செந்தூரியே ௭௱௰

செந்தூரமானதைத்தேய்க்கநவலோகம்
பந்தூருநூற்கொன்றுபாய்ச்சப்பசும்பொன்னும்
எந்தூருமோடுமியல்நூற்றிருபதுங்
கந்தூருமாயிரங்கடந்திட்டுவோடுமே ௭௱௰௧

## உபரசக்களங்கச்செந்தூரம்

ஓடுமுபரசச்சத்துவாஞ்செந்தூரம்
நாடுமேநூற்றியிருபதுநீகேளு
தேடுமேகலப்பமாய்சீராகவொவ்வொன்று
ஊடுமேதின்னிலுறுதியாங்காயமே ௭௱௰௨

காயமிறுகுங்கடியவுபரசம்
மாயமலத்தைமருகியேதள்ளிடும்
சீயநரம்பிலுறுகின்றதோஷம்போம்
நேயசமாதிக்குள்நிர்ம்மலகாட்டுமே ௭௱௰௩

காட்டுமேமேலேகடந்துகுருபதம்
காட்டுமேமேலேகதிரொளியாம்வெளி
காட்டுமேமேலேகாணுயறுவணை
காட்டுமேமேலேகண்கொளாநித்தமே ௱௰௭௫

## அறுவணையின்விபரம்

நிர்த்தயறுவணைநேர்தாண்டிக்காட்டிடு
நிர்த்தவொளிக்குள்ளேநேரேயிழுத்திடும்
நிர்த்தத்திற்சென்றால்நிலைமீளமாட்டார்கள்
நிர்த்தத்திற்கொங்கணர்நிலைகடந்தாரோ ௱௰௭௬

கடந்தாரோயென்குருகயிலாயச்சின்மயத்
தடந்தானேயேறிச்சாதகமாகாமல்
இடந்தாரோகோடியியல்பானசித்தர்கள்
நடந்தான்பராபரநாதாந்தவீதியே ௭௱௰௬

வீதியிலோடவெருளுவார்சித்தர்கள்
வீதியிலோடவெருளுவார்தேவர்கள்
வீதியிலோடவேசத்தரிஷிகள்
நீதியைப்பார்க்கையில்வேதிப்பார்காணுமே ௭௱௰௭

## பரிச்சுன்னத்திற்கட்டு

காணுமேசெம்புரசந்தான்பலமொன்று
தோணுமேகாரீயஞ்சூட்டுப்பலமொன்றுப்
பூணுமேதங்கம்போடுபலமரை
நாடுமேவொவ்வொன்றாய்நலக்கவுமூதிடே ௭௨௮

ஊதிமணியாயுருக்கியெடுத்திட்டு
ஆதியாந்தாளகமதிலிட்டுமுப்பலம்
ஓதிநறுக்கிவுறகுப்பிக்கேற்றிட்டுச்
சாதியாம்வாலுங்கதன்னுக்குள்வைத்திடே ௭௨௯

வைத்தேதின்மூன்றுமாட்டியேதீயெரி
கைத்தேகளங்காகுங்கைகண்டபேர்க்கிது
பத்தேநவலோகப்பாய்ச்சிடுநூற்றினமேல்
அத்தேநல்மாத்துசுவம்மூன்றுகாணுமே. ௭௨௰

## ருத்திரரசச்செந்தூரவேதை.

காணுமேருத்திரரசந்தான்பலமொன்று
நீணும்நிமிளைநேரேபலமொன்று
தோணுமேதங்கஞ்சூட்டுப்பலமொன்று
பூணுமேபல்மூன்றும்புகழாயுருக்கிடே. ௭௨௧

உருக்கியேவாங்கியடைத்துப்பொடியாக்கி
நெருக்கியேதாளகநேரேசமன்கூட்டி
தருக்கியேகுப்பியிற்றநேற்றிவாலுகை
பருக்கியேமூன்றுநாள்பலகயாமற்றீடே. ௭௨௨

இட்டேபதம்பார்த்துயிறக்கச்செந்தூரமாம்
மட்டேவைந்நூற்கொன்றுமாட்டிடுமொன்பதில்
நட்டேநன்மாத்துநலமாயிருபதாங்
கட்டேநல்வேதைகாணிதுபாருமே. ௭௨௩

## பிரமரசச்செந்தூரவேதை.

பாரும்பிரமரசந்தான்பலமொன்று
தாருமேதுத்தத்தின்சத்தோர்பலமொன்று
நேருமைதங்கம்நீட்டும்பலமரை
ஊருமேமூன்றுமுருக்கியெடுத்திடே. ௭௨௪

எடுத்தேதொறுக்கியிதற்குச்சமன்கெந்தி
மடித்துப்பொடிசெய்துமாட்டிடுகுப்பியில்
கடுத்துநல்வாலுகைதானேதினமூன்று
அடுத்துப்பதம்பாரருணனிறமாமே. ௭௨௫

ஆமேயிச்செந்தூரமாயிரத்துக்கொன்றிடு
போமேநல்மாததுப்புகழாகவைன்பது
ஓமேயிதின்வேதையோடும்வெகுதூரந்
தாமேவுகெந்தகச்சத்தின்பலந்தானே. ௭௨௬

சந்தானசூதசெந்தூரவேதை.

தானானசந்தானசூதமொருபலம்
வானானபூநாகச்சத்துமொருபலம்
கானானதங்கங்காட்டுப்பலமொன்று
தேனானதெல்லாந்திரளவுருக்கிடே. ௭௨௭

திரண்டமணியைத்திரளப்பொடிசெய்து
அரண்டநற்கெந்தகமந்தயிடைகூட்டி
புரண்டநற்குப்பிற்போட்டேறறிவாலுகை
உரண்டெனமூன்றுநாளோட்டியெரித்திடே, ௭௨௮

எரித்தேபதம்பார்த்துயெடுக்கச்செந்தூரமாம்
அரித்திடுமொன்பதிலாயிரத்துக்கொன்றிடு
பரித்திடுமாத்துப்பயித்தாறறுபது
மரித்திடுந்தேகம்மரியாமற்கேளுமே. ௭௨௯

கேளுமேசெந்தூரங்கெடியாகநெல்லிடை
தாளுமேதின்னுதனியரைமண்டலம்
வாழுமேதேகமால்ருத்திரன்வரை
காளுமேபூநாகநலத்தசஞ்சீவியே ௭௩௰

பாலரசச்செந்தூரம்.

சஞ்சீவிபாலரசத்திற்பலமொன்று
பஞ்சீவிகெந்தகச்சத்தோர்பலங்கூட்டி
வஞ்சீவிதங்கமாட்டுப்பலமொன்று
[illegible]ஞ்சீவியெல்லாமுருக்கியெடுத்திடே ௭௩௧

எடுத்தேநொறுக்கிப்பிடைக்கிடைகெந்தகம்
மடுத்தேகலந்துமாட்டிடுகுப்பியில்
கொடுத்தேயடுப்பேற்றிசுழன்றெரிமூன்றுநாள்
படுத்தேசெந்தூரமாம்பதத்திலிறக்கிடே ௭௯௨

இறக்கியசெந்தூரமிடுமாயிரத்துக்கொன்று
திறக்கியமாத்துசிறப்பாமெழுபது
முறக்கியகாயமூதண்டசித்தியாம்
பிழக்கியுலகத்தோர்பெண்ணலழிந்தவே. ௭௯௩

இல்வாழ்க்கை.

அழியாமற்சித்தியறையுறேன்சுந்தரா
வழியாகச்செந்தூரம்வளமாகிநெல்லிடை
தழியாகக்கொண்டுவாதானைமண்டலம்
ஒளியாகப்பாலைபோலூழிக்கும்வாழ்வரே. ௭௯௪

வாழ்வானவாழ்வுமகத்தானவாழ்விது
தாழ்வானவாழ்வுசமுசாரப்பொய்வாழ்வு
நாள்வானரவியினல்நலமானவயசுபோம்
மாள்வார்பிறந்தோரநேகமாங்கோடியே. ௭௯௫

நிர்ம்மலரசச்சூதச்செந்தூரம்

கோடியாம்நிர்மலற்சூதமொருபலம்
யாடியாமப்பிரோகச்சூதமொருபலம்
நாடியாந்தங்கம்நலத்ததோர்பலம்
ஊடியதெல்லாமுறவாகவாட்டிடே. ௭௯௬

ஆட்டிநொறுக்கியந்திடைகெந்தி
மூட்டியேகுப்பியில்மூதிரொடுவாலுகை
காட்டியேமூன்றுநாள்நலமாயெரித்திடு
தீட்டியசெந்தூரம்சிறுமதிர்மேனியே ௭௯௭

மேனியாஞ்செந்தூரம்விரைந்தொண்டாயிரம்
ஆணியாமொன்பதுலோகத்தணைத்திடு
பாணியாமாத்துப்பயித்தெட்டுயெண்பது
வேணியாமப்பிரோகவேகமிதுபாரே. ௭௨௮

பாரோயிச்செந்தூரம்பரிவாகநெல்லிடை

தாரோயிருபதுநாளிதுதானுண்ணு
நேரேயருணன்போல்நிச்சயஞ்சித்தியாம்
காரேபெண்ணுசையிர்காணிற்பிசகாதே ௭௩௯

## நீலகண்டமாக்ஷுதசெந்தூரம்

பிசமாமல்நீலகண்டராந்தன்ரசம்
அசகாதொருபலமப்பாயெடுத்திடு
கசகாதேநாகங்காட்டுபலமொன்று
தசகாததங்கந்தானேர்பலம்போடே. ௭௪௰

போட்டயிலைக்கெல்லாம்பூட்டுமனேசிலை
நீட்டநொறுக்கிநிணைத்திடுகுப்பியில்
மூட்டவேவாலுகைமுசியவெடுத்திடு
நாட்டவேமூன்றுநாள்நலமாயெரித்திடே. ௭௪௧

எரித்தேசெந்தூரமியலாய்ப்பதம்பார்த்து
பரித்தேநவலோகம்பாச்சாயிரத்தொன்று
வரித்தேநல்வாத்துவளமாகத்தொண்ணூறு
அரித்தேயிச்செந்தூரமணைநெல்லிடைதான். ௭௪௨

தானேகேள்நீலகண்டரசந்தானும்
வானேபணமிடைவாழசாரமோர்பணம்
கானேநல்வீரங்காண்பாய்பணமிடை
பானேவெறுரசம்பாய்ச்சாய்பலமொன்றே. ௭௪௩

## ரசக்குளிகை இதற்குசாரணவிபரம்

நன்றுயனைத்துநலமாயுருக்கிடு
பண்டானசூதம்பருமணியாம்நிற்கும்
கன்றுய்மணிக்கிடைகாட்டிடுசூதமே. ௭௪௪

சூதத்தைக்கூட்டி துடியனைசிப்பிநீர்
வாதித்துருக்கமணியாய்த்திரண்டிடும்
பேசதித்திதுயிப்படிபூட்டநூற்றெருந்தனே
நாதித்துயேறும்நண்பாணகுளிகையே. ௭௪௫

குளிகைக்குச்சாரனேக்கூட்டமுறைகேளு
குளுகைக்குக்கெஞ்சாவிணையேபலம்பத்து

ஒளிகைதலைமயிருயர்ந்தபலம்பத்து
தளுகயிதுரெண்டும்நருக்கடைபாண்டமே. எசசு

பாண்டமடைத்துபரிந்தூர்தமரிட்டு
ஏண்டியவாய்க்குயிசையவேசில்லிட்டு
தாண்டியசீலைதானேகவசித்து
போண்டியபூப்புடம்போடுதயிலமே. எசஎ

தயிலத்தில்சுக்கிலந்தானுகுஞ்சுரோணிதம்
வெயிலித்தவிஞ்சிவிளங்கியசாறுடு
பயிலித்துகூட்டிப்பருவமாய்மத்தித்து
மயிலித்தபூரமுமாட்டிநீவைத்திடே. எசஅ

வைத்ததயிலம்வளமாய்க்குகைபூசி
அற்றசயசூதமதுவைத்துருக்கையில்
தைத்தனப்போட்டானேவகைகேளு
கைத்தனவாழைகடுஞ்சித்திரமூலமே. எசகூ

மூலத்துடனேமுதிர்ந்தசதுரக்கள்ளி
கோலோடுத்துமூன்றுங்கூட்டியேசுட்டநீர்
ஒலொத்தநீரிற்கரைத்திடுவுப்பைநீ
வாலொத்ததொவ்வோர்வகைக்குப்பலம்நாலே. எ௫௰

நாலுபலந்தானுட்டுநவாச்சாரம்
நாலுபலந்தானுட்டுவெடியுப்பு
நாலுபலந்தாநல்லயெவாச்சாரம்
நாலுபலந்தானற்சத்திச்சாரமே. எ௫க

சாரத்திடைக்குத்தானிடுகல்லுப்பு
சாரத்திடைக்குத்தானிடுசவுட்டுப்பு
சாரத்திடைக்குத்தாக்கிடுயிந்துப்பு
சாரத்திடைவளையல்தன்னுப்புகாணுமே. எ௫உ

காணுமேயெண்பலங்கட்டியகடல்நுரை
பூணுமேகெந்தகப்போடுமிருபலம்
தோணுமேதாளகஞ்சூட்டுமொருபலம்
ஊணுமேரெண்டுபலம்லிங்கமூட்டிடே. எ௫௩

மூட்டிடுவீரம்முழங்கப்பலம்காலு

நாட்டிடுவெண்காரம்நலமாய்ப்பலம்நானு
கூட்டிடுசீனங்குறையாம்பலமூன்று
ஒட்டிடுவளையலுப்புபலமஞ்சிடே. ௭௰௪

இடுநீயமுரியினுப்புபலம்ரெண்டு
மடுநீயிதெல்லாம்வளமாயரைத்திட்டு
அடுநீயிதெல்லாமமைத்திவைபீங்கானில்
தடுநீநற்சாரணைசாத்தவுங்கேளுமே. ௭௰௫

குளிகைக்குயிடைதிட்டம்.

கேளுஞ்சகடுகுளிகைக்குத்சுந்தரா
நாளும்பதினேர்களஞ்சிசெய்சூதகந்
தாளுங்கவனகுளிகைக்கிடைகேளு
வாழும்பதினேழ்களஞ்சியும்வைத்திடே. ௭௰௬

வைத்திடுபோகிக்குநாலுன்றுதான்வைப்பாய்
நைத்திடுபோகிக்குநாலுன்குதான்வைப்பாய்
கைத்திடுஞ்சந்தானிகாட்டுபதினேழு
தைத்திடுங்காமினிதான்பதினென்பதே. ௭௰௭

குளிகையின்பெயர்.

பாதியாமிருபத்தொன்றேநிறுத்திடு
நதியானவஷ்டமாசித்துக்குளிகைக்கு
கதியாமிருபத்தைந்தேகமலினி
சோதியானதுப்பநுமொன்றேனென்சொருபமே. ௭௰௮

சொருபத்திறேடதொகுத்தேனிடைமுறை
மருபத்ததிகந்தான்வையாதேசுந்தரா
கவுத்திசித்தர்கட்டியசாத்திரம்
உக்குவத்திடையில்லைபோடாதுவிதியே. ௭௰௯

வீதியாந்தொந்தத்தைவிட்டேகுகைக்குள்ளே
சாதியாய்நின்றுசலமாயுருகையில்
ஓதியாம்பூநாகச்சத்தைத்திடைகூட்டி
காதியாம்புடமிட்டுக்கண்முகம்பாரே. ௮௰

பாரேசந்தானம்பளிச்சென்றுமின்னையில்

நேரேதிரைபோலநின்றாற்புடம்போடு
தாரேதிரையற்றுதனுக்கென்றுமன்னினாற்
சேரேமுகக்தான்றெளிவாகத்தோன்றுமே. ௭௬௧

தோன்றும்பதத்திற்சூழக்குகைவாங்கி
என்றுமிச்சூதமிட்டேமறுகுவை
ஊன்றியவப்பிரேகச்சத்தநதிடைகூட்டி
கான்றியேயாடையிற்கனபுடம்போடே. ௭௬௨

போட்டேமுகம்பார்த்துப்பொலிவாகத்தீர்ந்தபின்
பாட்டேவுபரசப்பாஷாணச்சத்தையும்
நீட்டேமுறைமுறைநேராகவொவ்வொன்றாய்
ஊட்டேவுபரசமொருநூற்றிருபதே. ௭௬௩

## குளிகைக்குச்சாரணைதிட்டம்.

இருபதினோடேயியலறுபத்துனால்
கருவதுமாறிகாட்டியசாரணைத்
தருவதிரத்தினந்தான்தங்கச்செம்பும்
உறுவதுவொன்பதுலோகமதுகூட்டே. ௭௬௪

கூட்டியதெல்லாங்கொடுத்துவிடுவிக்கில்
நீட்டியசேறுபோல்நின்றார்புடம்போட்டு
ஊட்டியசேறுமுறுதித்திரையாகும்
நீட்டித்திரையில்நேராகயிட்டியே. ௭௬௫

இட்டேபொடியெல்லாமிருத்திடுசாரத்தை
தொட்டவுபரசஞ்சூழரசமுட்கொள்ளு
நட்டேரசந்தான்நலத்தயிடைநிற்கும்
பட்டேகுளிகைக்கும்பாங்காகப்பண்ணுமே. ௭௬௬

பண்ணுந்துறைதோறும்பாய்ச்சுக்குகைவேறு
தண்ணுங்குகைதோறுத்தயிலமும்பூசிவா
எண்ணுமிருநூற்றுமூன்றையுமேற்றினால்
கண்ணுமோர்சாரணைகாட்டியசகடிதே ௭௬௭

சகட்டையேமுத்திரஞ்சாரணைதீர்த்திட
தகட்டையேகெவுனத்திற்றானேயெடுத்திடு
முகட்டையேமூவைந்துமூட்டிவிடுவித்தார்
பகட்டையேகாமிநீர்பாங்காகப்பண்ணுமே. ௭௬௮

பண்ணிடுமெட்டமாசித்திக்குமுப்பது
தண்ணிடுகமலிக்கித்தானங்கேயைம்பது
தொண்ணிடுதொண்ணூறுசொரூபமணிக்கேதான்
கண்ணிடுசாரணைகாட்டமுறையிதே ௭௬௯

குகையின்விபரம்

முறையாய்க்குகைக்குள்ளேமோசங்கள்வாராமல்
நிறையானமண்தான்நேரேபனிரெண்டு
கறையாமுமிதான்கறுக்காறுகூட்டியே
கறையாக்கழுதைமலமதுரெண்டே ௭௭௰

எடுத்திடுவெண்கலிசைந்தப்பொடிரெண்டு
நடுத்திடுசிலைநலமாய்ப்பலம்ரெண்டு
இடித்திடுவெல்லாமிணசையட்பதங்கொண்டு
கடுத்திடுமூசையிற்கைமுறைசெய்திடே ௭௭௧

செய்திட்டமூசையிற்செய்திடுசாரணை
கைதிட்டமாகக்காட்டினேன்சுந்தரா
பைதிட்டமூசையிற்பாசினூற்சாரணை
மெய்திட்டமாகும்விழுந்துகிழியாதே. ௭௭௨

விருத்தம்.

பாரப்பாகுளிகைக்குயிடையேமீறில்
பாங்காகச்சாரணையைத்தீத்தாலுகில்
நேரப்பாவந்தரத்தில்மயக்கித்தள்ளும்
நிமிஷத்திலங்கிருக்கநிலைக்கொட்டாது
தாரப்பாயெடுக்கையிலேதலைகீழாகுஞ்
சகித்தக்காலகிரியோடுகொண்டுமீறும்
சேரப்பாகுளிகைக்குநிறையோசொல்லார்
செகத்தோர்க்குக்குளிகைசெய்யத்திறஞ்சொன்
[னேனே ௭௭௩

திராவகம்-வேறு.

பாங்காய்திராவகம்பரிவாகச்சொல்லுறேன்
தாங்காவெடியுப்புத்தானேபலம்பத்து
ஓங்காய்ப்படிக்கியுயர்ந்தபலமெட்டு
ஆங்காதவன்னபேதிபலம்ரெண்டே ௭௭௪

பலமொன்றுகல்லுப்புப்பார்பலமிந்துப்பு
வலமொன்றுநல்லதான்வளைகிலுப்பு
தலமொன்றொருபலஞ்சவுட்டுப்புதான்ரெண்டு
குலமொன்றிருபலங்கூட்டுபூநீறுமே ௭௱௫

கூட்டுநவாச்சாரங்குறையாதொருபலம்
நீட்டுநல்வாழையினுப்போவளைப்பலங்
ஆட்டுயுருவியினுப்பதனைப்பலம்
மூட்டுவெள்ளுப்புமுயன்றனைதானுமே ௭௱௬

தானுமிதுவெல்லாஞ்சாரப்பொடியாக்கி
கோனுமிதுவெல்லாங்கொட்டிக்கலயத்தில்
வானுமிதின்மேலேவைத்தேதமர்ச்சில்லு
தேனுமிதின்மேலேசேர்த்துக்குகைவையே ௭௱௭

வைத்தேகுகைதுரில்வாகாய்ப்பணம்போலே
னைத்தேபொதித்துநற்குப்பிச்சாய்ப்பாக
கைத்தேவிலப்புரங்கடுங்குப்பிபோத்திட்டு
ஒத்தேதமொல்லாமுறவாகச்சேர்த்திடே ௭௱௮

ஏழுவுபாசச்சரக்குச்சூதம்.

சேர்த்திட்டுச்சீலைச்சிறக்கவேமண்செய்து
காத்திட்டுப்போற்றிக்கடுகவேதீயிட்டு
மாத்திட்டகுப்பிவாய்வைத்திடுபீங்கானைப்
பேரத்திட்டதீநீர்பொலிவாய்விழுகுமே ௭௱௯

விழுந்திராவகம்விந்தைகேள்சுந்தரா
எழுகின்றவப்பிரேகச்சத்துவொருபலம்
தழுகின்றகல்வத்தில்தாக்கிநொறுக்கிட்டு
முழுகுந்திராவகமூட்டியிதில்வாரே ௭௱௰

வார்த்துயிருசாமம்வைத்தபின்நீகேளு
போர்த்துநல்வீரம்போட்டதிலோர்பலம்
கோர்த்துக்கிளறிகுமட்டிவைமூன்றுநாள்
ஏற்றியரைக்கவெழுந்துரசமாமே ௭௱௧

ரசமாகக்காந்தத்தின்சத்தோர்பலமொன்று
அசமாய்நொறுக்கியதில்வார்திராவகம்

நிசமானவீரமும்நீட்டதிலோர்பலம்
அசமாகமூன்றுநாளரைத்திடுசூதமே. (௭௮௨)

சூதமாமிப்படிதொகுப்பாயெடுத்திட
வேதமாமுபரசம்விளம்புறேன்சுங்கா
வாதமாம்பூநாகச்சத்தையுஞ்சூதஞ்செய்
நேதமாய்நிமிளையின்சத்தையுஞ்செய்திடே. (௭௮௩)

செய்திடுங்கற்பூரசிலாசத்தைச்சத்தாக்கி
செய்திடுமண்டோடுசிறக்கவுஞ்சத்தாக்கி
செய்திடுநண்டோடுதீர்க்கவுஞ்சத்தாக்கி
செய்திடுவேழுருபாசச்சூதமே. (௭௮௪)

உபரசலோகங்களில் சூதமாக.

உபரசம்போலேவூட்டக்கேளோகத்தில்
தபரசநாகந்தானேபலமொன்று
கவாசத்திராவகங்காட்டியொருசாமஞ்
சுபாசவீரம்சூட்டுப்பலமொன்றே. (௭௮௫)

ஒன்றுப்புடம்போட்டுறுநவைமூன்றுநாள்
நன்றுயறைக்கநற்சூதமாயிடும்
கன்றுநவிப்படிகாரீயமாட்டிடுக்
தன்னுகச்சூதமாம்தான்பாருமீயமே. (௭௮௬)

ஈயத்தைப்போலேயிரும்பில்நீர்பொட்டிட
பாயொத்தவீரமும்பாய்ச்சியதீரும்
காயொத்துமூன்றுநாள்கடந்துயரைத்திட
தாயொத்தசூதமாந்தன்னையங்கண்டிடே. (௭௮௭)

கண்டிடுமிப்படிகடுந்தங்கத்தேபூட்டி
ஓண்டிடுமஞ்சாநாளூறுகவரைததிடு
பண்டிடுங்கங்கம்பாலாசமாகும்
மண்டிடவிப்படிவாழ்செம்பிலேற்றிடே. (௭௮௮)

ஏற்றியேசெம்பிலிட்டேதிராவகம்
போற்றியேவீரமும்பூட்டிவைமூன்றுநாள்
மாற்றியேநாலாநாள்மசதிக்கச்சூதமாஞ்
சாற்றியேவாதகுநீதனிப்போக்குக்கேளுமே. (௭௮௯)

ஏழுவகையுபாசமும்

பஞ்சலோகரசமும்சேர்ந்த செந்தூரம்.

ஆகருருமுபாசங்கெடியானசூசமும்
ணேரும்மயஞ்சுவகைலோகசூக்குமம
தாளும்பணிரெண்டுதான்றுணிடைகேளு
வாழும்வகைக்கோர்பலமதுவாங்கிடே. (௭௯௦)

வாங்கிட்டுவெல்லாமறுகல்வத்திட்டு
ஓங்கியசிப்பநீருறுவாரிதுக்குள்ளே
தேங்கியசெயசாரம்சேர்த்துலாகன்றான்
காங்கியிருகாசுகாட்டியவீரமே. (௭௯௧)

வீரத்தினோடேவிட்டரைசிப்பிநீர்
காரத்தினோடேகடுகவுரக்கிடு
சாரத்தின்சூதந்தனுப்பியுருக்கிடும்
நேரத்தின்சூதநீகேள்செந்தூரமே. (௭௯௨)

செந்தூரஞ்செப்பத்திறங்கேளுஞ்சுந்தரா
கந்தூருஞ்சூதமிடைக்கூட்டிக்கெந்தகம்
நந்தூரநொறுக்கித்தனிக்குப்பிக்கேறிட்டு
வந்தூருவாலுதைவளமாயெடுத்திடே. (௭௯௩)

ஷை பன்னிரண்டுசத்துச்செந்தூரம்.

எடுத்திட்டெரிப்பாயியல்பாகமூன்றுநாள்
அடுத்திட்டசெந்தூரமருணனிறமாகும்
படுத்திட்டவொன்பதிற்பாய்ச்சாயிரத்தொன்று
கடுத்திட்டமாத்துநற்பதினாறுமே. (௭௯௪)

பதினாறுபோலேபாலனுமுன்றேகம்
கெதிநாறவேகுன்றியிடைகொள்ளமண்டலம்
மதிநாறுமீசன்மாமாயிக்கிச்சொன்னது
விதிநாறுசாவுவெறும்பொய்யுமானதாம். (௭௯௫)

வேறு

கடுக்காய்.

தானுமரிதகிசார்ந்தவிரித்ராடாள்
ஞவாவனதுற்கிமலத்தைபறப்பவள்

கோணும்வாவிருலிகொடுநோய்ச்குப்பண்டிதி
காணுமற்கற்பககடுக்காயின்பேரே. (௭௯௬)

மிளகு.

மாதமறிக்கொமாநித்திரைபோக்கி
போதமலத்தைசபோக்கியசிற்பரி
காதம்பரிசிக்கக்கடுங்காரகோபதி
வேதமிளகின்விளங்கியநாமமே. (௭௯௭)

சதுரக்கள்ளி.

ஆகியராட்சசியடங்காதசத்திநான்
போகியப்பாலிபுகழ்முள்ளிகூலிணு
தாகியமுறுக்கிசதுர்முகவேதியாய்
வாகியகாட்டில்வளர்சதுரக்கள்ளியே. (௭௯௮)

கைத்தாழை.

குமரிகுறத்திகொடுங்கடகநாறிகான்
அமரியசோதியலகைச்சூராட்சசி
வமரிமலத்தைமாசறத்தள்ளிச்சி
கமரியநாமங்கைகதாழைப்பேருமே. (௭௯௯)

சிவகரந்தை.

போக்குழலைச்சிபுகழாங்குணத்திதான்
வாக்கிச்சிவன்முடிவாசித்தகன்னியாள்
தாக்கப்பரிமளிநாகமடக்கிகதான்
நாக்கபணுறுங்கரந்தையினாமமே. (௮௱)

பொற்றலை.

பொற்றலைவல்லிபுகழ்செங்கொடிச்சிதான்
கற்றலைப்பொன்னிகலங்கியபொற்பூவி
சிற்றலைதேவிசிவந்தசரிசாலை
கற்றலைபொற்றலைகையாந்தகரையே. (௮௱௧)

சீந்தில்.

அமூர்தவல்லியமுதுபொற்சீந்திசான்
குமூர்த்தசஞ்சீவிகொடியவிஷகாரி

திமிரக்கடவிசிவசஞ்சீவிதான்
அமுர்தத்தலைச்சீந்திபதனுடநாயமே. (௮௱௨)

வேம்பு.

சாகாதமூலிதான்விஷபக்ஷணி
வாகானநிம்பமதுரகசப்பிரான்
ஆகாப்பழங்களாக்கியசத்தி
தாகானவேம்பின்றன்னுடகாமமே. (௮௱௩)

குன்றி.

கறுத்தமுகச்சிகரியசெங்குன்றிதான்
ஒறுத்தவெளுப்பிவுடர்மலைக்குருவி
நிறுததகுணக்காரிநோான்மஞ்சிச்சி
மறுத்தகொடிச்சிமலைக்கருங்குன்றியே. (௮௱௪)

கையாந்தகரை.

வதனமாம்பூண்டுமோகரிசாலைதான்
சுதனத்திரிபுரம்சிட்டோன்புதல்வன்
விதனததிருமால்விளங்கியகண்ணனும்
கதனத்தெழுபுகைகையாந்தகரையே. (௮௱௫)

குப்பைமேனி.

திரிபுரமெரித்தோன்செகமூறுமேனி
கரியரியுரித்தோன்காலாக்கினியோன்
மரிமுனைறமசக்கிமாற்சாலயோகினி
கொரியினைவபேர்தான் குப்பைமேனியே. (௮௱௬)

செருப்படை.

சிற்றிலைப்பாதர்தேகச்சோதிதான்
அத்தன்புள்ளடியதிசாம்பல்வருணி
முற்றலைச்சத்திமுதுகோடைவாசினி
உற்றிலைச்சிறியசெருப்படைப்பேரே. (௮௱௭)

சிவனார்வேம்பு.

காலனைவென்றோன்கபாலபாணியோன்
கோலேலனிசன்னோனேதிருருவி
கோலன்வேப்புகொடியமாய்மைத்துனன்
பாலன்சிவனார்வேப்பின்பெயரே. (௮௱௮)

வாலுழுவை.

செங்கோலவித்துச்சிறந்தசாஸ்வதி
நங்கோலக்கன்னிசாதகச்சத்தி
பங்கோலவாணிபாட்டுக்குடையாள்
மங்கோலமாகும்வாலுழுவைப்பேரே. (௲௯௯)

தூதுவேளை.

முள்ளுக்கொடிச்சிழுகண்டக்கன்னி
கள்ளுவனத்திகயனசஞ்சீவி
தள்ளுசங்கோலங்கானபகாசினி
ஒள்ளிபதூதுவேளையின்பேரே. (௲௱)

தக்கோலம்.

ஆகுநற்கோலியடவுயர்ஜீவி
வாகுநற்கேசிமாமோக்கசத்தி
போகுநல்லாகிபுரியஷ்டசித்தினி
தாகுநல்காமந்தக்கோலப்பேரே. (௲௱௧)

சாதிக்காய்.

கப்பற்றுறைச்சிகடுங்காயலாகிரி
செப்பலுறச்சிசிறுகாய்க்குசத்தி
வெப்பநல்வாருதிவோரக்குடிச்சி
சப்பநல்நாமஞ்சாதிக்காய்ப்பேரே. (௲௱௨)

கொடிவேலி.

கொடியகடுந்தீக்கூரியவன்னி
அடியதணலத்தியாங்காரசத்திதான்
செடிதயணலால்சீர்வன்னியானவள்
கடியவினுமங்கருக்கொடிவேலியே. (௲௱௩)

சரக்கொன்றை.

சடைமுடிகொத்துசம்புப்பொற்சாம்
நடமிடுமீசன்நல்லபொற்கொன்றை
தடமுடிவிர்த்தன்சாதகவன்னி
கொடைமுடிசாமாங்கொன்றையின்பேரே, (௲௱௪)

நிலப்பனை.

முத்திபெழுந்திடுமுன்கோலவோரம்
புத்திபூமிப்பனையெனச்சொல்லுவார்

அத்தியகானத்தமர்ந்தகுறச்சி
நித்தியநாவம்நிலப்பனைப்பேரே. (அ௱௰௫)

## அழிஞ்சில்.

ஆகுந்தெரிசினையாதியங்கோலம்
போகுநல்வித்துண்ணிபுகழானஜீவினி
வாகுர்செரிசினிமாயிந்திரசாலி
தாகுமழிஞ்சிதன்னிடபெயரே. (அ௱௰௬)

## புளியாரை.

ஆரிசடைச்சியாம்பிலாரை
தாரியகற்பத்திகாகமடக்கி
வாரிபுளிச்சிமாதோஷம்நீக்கிதான்
பேரியாய்நின்றபுளியாரைப்பேரே. (அ௱௰௭)

## எருக்கு.

ஆகியவற்கமண்டத்திற்பானுவாரம்
தாகியதீப்பால்சாதகச்சூரியன்
வாகியசெந்திமாரவிவிந்துகான்
தாகியவெருக்கின்றன்பலப்பேரே. (அ௱௰அ)

## மருகு.

தணம்புருகுஞ்சந்தான்காட்டுச்சாரைதான்
அணம்பியமஞ்சியாசைக்குறியான்
தணம்பியவிரியஞ்சார்மலைக்கஞ்சாம்
இணம்பியமருகுக்கிசைத்திட்டநாமமே. (அ௱௰௯)

## கோவை.

மண்ணுமுழுங்கிமாதாம்புரத்தியாம்
அண்ணல்வல்லியதாப்பழத்திதான்
கொண்ணயனுமத்திகோட்டுறுகன்னியாம்
இண்ணயக்கோவைக்கெடுத்திடுநாமமே. (அ௨௰)

## சிறுகீரை.

குப்பைக்குடையாள்கூற்றுவன்றங்கச்சி
அப்பைச்சுருக்கியாரோக்கியக்காரி

நப்பைக்குடைச்சிநறகாயசித்திச்சி
செப்பியநாமஞ்சிறுகீரைப்பேரே. (அ உ க)

பொன்னாங்கண்ணி.

கண்ணுக்கினியாள்கடுஞ்சிதசாத்தி
நண்ணும்பகலேநக்ஷத்திரஞ்சோன்றி
விண்ணுக்குமூர்த்திவெண்காயசித்திச்சி
பொன்னுற்றபொன்னாங்கண்ணிபேர்மமே. (அ உ உ)

ஆடுதின்னாப்பாளை.

ஆடுண்ணாவாலமடங்காக்கசப்பி
பாடுண்ணாச்சஞ்சீவிபாதாளமூலி
நாடுண்ணாக்கோபம்நல்லெமகற்பம்
பாடுண்ணுமாடுண்ணாப்பாளையின்பேரே. (அ உ ௩)

வெற்றிலை.

தாம்பூலமாதற்சாதாலட்சுமி
நாம்பூலகன்னிநல்நாகவல்லிதான்
ஓம்பூலகன்னியுருபல்லழகியாம்
வேம்பூலதேவிவெற்றிலைநாமமே. (அ உ ௪)

கெருடக்கிழங்கு.

கொல்லன்கோவைகொடியகற்கோவையாம்
நல்லனின்றதுசாகாக்கிழங்குதான்
ஒல்லனல்லாமுதிரக்குடோரியாம்
கொல்லன்கெருடக்கிழங்கின்பெயரே. (அ உ ௫)

சாபத்திரி.

பத்திரிபொற்பூபருகியலாகிரி
அத்திரிகிள்ளையலாந்தலகிரியாம்
கத்திரிவாணிகடுங்காமச்செல்விதான்
சத்திரச்சாதியாம்சாபத்திரிப்பெயரே. (அ உ ௬)

கிராம்பு.

காருக்குமுன்புகடலடிபுஷ்பம்
வாருற்றசின்னிமருவும்பாங்கிச்சி

நேருற்றவன்னிநேர்தாகச்சாந்தியாம்
தாருற்றகிராம்புக்குச்சாற்றியநாமமே. (௮௨௭)

திப்பிலிமூலம்.

நறுக்குமூலம்நற்கண்டமூலமாம்
சிருக்குந்தேசாம்புரமெனுமூலந்தான்
மருக்குங்கடோரிமாருசுநாசினி
பெறுக்குந்திப்பிலிமூலத்தின்பெயரே. (௮௨௮)

விழுதி

காட்டுவகத்திகடுவிஷநாசினி
மூட்டுநற்சித்திமுதுநரைநாசினி
ஊட்டுநற்சிற்பரிவூழிக்குறுந்தியாம்
நீட்டியவிழுதிக்குநிலைத்திடுநாமமே. (௮௨௯)

இரத்தமண்டலி.

வாருணசந்திரிமருவுகாணுகிதாஸ்
தாருங்குளத்திற்சார்ந்தகுளசியாம்
விருமுதிரம்விளங்கியசத்தி
பேறுனரெத்தமண்டலிப்பெயரே. (௮௩௰)

காட்டாமணக்கு.

காட்டுக்கொட்டைகடுகியதண்டிசான்
யாட்டுக்குப்பஞ்சமுகமானருத்திரி
ஏட்டுக்கனலிவெலியாலுமென்பார்கள்
நாட்டியகாட்டாமணக்கின்நாமமே. (௮௩௧)

மருதாளி.

ஐவணமாலியழகுயர்வண்ணத்தி
கைவணக்கன்னிகடியசிறப்பியாம்
மெய்வணச்சேம்பிமெத்தவிஷத்திதான்
மைவண்ணமாகும்மருதாளிப்பெயரே. (௮௩௨)

கெஞ்சா.

கோரக்கர்மூலிகொடுயோகக்கற்பத்தி
தாரொத்தசித்தர்தானுண்ணுமூலி
வாரொத்தயோகம்வளர்த்திடும்ஞானிதான்
நேரொத்தகெஞ்சாநிலைபெரும்பேரே. (௮௩௩)

## நிலவாகை.

பாதாளவாகைப்படரும்பனாச்சி
வேதாளகன்னிவெணைமலம்பேராக்கி
பூதாளமங்கைப்புழுவின்குடோரி
நீதாளமானநிலாவகைப்பெயரே. (௮௰௪)

## சட்டுக்கொடி.

அப்பைக்கிரட்டியானந்தவல்லி
தப்பைக்கொடிச்சிசலபாஷாணியாம்
உப்பைத்திரிச்சியுதிராகிறத்தி
கப்பைசேர்கட்டுக்கொடியினுமமே. (௮௰௫)

## பிரண்டை.

வச்சிரவல்லிமரவுருசத்தி
கச்சிராநான்முகக்குடியகொடிச்சிதான்
உச்சிரசந்தியுருகுங்கனலியாம்
நச்சிரப்பிரண்டைநாட்டியநாமமே. (௮௰௬)

## வல்லாரை.

குளத்துக்குறத்திகொடியகசப்பி
அளத்துவயலுக்குளழகாவல்லிச்சி
தளத்துச்சிலுக்கிசாதகச்சித்தி
வளத்துப்பெரியவல்லாரைப்பெயரே. (௮௰௭)

## தாம்பிரச் சிகை.

சந்துகற்பாங்கிதாமபிரக்கட்டி
கொந்துபருவதக்குட்டிடைக்குஞ்சுவாம்
பந்துற்றநமபிபருமனைச்செம்புதான்
தந்துற்றதாம்பிராந்தன்சிகைப்பெயரே. (௮௰௮)

## மயூரச்சிகை.

பருவதக்குச்சுபாரபயிற்குச்சுவாம்
அருவதகோரையறுமுகன்விசிறி
தருவதசருட்டிச்சாகாசமூலி
மருவதமயூரச்சிகையுடனுமமே. (௮௰௯)

கண்டங்கத்திரி.

கண்டங்காரிகடுமுள்கெடிச்சி
தண்டிலேனமத்திதாள்கபநாகினி
பண்டிலேக்கத்தரிப்புமூர்பொன்னிறத்தியாம்
ஒண்டியகண்டங்கத்திரிப்பெயரே. (௮௪௰)

கானற்றனுவு.

கானமாவாங்கடுகொட்டையாகாம்
வானகர்சித்தர்பருவியகற்பமாம
ஊனகசாங்கிடியாளிவிடுசெம்மாம்
தானகக்கானற்றனுவின்பெயரே. (௮௪௧)

பிரமி.

போமைபிரமிபேருற்றசாப்பிராணி
வாரானசேற்றில்வளர்ந்தமடச்சிதான்
தாராமுகிரந்தான்மலநாசினி
பேராகநின்றபிரமியின்பெயரே. (௮௪௨)

தில்லை

ஆடியகூத்தனம்பலவிருக்ஷம்
நாடியநிர்த்தன்நமனைவெருட்டியாம்
முடியவன்னிமுதுகனற்பாவி
சேடியதில்லைமரத்தின்பெயரே. (௮௪௩)

கப்பட்டி

காபிகருபிதோதகக்கன்னி
மாபிகனைவிசாரணைக்கரிச்சி
ரபிசிநபாவிசென்மாக்காசி
ரபியாமநல்லகப்பட்டிநாமமே. (௮௪௪)

மா விலங்கு

மாந்தமறுக்கிம்கத்தானவன்னிதான்
காந்தக்கடுவன்கடுமாவிலங்கு
எந்தயகொக்குமெழுப்பியதீச்சுடரி
நந்தயமாவிலங்கினாமமே. (௮௪௫)

தேற்றாமரம்.

தண்ணீருஞ்சேறுஞ்சால்வேறுசெய்தவன்
பண்ணியவுடல்நீர்பருகுமூறித்தவள்

புண்ணியசத்திபொருந்தபராசனி
தெண்ணியதேற்றுமாத்தின்பெயரே. (௮௪௬)

புளியான்சிறுகீரை.

புளியாஞ்சிறுகீரைபெருங்கொடிக்கீரையாம்
வளிசிறுசெங்கொட்டைமாசெம்புமூலிகை
களிசிறுகாயங்கழியாதநாயகி
ஒளிசிறுபுளியாங்கீரையின்பெயரே. (௮௪௭)

நீராளி.

முதலைப்பூடுமுயன்றசெங்கொடிச்சி
ஆனைச்செங்கொட்டையழகுபூச்சூடிதான்
நிதனைக்குளத்திநீரிற்குடிச்சியாம்
அதனையாம்நீராளியின்பேரே. (௮௪௮)

செவ்வலரி

சிவந்தவல்லிசெப்புக்குடத்தி
தவந்தலிங்கங்கள்தான்பெற்றகன்னியாம்
நவந்தவிஆத்திநல்லசிறப்பாவி
தவந்தசெவ்வலரிதன்னிடநாமமே. (௮௪௯)

சிவந்தநாயுருவி.

சிவந்தநாயுருவிறுசேர்மணிக்கயறுதான்
அவந்தபரமார்க்கமடுசிலேக்காரமாங்
கவந்தகருந்தணற்காரத்திற்காரங்காண்
தவந்தேசிவந்தநாயுருவியே. (௮௫௦)

சிவந்தசதுரக்கள்ளி.

திண்டிராவிச்சிசிவந்தசதுர்முசி
தண்டியபாவிதனிக்காவல்லகினி
ஒண்டியவிரத்தமுறிகின்றபாவிதான்
தண்டியவிரத்தசதுரக்கள்ளியே. (௮௫௧)

சத்திச்சாரணை.

கன்னிகுமரிகடுந்தேரிலேச்சிநான்
மன்னிரகுளக்கரைவசித்தசாத்திதன்

உன்னியகோதையுயிருக்குநாயகி
தன்னியசத்திச்சாரணைப்பெயரே. (௮௫௨)

வில்வம்.

கூவிளம்பத்திரிகொடுமூவிலைச்சி
காவளைமுள்ளாய்க்கலந்தவிருக்ஷத்தி
தாவளையீசர்க்குச்சாத்தியபத்திரம்
நாவளைவில்வத்தைநாட்டியநாமமே. (௮௫௩)

பேய்த்தும்பை.

நாட்டுச்சணைச்சிக்கானற்பேய்ச்சிதான்
நீட்டுச்செடிச்சிநேரேகருப்பியாம்
மூட்டுச்சடைச்சிமுதிர்ந்தகசப்பியே
பேட்டுக்கிசைந்தபேய்த்தும்பைப்பாரே. (௮௫௪)

பேய்க்கொள்ளு.

சுனையுறுங்கானந்தொல்புகழ்சத்தி
கனையுறிகொத்துக்கசப்புறுகொள்ளுமாம்
மனையுறமூக்குமந்தக்கரணந்தான்
பினையுறுநாமங்கள்பேய்க்கொள்ளுந்தாமே. (௮௫௫)

பேய்ச்சுடலை

ஓங்குஞ்சுருத்திவொழுகுநீர்ச்சுடலைதான்
வாங்கும்வெறிச்சிமருவியநேசத்தி
பாங்குஞ்சுணச்சிபரியபொன்மேனிச்சி
ஏங்குநல்பேயாச்சுடலையினுமமே (௮௫௬)

பேய்த்துவரை

கசந்ததுவரைகடியசுனையோனும்
அசந்துவழூதோனுகாவெறிம்யான்
பசந்தபிசினிபருஞ்சுருகாறியாம்
நசந்திடும்பேயாந்துவரையினுமமே. (௮௫௭)

அழுகண்ணி

அழுகுங்குமரிவாகாவெறிச்சிதான்
ஒழுகுநற்கள்ளியருண்டமடவியாம்
தழுகுநன்னுகம்போற்றன்படமுக்கிதான்
கழுகுநல்லழுகண்ணிநாமமுமாமே. (௮௫௮)

தொழுகண்ணி.

குண்ணிச்செடிச்சிகூடுங்கொடிச்சியாம்
நண்ணிப்பிறந்தாநலங்கும்நற்பூஷணி
ஒண்ணிச்சுருளியோங்கியகாமிதான்
எண்ணித்தொழுகண்ணிப்பேரெனச்சொல்லுமே. ()

முடவாட்டுக்கால்.

மலைக்கால்சிலைக்கால்மருவியகற்கால்
நிலைக்காற்றலைக்கால்நேராய்முடங்குங்கால்
உலைக்காதவுஞ்சலுறுசிலைமேஷக்கால்
முலைக்கால்மலையன்முடவாட்டின்காலே. (௮௱௰)

நாகசிங்கி.

பொடியகொடிச்சிபொருமுஞ்சுண்ணச்சியாம்
நெடியநன்மூக்கில்நேர்ந்திட்டதும்பிதான்
அடையகுளத்திறமர்ந்தமரத்தியாம்
நடியதோர்நாகமாஞ்சிங்கியின்பெயரே. (௮௱௧)

இருப்பவல்.

மன்னியகாட்டுமெருக்கொழுந்தென்பார்
தன்னியபுத்தர்கைச்சம்மட்டியென்றும்பேர்
பன்னியமேனிப்பருங்காணற்கன்னியாம்
உன்னியவிருப்பவலுக்கோங்கும்நாமமே. (௮௱௨)

தேள்கொடுக்கிலை.

மேவுமணச்சிவிருச்சிகப்பூண்டுதான்
தாவுங்கொடுக்கிலைச்சாறுசிவப்பி
காவுங்கடுத்திகடியவிஷத்தியாம்
தேவுந்தேள்கொடுக்கிலைச்செப்பியபேரே. (௮௱௩)

கருவூமத்தை.

கறுத்தநிறத்திகடுக்கச்சடைச்சி
நிறுத்தகறுப்பிநீலத்தூரிதான்
முறுத்தலாகிரிமூதண்டச்சிந்திச்சி
நறுத்தகவூமத்தைநாட்டியநாமமே. (௮௱௪)

பொன்னூமத்தை.

பொங்குசடைச்சிப்பொன்னிறபுஷ்பி
எங்குமேமத்தியேமத்ததூரிதான்

தங்கியசிங்கமுகம்போலத்தான்காய்ச்சி
நங்கியபொன்னூமத்தையினாமமே. (௮௯௫)

சோதிவிருட்சம்.

காட்டச்சோதிகடுந்தீபச்சோதிதான்
நீட்டச்சோதிநேரண்டசோதியாந்
தோட்டச்சோதிகொடிமலைச்சோதியாம்
ஆட்டச்சோதியாமம்மரப்பேருமே. (௮௯௬)

நச்சுப்புல்லு.

சாந்தசெந்தெற்பைதனிமூலஞ்சிவப்பிதான்
சேந்தமலைச்சித்திரள்சோதியென்னும்பேர்
ஆய்ந்தவிருட்சத்தியாவுண்ணக்கொல்லிதான்
நாந்தெனநச்சாம்புல்லினாமமே. (௮௯௭)

சுணங்கவிருட்சம்.

சொல்லுநாய்க்குட்டிசூழக்குலைச்சிதான்
வெல்லுஞ்சுவானமேதினிவிருட்சம்
நல்லுங்குலச்சிநற்பால்முலைச்சிதான்
தலலுஞ்சுணங்கமர்ந்தனவிருட்சப்பேரே. (௮௯௮)

எருமைவிருட்சம்

மேதினிவிருட்சம்மெய்க்கடாவிருட்சம்
சாதகப்பாவிதாயாமெருமைதான்
ஓதகக்காலியுறுசக்கனைச்சாளாம்
தேகவெருமைக்கண்மரப்பேருமே. (௮௯௯)

செந்தாடுபாவை.

சிவந்தநிறத்திசேலொத்தபாலிதான்
தவந்தகுழச்சிசாதிலிங்கத்தியாம்
உவந்தகொடிச்சிவொருகோடிசித்தியாம்
பவந்தசெந்தாடுபாவையினாமமே. (௯௦௦)

உரோமவிருக்ஷம்.

ரோமச்சுருளிநோக்குடற்சல்லியாம்
தாமந்தியிற்றுன்சுருநாழியாங்

காமங்குண்டலிகடுமயிர்ச்தொங்கலி
நாமமாமுரோமவிருக்ஷத்துக்காகுமே. (௮௭௧)

சாயாவிருக்ஷம்.

போகாநிழலியாம்புண்ணியவந்தரி
தாகாரவியாள்சாயாதேவிதான்
வாகரம்நிலைத்தவள்வளமுறுமொழியாள்
சாகாவிதியாள்சாயாவிருக்ஷமே. (௮௭௨)

முண்டணிவிருக்ஷம்.

முண்டனிகண்டிமுழுமரக்காடுதான்
கண்டனிமொட்டச்சிகடுங்கோபக்கன்னியாம்
பண்டினிபாலிபரியநல்வேதிச்சி
விண்டினிமுண்டமாம்விருக்ஷத்தின்பேரே. (௮௭௩)

கருநெல்லி.

ஆகியபிறங்கியருநெல்லிரீலிதான்
வாகியமேகம்போல்வளர்ந்தநிறத்தியாம்
தாகியகாயம்க்ஷணத்திலேபேதிச்சி
நாகியகருநெல்லிநாமமுமாமே. (௮௭௪)

கற்றாமரை.

கல்லரவிந்தங்கரியமால்நேத்திரம்
நில்லாதகற்பூநீரிலாத்தாமரை
தல்லாசகஸ்திரந்தனிக்கோட்டுபுஷ்பமாம்
நல்லாகக்கல்லினற்றாமரையிதே. (௮௭௫)

கல்லாரை.

கல்முகப்பிரமங்கடியநால்வேதியன்
செல்முகக்காந்தைசிறுமலைக்குறத்திதான்
வெல்முகக்கிழவிவேண்டுகோட்டத்திதான்
நல்முகக்கல்லினல்லாரைப்பேரே. (௮௭௬)

கற்செம்பு.

குவடுறுசெப்புகொடுமலைப்பறைச்சிதான்
தவடுறுசாமைதாதகப்பரங்கியாம்

நிவடுறுகனை ÷ நெடியமாதங்கி
நவடுறுகல்லின்நலமானபேரே. (௮௰௭)

கல்லாணி.

கல்விஷக்கரந்தைக்கடுஞ்செம்புகருதீதான்
சொல்விஷக்குவடுசொற்பெருஞ்சுங்கரி
மல்விஷக்காளிமாலிங்கவாசினி
அல்விஷக்கல்லுக்கருளியநாமமே. (௮௰௮)

மூவிலைக்குருந்தம்

கருநிலக்குருந்துகடுவிஷக்கிழங்குதான்
வருநிலசூலம்வச்சிரக்குருந்தாம்
தருநிலக்கிழவிதனிச்சூகவையிரியாம்
குருநில்மூவிலைக்குருந்திநாகமே. (௮௰௯)

கருநொச்சி.

கோபிகருப்பிகொடியநற்குண்ணி
தாதசடைச்சிசட்டையைநீக்கி
ஓபிகருப்பிவுக்கிரமாசத்தி
காபிநற்சித்திகருநொச்சிப்பெயரே. (௯௰)

கொடிவேலி.

காவிகருப்பிகருஞ்சித்திரமூலம்
ஆவிக்கனலியாதிமகாமூலி
சேவிச்சிலைமணச்சிசேக்தடல்வேதிச்சி
நேவித்தகன்னிநேர்கொடிவேலியே. (௯௰௧)

முத்தெருக்கஞ்செவியம்.

எழுத்தாணிப்பூடுவெழுந்தகதிர்தான்
வழுக்காதபூமியில்வாசித்தப்பத்திரி
அழுத்த'தகாமிவாசைக்குடோரியாம்
நழுத்தாமுத்தெருக்கின்நலமானநாமமே. (௯௰௨)

செந்திரா,

கசந்தகொடிச்சிகானச்சிவப்பிதான்
அசந்தவனலியாமாயாசக்கட்டிச்சி

அசந்தகுடிச்சிவருகனல்நாசனி
திசந்தனற்செம்பின்செந்திராயின்பேரே. (௮௮௩)

## செவ்வகத்தி.

ஆகுமசியவாளழகுசிவப்பிதான்
தாகும்பெரிச்சிசந்திரன்றங்கச்சி
தோகுங்குணலிதுவாதேசபத்திரி
பாகுஞ்செவ்வகத்திப்பரிவானநாமமே. (௮௮௪)

## செம்பலிப்பூண்டு.

பாங்குச்சிகப்பிபயிரையெரிப்பவள்
ஓங்குங்குடிலிஓவிதநாசினி
வாய்குஞ்செறுமிமாரசபங்தனி
தாங்குநற்செம்பல்லிதன்னிநாமமே. (௮௮௫)

## நீலச்சோதி.

நீலங்காளிநேர்சகக்கன்னியாம்
ஆலக்கண்டனியழகாங்கநப்பிதான்
கோலக்குடிவிகொடிதானகற்பத்தி
நூலமாம்நீலப்போசோதியினமமே. (௮௮௬)

## முள்குதக்காளி.

காகமாசிகடுக்குட்டத்தாளிதான்
வேகவேசிவெண் ணலாற்றியாம்
பாகமோகினிபாலனைக்காத்தவள்
தாகமுளகாகுந்தக்காளிநாமமே. (௮௮௭)

) [மயில்] சங்கரனுகன்றனேறுவாகனன்
நங்காகக்காட்டில்நலத்தஞ்சுவர்ணத்தான்
பொங்காகக்கண்ணன்புகழ்நாகச்சத்துரு
நங்காகலின்னுமம்நன்மயிலின்பேரே. (௮௮௮)

## கோழி.

குமரக்கொடியோன்குக்கிடராசன்தான்
அமருமெஞ்ஞானியரசனுக்கொற்றவன்
சமருக்குடையோன்சாகசவீரனும்
சமமாகக்கோழிக்குச்சாற்றியநாமமே. (௮௮௯)

### கெருடன்.

அமூர்தச்சடத்தோனும்பக்ஷராசன்
குமூர்தத்திருமால்கொள்கியவாகனம்
ஒமூர்தச்சற்பத்துக்கோங்கியசத்துரு
தமூர்தக்கெருடன்தன்னுடனுமமே. (௮௯௰)

### தாகம்.

பட்சிப்பறையன்பாவைக்குவீசன்தான்
முட்சிக்கொடியோன்மூநிசனிவாகனன்
தட்சிக்கருமுகிற்றனுகும்வாசந்தான்
கட்சியினமங்காக்கையின்பேருமே. (௮௯௧)

### முதலை.

மகரிமவாங்கிமடுவுக்குநாயகி
தகரியதண்டிச்சிதாஞ்சிதாஞ்சிதாஞ்சிறுபக்ஷணி
விகரியிரவில்விருமலந்திண்ணிதான்
முகரியநாமங்கள்முதலையின்பேருமே. (௮௯௨)

### ஆமை.

கடலைச்சிறிக்கிடுகடுவெட்டசக்கரி
உடலிற்றியானியுத்தமயோகிதான்
படியிற்பரிசனம்படுமுன்னொடுங்கியாம்
அடலிற்றநாமமாமையின்பேருமே. (௮௯௩)

### செம்பொத்து.

சிவந்தகண்ணன்செம்புதைவாசிலான்
தவந்தநடையோன்சண்டாளப்போத்தாங்
கதந்தசிறகோன்கடியசெம்மேனியன்
நவந்தசெம்போத்துக்குநாடியநாமமே (௮௯௪)

### தாரா.

அன்னநடைச்சியழகுள்ளபேடைதான்
கன்னக்குளத்திற்களித்தாடுங்கன்னியாம்
பன்னச்சிறகிபருந்ததைத்தின்பவள்
தன்னொத்தநாமங்கள்தாராவின்பேருமே (௮௯௫)

### ஊர்க்குருவி.

பட்டணவாசிபறவைச்சிறுக்கிதான்
கட்டணக்குந்திகடுங்கிரககவாசினி

அட்டணசிவனடைக்கலக்குருவியாம்
நட்டணவூரில்நலத்தகுருவியே. (௮௬௬)

## ஊர்வம்.

### அளங்கு.

சில்லுச்சிடச்சிசிறுமலைவாசியாம்
மல்லுச்சுருளிமாட்டெருத்திண்ணியாம்
கல்லுப்புனைதச்சிகடுவச்சிரதேகிதான்
அல்லுற்றநாமமளங்குடபேருமே. (௮௬௭)

### உடும்பு.

வானகச்சூலிமலைமேற்கரட்டோனன்
கானகக்குன்றில்கடுங்குகைவாசினி
ஆனகத்தானுக்குவாஞனசத்திதான்
ஓனகநாமமுடும்பினிடபேருமே. (௮௬௮)

### கருநாகம்.

சிவன்கைக்குக்கங்கணம்சேர்சிவனுசனம்
தவங்கைகால்மெத்ததக்ஷன்கார்க்கோடன்
உலங்கைக்குப்பூணியுறுதிமகாவாணி
கவங்கைக்குநாமங்கருநாகப்பேருமே. (௮௬௯)

### கல்லாமை.

தாங்கியகற்குகைகாமோதரனுமாம்
வாங்கியபஞ்சவரியவாரணத்தோன்
ஓங்கியகரடனுருண்டவடிவனும்
காங்கியயென்பார்கல்லாமைப்பேருமே. (௮௭௦)

### கட்டெறும்பு.

மருவிச்சிறியோன்மாபலமுள்ளவன்
கருவிக்கடுத்துவான்கலிக்கும்நடுமேணி
தருவிச்சுனையேதன்னினக்குரியவன்
கருவியகட்டெறும்பினுமமே. (௮௭௧)

### பூநாகம்.

பூமிநரம்புபுதுக்குளப்புத்துவாம்
காடிசஞ்சீவிகடுநாமமட்சயம்

சோமிசுடர்க்கொடிசொற்பூமிநாதமாம்
தாமியநாக்குத்தன்னுகப்பேருமே. (கூ௱உ)

### இந்திரகோபம்.

மேகத்தின்விந்துவிளங்குமன்ழத்துளி
தாகத்தின்மின்னலின்றன்னிடநாதமாம்
நாகத்தின்வர்ணம்நல்லிந்திரகோபமாம்
பாகத்தினட்சயம்பாருஞ்சஞ்சீவியே. (கூ௱௩)

### விருத்தம்.

பாடினேன்மூலிகையின்சாதியெல்லாம்
  பறப்பினமுமூர்வினமும்பகுத்துச்சொன்னேன்
நாடினேனூற்ருேடுவேமுஞ்சொன்னேன்
  நலமாகக்கற்பத்துக்கெடுத்தமூலி
தேடினேனண்டத்திற்சாத்திரங்களெல்லாந்
  திறமாகவென்னூல்போற்செப்பக்காணேன்
ஓடினேனேமைந்தாமலைகள்தோறும்
  உற்றுப்பார்நூல்களெல்லாமொளிப்புதானே. (கூ௱௪)

### வேறு.

### வராகத்தின்போக்கு.

முதிர்ந்தவராகம்முன்னுன்வரணடித்து
எதிர்ந்தேபிடித்துயிரையின்றிமூன்றுநாள்
பதுங்கேவதைத்துப்பருவமாய்க்கொப்புளில்
அதிர்ந்தேகிழித்துவதில்வைக்கக்கேளுமே. (கூ௱௫)

கேளுமேதாளகங்கெடியாகப்பாய்ச்சிட
ஆளுமேயிருபத்தஞ்சுபலமது
நாளுமேகெந்தகம்நாட்டுப்பலம்பத்து
தாளுமனேசிலைத்தானும்பலம்பத்தே. (கூ௱௬)

பத்துக்கெவுரிபாங்காய்ப்பலமெட்டு
ஒத்துக்கபரியுடனேபலமைந்து
நத்துநற்சூதம்நாட்டுப்பலமைந்து
மத்தித்திவையெல்லாம்வெளமாய்ப்பொடிசெய்யே. ().

பொடியையெரித்துப்புசமாய்வராகத்தில்
அடியமேலதொப்பளிலறுத்தே துணித்ததை
கொடியமேவதைத்துநேராகக்கட்டி
மடியமேபாண்டத்தில்வளமாகவைத்திடே (௯௱௮)

வைத்திட்டுப்பூமியில்வாசலும்நால்விட்டுக்
கைக்கிட்டுச்சூழவேகாறைசுறிக்கிட்டு
ஒத்திட்டுவாசலிலோடியேயீப்புக்கி
மொய்த்திட்டுநாறிமிழப்புழுவாகுமே. (௯௱௯)

ஆகும்புழுத்தானடவாகப்பொன்னிறம்
வாகுமேமோநாலுவாசலிமேல்வரும்
பாகுமேநித்தம்பதருதெடுத்திடு
ஓகுமேயெல்லாமூறுநாளெடுத்திடே. (௯௱௰)

## வராகத்தயிலம்.

எடுத்தப்புழுவையியல்பாயுருக்கி
மடுத்தத்தயிலமாம்வாங்கிடுபீங்கானில்
சுடுத்ததுரிசிகடுஞ்சுன்னங்காசிடை
அடுத்தசவ்வீரமதுரெண்டுங்காசிடே. (௯௱௰௧)

காசிடையொன்றாகடுந்தங்கச்சுன்னமும்
ஓசிடமூன்றுமுறுகப்பொடிசெய்து
தூசிடக்கொட்டித்துழாவித்தயிலத்தில்
வாசிடைமூவக்துவாமத்தைப்பூசியே (௯௱௰௨)

பூசிக்கவாதம்போகாதுசித்தியாம்
பூசிக்கக்காயம்புகழாகச்சித்தியாம்
பூசிக்கவாசிபோக்கொடுமேலோடும்
பூசிக்காமாண்பர்க்குப்பொய்யாகும்வாதமே (௯௱௰௩)

வாதத்தினோடேமோகாயச்சித்தியும்
போதித்தபேரும்புகழ்நூல்கொடுத்தோரும்
வேதத்தின்வாக்கியம்வெறுப்புற்றவர்மனம்
காதத்தில்வாதங்கடந்துபொய்யாகுமே (௯௱௰௪)

கேள் வராகத்தயிலத்தில் நவலோகவேதை
ஆகுந்தயிலத்தடவாணவேதைகேள்
வாகும்ரவிதான்வளமாய்ப்பலம்ரெண்டு

தாகுமேநின்றுதானேயறுகையில்
பாகுமேதயிலம்பாச்சொருதுள்ளியே (௬௰௫)

துள்ளியைவாங்கச்சூழ்மாத்தப்பனிரெண்டாம்
தெள்ளியேயிப்படிசெலுத்தநவலோகம்
ஒள்ளியமாத்தாகுமோடாதுவ்ப்புக்கு
அள்ளியவித்தையாடும்வராகமே. (௬௰௬)

வராகத்தின்காலைவளமாய்த்தறித்திட்டு
தராகத்தின்சூதம்தானதிலைவார்த்து
ஓராகத்தயிலமொருதுளியேகுத்தி
நிராகத்தசீலைமண்ணேராகச்செய்திடே. (௬௰௭)

செய்துப்புடம்போடச்செயமாகுஞ்சூதந்தா
கைதிடுஞ்சூதத்தைகாணவுருக்கிடு
நைதிடுஞ்சூதம்நலமாய்ப்பலமொன்றில்
பைதிடும்நாகம்பாசாசாய்ம்பலம்ரெண்டே. (௬௰௮)

ரெண்டுமுருகையில்நேர்காசிடைதங்கம்
ஒன்றுகொடுத்துவுருக்கியேவாங்கி
பண்டுவிடைக்கெல்லாம்பாய்ச்சியேகெந்தகம்
மண்டும்பொடிசெய்துமாட்டிடுகுப்பியே. (௬௰௯)

ஷெ நவலோகவேதையிற்சூதகட்டுச்செந்தூரம்

குப்பியைவாலுகைக்கூட்டியெரித்திடு
ஒப்பியசெந்தூரமுருகும்பதம்பாரு
ஒப்பியவாயிரத்தொன்றிடுவான்பதில்
தப்பியமாத்துத்தான்பதினைஞ்சுமே. (௭௰)

இதுவும்மேற்படிதயிலத்தில்.

பாஷாணச்சத்து.

அஞ்சுமேபாஷாணமறுபத்துநாலுக்கு
மிஞ்சுமேதயிலம்விளம்பச்சுருக்கிடு
கெஞ்சுமேசத்துகெடியாகக்கட்டுண்ணும்
தஞ்சுமேநூற்றொன்றுத்தாக்கிடாயொன்பதே. (௭௰௧)

ஒன்பதுலோகமுமோங்கிப்பசும்பொன்னும்
வன்பதுமில்லைமகாலகுவித்தைதான்

தின்பதுக்காகாதுசெய்தொழிற்காணுது
நன்பதுவேதைநாட்டினவாறுமே. (௬௨௨)

விருத்தம்.

பண்ணியென்றவராகத்திற் ருெழிலேசொன்னேன்
. பார்ப்பவற்குவெகுவெகுதான்பதம்பொய்யாது
புண்ணியமாம்புருஷருக்குவாதசித்தி
பொல்லாததுரோகிக்குப் பொய்யாய்ப்போகும்
நண்ணியதோரென்னூலக்கொடுத்தோர்பாதம்
நலமாகத்தொழுதிடவேயெல்லாஞ்சித்தி
கண்ணியவர்மனம்நொந்தாலொன்றுமில்லை
கவனித்தேசுந்தராகண்டுபாரே. (௬௨௩)

வேறு.

உபரசமானவொருநூற்றிருபதும்
தபரசம்பாஷாணந்தானுமறுபதும்
நவரசத்தோடேநலமாயுறவாக்கி
சிவரசச்சிலசரிசெப்புறேன்கேளுமே. (௬௨௪)

காந்தகத்துக்கிண்ணியில்,

செலசரிவிதம்.

கேளும்நீகாந்தங்கொடியாகச்சத்தோடு
வாளும்நீவட்டிலைப்போலேயதைப்பண்ணு
நாளும்நீமையம்நடுவேவரையிட்டு
ஆளும்நீயப்பிரகச்சத்தினுற்கிண்ணியே. (௬௨௫)

கிண்ணிநடைந்துகெடியாம்வரைக்குள்ளே
ஒண்ணியேதாக்குவுருகச்சிமிள்போலே
நண்ணியேமேலேநலமாய்மெழுகுசெய்
தண்ணியும்பூதாதுதான்செலயோகமே, (௬௨௬)

பூநாகச்செந்தூரம்.

செலசரிக்குள்ளேசெலுத்தமருந்துதேள்
பிலசரிபூநாகச்சத்தொருகாசிடை

நலசரிநாகமும்நாட்டொருகாசிடை
சலசரிசூதமுங்காட்டொருகாசுமே. (௯௨௭)

காசிடைரெண்டுகடியமனோசிலை
ஓசிடச்சத்தாயுறவாங்கிநீபோடு
மாசிடத்தங்கமாட்டொருவாசுசான்
தாசிடவெல்லாந்தவளவரைத்திடே. (௯௨௮)

அரைத்தபொடியையடவாகநீகேளு
விரைத்தநற்பொற்றலைசாறதுவிட்டரை
திரைத்தெல்லுபோலச்செய்தேயுலர்த்திடு
நரைத்தவில்லைத்துநற்கிண்ணிமூடுமே. (௯௨௯)

மூடியேதீபமுதிரக்கீழ்வைத்திடு
நாடியேரெண்டுநாள்நலமாகப்பார்த்திடு
தேடியேசெந்தூரந்திறமாய்ச்சிவந்திடும்
ஓடியேவொன்பதிலோரைஞ்சுநூற்றிடே. (௯௩௰)

இட்டிடமாத்துவியல்பாய்ப்பதின்மூன்று
நட்டியவேதைநாடியேமோடிடும்
பட்டிடலோகம்பரிசைபேதித்திடும்
தெட்டிடச்சிலசரிசெய்யுந்திறமிதே. (௯௩௧)

கெந்தகச்சத்துக்களுங்குவேதை.

திறமானகெந்தகச்சத்தொருகாசிடை
திறமானகாரீயம்நேரொருகாசிடை
அறமானதங்கமதுவரைகாசிடை
உறமானமாகவொத்தவுருக்கிடே (௯௩௨)

உருக்கிநொறுக்கிவுறவிடுஞ்சூதங்கேள்
தருக்கியரெண்டுகாசிடைதான்சூதம்
பருக்கியதாளகம்பாச்சுமுக்காசிடை
நெருக்கியேபொற்றலைச்சாற்றிலரைத்திடே. (௯௩௩)

அரைத்ததைத்தெல்லுப்போலடவாகவில்லைசெய்
திரைத்ததைவெயிலில்திறமாகக்காயவை
நிரைத்தையுள்வைத்துநேர்கிண்ணிமூடியே
சுரைத்தநற்றீபமுஞ்சூட்டிசெய்வார்த்திடே. (௯௩௪)

வார்த்திட்டுமூன்றுநாள்வளமாயெரிக்கையில்
கோர்த்திட்டதாலத்தில்குமுறவேநீர்விடு.

வர்த்திட்டபூசையீசானத்தேசெய்யும்
மார்த்திட்டமுள்ளேமகத்தாங்களங்கியதே. ௯௰௫

களங்கையெடுத்துக்காட்டொருநூற்றொன்றில்
அளங்கியவொன்பதிலேயிரண்டுமோத்தாகும்
தளங்கியவேதைசலியாதுவுப்புக்கு
நளங்கியசெலசரிநற்றொழிற்காணுமே. ௯௰௬

## அப்பிரகச்சத்துச்செந்தூரம்.

காணுமேவப்பிரகச்சத்தொருகாசிடைய்
பூணுமேசூதம்புகழாகக்காசிடை
தாணுமேசூதம்சூட்டுக்கார்மாசிடைய
நாணுமிருகாசுநாட்டிடுகெந்தியே. ௯௰௭

கெந்தியினோடேகெடியாயிதுவெல்லாம்
பொந்தியவைப்பாய்ப்பொற்றலைச்சாற்றிலே
பந்தியவில்லையாய்ப்பாங்காய்ப்பிடித்திட்டு
சந்திச்செலசரியாட்டுசெந்தூரமே. ௯௰௮

ஆட்டுசெந்தூரத்தையஞ்ஞாறுலோகத்தில்
பூட்டுநூற்றொன்றுபுகழ்பத்துமாற்றாகும்
நாட்டுதினங்குன்றிநலமாகக்கொணடிடில்
தீட்டியகாயம்திறமாகச்சித்தியே. ௯௰௯

## காந்தசத்துச்செந்தூரம்.

சித்தியாங்காந்தகச்சத்தொருகாசிடை
பத்தியாம்நாகம்பாச்சொருகாசிடை
மத்தியாந்தங்கம்மாட்டுகாற்காசிடை
யத்தியாமனோசிலையதுரெண்டுகாசிடே. ௱

இட்டுவைப்பாயியல்வேளைச்சாற்றிலே
மட்டுவருட்டிமருவவேநெல்லுப்போல்
நட்டுவுருட்டிநலமானகாலத்தில்
உருட்டியேமூடியுருகமெழுகிடே. ௱௧

இட்டேகீழ்த்திபமேத்தியேமூன்றுநாள்
பட்டேசெலத்தைப்பருவமாம்வார்த்துவா

கட்டேயிடுநெல்லுகடுகப்பொரிந்தபின்
பட்டேசெந்தூரம்பவழமாமே. ௬௪௨

ஆகுமேசெந்தூரமன்பதுக்கொன்றிடு
தாகுமேமாத்துத்தானெட்டுத்தப்பாது
வாகுமேசித்தம்வளம்பெறக்குறியுண்
பாகுமேதேகம்பளிச்சென்னுங்கற்பமே. ௬௪௩

## மயூரகத்துச்செந்தூரம்.

கற்பமயூரங்கடுகியேசத்தெடு
நற்பவிதிலேநலக்கொருகாசெடு
அற்பரசந்தநாட்டொருகாசிடை
விற்பநற்றங்கம்விரைந்துகாற்காசிடே. ௬௪௪

இட்டேநல்கெந்தியிடுரெண்டுகாசிடை
மட்டேயிதெல்லாம்வார்த்தரைபோற்றலே
கட்டேயுருட்டிக்கடுங்கெள்ளுப்போற்செய்து
தொட்டேஜெலசரிசூட்டியேவைத்திடே. ௬௪௫

வைத்திடுதீபம்மருவிடுமூன்றுநாள்
நைத்திடுவுள்ளேநலமாய்ச்சிவந்திடும்
அத்திடவேணதயன்னூற்றுக்கொன்றிடு
மைத்திடுமூவைந்துமாத்தாகுங்காணுமே. ௬௪௬

காணுமேசெந்தூரங்கைமுறைகுன்றிதான்
பூணுமேகொள்ளுபுகழொருமண்டலம்
ஊணுமேமேனிவொளிவாமையில்போலத்
தோணுமேசித்திசொரூபத்தைக்காட்டுமே. ௬௪௭

## தாளகச்சத்துச்செந்தூரம்.

காட்டுமேதாளகச்சத்தொருகாசிடை
நீட்டுமேகாரீயம்நேரொறுகாசிடை
ஊட்டுமேநாகமுறவொருகாசிடை
பூட்டுமேசூதம்புகழாகக்கூசுமே. ௬௪௮

காசுமேரெண்டிடைகலப்பாயிதிற்கெந்தி
வாசுமேதாம்பூலச்சார்வார்த்தகையிடி

ஒசுமேதெல்லுப்போலுருட்டியுலர்த்திடு
கூசுமேஜலசரிகூட்டிநீவைத்திடே. ௯௪௯

வைத்திடுதீபம்மருவத்தினம்ரெண்டு
நைத்திடுயீசானம்நாட்டிடுபூசையே
கொத்திடவுள்ளேகுமுறிச்செந்தூரமாம்
புத்திடவொன்பதிற்பாய்ச்சிடுநூற்றுண்ணே. ௯௫௰

கபரிசத்துச்செந்தூரம்.

ஒண்ணுங்கபரியுறசத்துக்காசிடை
பண்ணுனபாலரசமொருகாசிடை
துண்ணுனதங்கந்தானோர்பணம்ரெண்டு
மண்ணுனமுக்காசுமனோசிலையாட்டிடே. ௯௫௧

மாட்டியரைத்திடுமத்தையின்சாற்றினால்
நீட்டியுருட்டிநேராகத்தெல்லுப்போல்
ஓட்டிச்சிலசரிக்குள்வைத்துமூடியே
காட்டியேமூன்றுநாள்கடுந்தீபம்வைத்திடே. ௯௫௨

வைத்திடவுள்ளேவளமாய்ச்செந்தூரிக்கும்
ஒய்த்திடவாயிரத்தொன்றிடுவொன்பதில்
நைத்திடமாத்துநாலஞ்சிருபதாம்
பைத்திடவேதைபணவேதையாகுமே. ௯௫௩

நிமிளைசத்துச்செந்தூரம்.

ஆகும்நிமிளையதனிடசத்திலே
வாகுமோர்காசிடைவளமாயெடுத்திடு
தாகுமோர்சூதமும்தானொருகாசிடை
பாகுமோர்தங்கமபணமூன்றுபாச்சிடே. ௯௫௪

பாச்சுமுக்காசிடைப்பரிவாமனோசிலை
ஓச்சுநற்றும்பூலச்சாறதுவுறவரை
ஆச்சுநல்வில்லையாயடவாயுலர்த்திடு
மூச்சுச்செலசரிக்குள்வைத்துமூடுமே. ௯௫௫

மூடியேதீபம்மூன்றுநாள்வைத்திடு
நாடியேதாருநலத்தசெந்தூரமாம்

ஓடியேயொன்பதிலோரஞ்சிநூற்றதில்
ஆடியமாத்துவைம்மூன் றுகாணுமே. ௯௫௬

## இந்திரகோபசத்துச்செந்தூரம்.

காணுமேயிந்திரகோபமாஞ்சத்திலே
பூணுமேகாசிடைப்புகழாய்நிறுத்திட்டு
ஓணுமேசூதமொருகாசிடைகூட்டு
பாணுமேதங்கம்பணவிடைபாச்சுமே. ௯௫௭

பாச்சிடுகெந்திபரிவாய்முக்காசிடை
ஓச்சிடப்பொற்றலைச்சாற்றிலுறவணை
ஆச்சிடவில்லையாயடவாயுலர்த்திடு
மூச்சிடச்சிலசரிக்குள்வைத்துமூடிடே. ௯௫௮

மூடியேமூன்றுநாள்முதிரவைதீபத்தை
நாடியேதண்ணீர்நலமாயிறைத்துவார்
ஊடியேவுள்ளேவுருகுஞ்செந்தூரமாம்
ஆடியேயொன்பதிலஞ்ஞூற்றுக்கொன்றிடே. ௯௫௯

இட்டசெந்தூரமிதமாய்த்தினங்குன்றி
மட்டாகமணடலம்வாங்கிடுதேனிலே
கட்டானமேனிகாணிந்திரகோபமாம்
தொட்டானசித்தியாம்சொன்மாத்திருபதே. ௯௬௰

## சித்தண்டோடுசத்துச்செந்தூரம்.

இருபது போனபின்னியல்பானவண்டோடு
வருவதுசத்தாய்வாங்கியேகாசிடை
தருவதுசூதந்தானொருகாசிடை
உருவதுதங்கமொருபணந்தூக்கே. ௯௬௧

தூக்கிடுநாகஞ்சூழவோர்காசிடை
தாக்கிடுகெந்தகந்த னுரூக்காசிடை
போக்கிடுகாம்பூலச்சாற்றூர்புகழ்ந்தாளை
வாக்கிடுவில்லையாய்வளமாய்யுலர்த்திடே. ௯௬௨

மலத்திட்டவில்லையையூட்டச்சிலசரி
உலத்திட்டதீபம்வைததிடுமூன்றுநாள்

பிலத்திட்டுவுள்ளேபேராய்ச்செந்தூரிக்கும்
கலத்திட்டவொன்பதிற்காட்டுநூற்றெண்ணுமே. ௧௬௩

ஒண்ணிடமாத்துவோர்பத்துக்கண்டிடும்
நண்ணிடக்குன்றிநல்கிடமண்டலம்
பண்ணிடகாயம்பரிசிடவேதையாம்
